
ஞானச்சுடர்
பங்குனி
2018
சந்நிதியான் ஆச்சிரமம்
243 ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி.

**பொருள்:** அருளுடையவர்களுக்குத் துன்பம் இல்லை; காற்று இயங்கு கின்ற செழிப்புடைய பெரிய உலகில் வாழ்வாரே இதற்குச் சாட்சியாவார். (245)


பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அணிநீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

**பொருள்:** கருணைக் குணமில்லாதவராய் கொடுமைகளைச் செய்து வாழ்வார் உறுதிப்பொருளை விட்டுத் தமக்கு வரப்போகும் துன்பத்தையும் மறந்தவராவர். (246)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே
### ஆன்மா நீ



சிந்தனைக் கெட்டாத தெய்வத்தை நாம்நிதமும்
வந்தனை செய்து வணங்குவோம் – பந்தமுண்டு
முத்தியுண் டென்று முனைத்துநில் லாமலே
நித்தியனா மென்றே நினை 04

தன்னை யறியத் தனக்கொருகே டில்லையென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால் -- தென்னைபனை
சேரிலங்கை வாழுஞ் சிவநேயச் செல்வர்காள்!
தேரீரிச் சீவன் சிவன் 05

தெரிந்து செயலாற்றுந் தீரர்களே நல்ல
விரிந்த அறிவுள்ள மேலோர் – திரிந்து
மதியிழந்து வாடாமல் மாணடியை யென்றும்
துதிமனமே சொன்னேன் வெற்றி 06

வெற்றிதரும் வேண்டியன வெல்லாந் தருமனமே
பத்தியுடன் பாடிப் பணிசெய்வாய் – சித்தத்தில்
ஆனந்தம் பொங்கும் அதுவே நானென்று
தியானஞ்செய் சீவன் சிவன் 07

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 243

2018 பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| புலனடக்கமும் ஞானமும் | இ. சிவராசா | 01 -06 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 07 -10 |
| இயற்கையும் இறைவனும் | இ. ஜெயபாலன் | 11 -12 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 13 -17 |
| பசுவை வளர்ப்போம்... | செ. கந்தசத்தியதாசன் | 18 -22 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 23 -26 |
| எமது சமுதாய வளர்ச்சிக்கு... | பு. கதிரித்தம்பி | 27 -28 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 29 -30 |
| அமரர் கந்தையா நீலகண்டன் | கு. சோமசுந்தரம் | 31 -32 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 33 -34 |
| உண்மைக் காதலும் வாழ்வும் | திருமதி ந. பரமேஸ்வரி | 35 -36 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 37 -38 |
| வேதத்தின் இருதயம்... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 39 -40 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 41 -42 |
| குலதெய்வ வழிபாடு | திருமதி செல்வக்காந்திமதி | 43 -45 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 46 -50 |
| மாணவர் கௌரவிப்பு விழா | வல்வையூர் அப்பாண்ணா | 51 -59 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 60 -63 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 64 -66 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 242ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய ஆசிரியையும் பேரவையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குபவருமான திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் தமது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றிவருகின்ற பணிகளின் மகத்துவம் பற்றிக் கூறியதோடு ஞானச்சுடர் மலர் வெளியீடுபற்றி பலவிதமான கருத்துக்களை வழங்கி இருந்தார். அவற்றில் தற்கால இளைஞர்களை வழிப்படுத்தும் ஆக்கங்கள் மலரில் இடம்பெற வேண்டும் என்றதோடு அவையுள் அடங்கி இருக்கும் பொருள் பொதிந்த கருத்துக்கள் இளைஞர் மத்தியில் போய்ச் சேரவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். அதற்கமைவாக சுவாமி விவேகானந்தர், ரமணமகரிஷி, போகர் சுவாமிகளின் வரலாற்றில் இடம்பெற்ற பலவித அறக்கருத்துக்களை சபையில் உள்ளவர்களைக் கவரக்கூடியதாகக் கூறியிருந்தார்.

இறுதியாக வருடாவருடம் மாசிமாத மலர்வெளியீட்டின்போது தவறாது கலந்து சந்நிதி வேலவனையும் வழிபட இம்மலர் வெளியீடு வழிவகுக்கின்றது என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

மாசிமாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தமது ஆரம்ப உரையின்மூலம் ஒரு ஆன்மீகம் சார்ந்த மலர், எவ்வித விளம்பரமும் அற்ற வகையில், தொடராக 242 மாத காலமாக சுமாராக இருபது வருடங்களுக்கு மேலாக அதுவும் சந்நிதி வேலவனது பேரருளுடன் வெளிவருவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அச்செயற்பாட்டில் மிளிரும் இம் மலருக்கு மதிப்புரை ஆற்றுவது பொருந்தாது எனும் கருத்தை வலியுறுத்தி, ஆனாலும் மலரில் இடம்பெற்ற ஒரு சில கட்டுரைகளின் சாரத்தை தனது கல்வி சார்ந்த அனுபவத்தின்மூலம் சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறினார்.

முதுநிலை விரிவுரையாளரும் தனது சிநேகிதியாகிய திருமதி நாச்சியார் செல்வநாயகம் வருகை தராத பட்சத்தில் கடந்த வருடமும், இந்த வருடமும் மாசி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரை ஆற்றும் பணி எனக்குக் கிடைத்தது. அதுவும் சந்நிதி வேலவனது பேரருள் என்று கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

ஒரு மக்கள் சேவையாளன் "மறைந்தார்" எனும் செய்தி வந்திருக்கிறது. வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் யா/ சிதம்பரக் கல்லூரியில் கல்வி கற்று அரசாங்க ஊழியனாகி, இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் முதல் தரமான சித்திபெற்று படிப்படியாக உயர்ந்து, பல்வேறு இடங்களிலும் கடமையாற்றி, இறுதியில் வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் செயலகத்தில் பிரதேச செயலராக உயர் பதவி வகித்து, "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டிய மாமனிதர், A.G.A ஐயா என அனைவராலும் அன்பொழுக அழைக்கப்பட்டு வந்த வ. வேலும்மயிலும் 20.03.2018இல் இறைவனடி சேர்ந்தார். அவர்களின் பெயர் விளங்க, வல்வையில் அவர் வாழ்ந்திருந்த ஒழுங்கை இன்றும் A.G.A ஒழுங்கை எனப் பெயர் பெற்றுச் சிறப்படைந்திருப்பது அவரது சேவைக்கான சான்று. தினமும் அவர் அலுவலகம் புறப்பட முன்னரே, அவர் வீட்டு வாசலில் காத்திருந்து தங்கள் தேவைகளை நிறைவு செய்த பலரும் இன்றுவரை அன்னாரை நன்றியோடு நினைவு கூருகிறார்கள்.

1987 வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன் காலத்தில்- ஒட்டுமொத்தமாக கரையோர மக்கள் நெல்லியடி- கரவெட்டிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தபோது, அவர்களுடன் தானும் ஒருவனாக இடம்மாறி, கரவெட்டி திருஇருதயக் கல்லூரிக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில், மேசை, கதிரைகள் எதுவுமற்ற பழைய வீடொன்றின் உடைந்திருந்த அந்த வீட்டுப் படியில் அமர்ந்தபடி எழுதிக் கொடுத்த கடிதங்களுடன் நிவாரணப் பொருட்களைப் பெற்றுப் பசியாறிய ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இன்றும் அந்நிகழ்வினை நினைவிற் கொண்டுள்ளனர். ***இது வடமராட்சி மக்களுக்கான அன்னாரின் பணி.***

போர்க்காலச் சூழலில் வட பகுதித் தரைவழிப் பாதை தடைப்பட்டு திருமலை- காங்கேசன் வழியான கப்பற் சேவை இடம்பெற்ற இடர் மிகுந்த நெருக்கடியான காலத்தில் திருமலை நகரசபை பிரதேச செயலாளராக இருந்து இவர் ஆற்றிய கடமை தவறாத மக்கள் பணி கண்டு அனைவரும் வியந்தனர். ***இது வடபகுதி மக்களுக்கான அன்னாரின் பணி.***

இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையில் பொது நிர்வாகச் செயலாளராகக் கடமையாற்றிய செயற்திறன் மிக்க மக்கள் சேவை மூவின மக்களின் பெரும் பாராட்டுதலைப் பெற்றது. ***இது வடக்கு – கிழக்கு மக்கள் அனைவருக்குமான பணி.***

அன்னாரது மக்கள் சேவையை மனதிற் கொண்ட சந்நிதியான் ஆச்சிரமம் 2004 வைகாசிப் பெருவிழாவின்போது திரு வ. வேலும்மயிலும் அவர்களுக்கு "**ஞான பண்டித சேவா ஜோதி**" எனும் விருது வழங்கிப் பெருமை கண்டது.

சேவைக்காலத்தில் மட்டுமல்லாமல், ஓய்வின் பின்னரும் தன்னாலான உதவிகளை ஓயாது ஆற்றிவந்த A.G.A ஐயா அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். பெருந்துயரில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்பத்தாருக்கு சந்நிதியான் ஆச்சிரமம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா இறைவன் திருப்பாதங்களில் நிரந்தரமாக இளைப்பாறவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 06. பூத வேதாள வகுப்பு

உருவ மிருளெழ வெயிறு நிலவெழ
வுலகு வெருவர வசைய வருவன
உடைய நாயகி கண்டும கிழ்ந்திட
நடைவி நோதவி தம்புரி பந்திய
ஒக்கலைவி டாதழுத ரற்றுபா லர்க்குமிக
வுச்சிவெடி யாதுநிணை மெத்தவே தப்புவன
உங்குக் கிங்குவிட் டாழி நான்கினு
மொன்றுக் கோன் றடி பாய்தல் காண்பன
யுத்தக ளத்தினில் ரத்நம ணிக்குவை
யொட்டமொ டொற்றையி ரட்டைபி டிப்பன
யோகினிக ளும்பெரிய சாகினி ளும்புதிய
மோகினிக ளும்பழைய டாகினிக ளும்புகழ
உவணநிரை கொண்டிடுஞ் செங்காவ ணத்திடையி
லுறவுகொள வந்துதம் பெண்காறை கட்டுவன
உமிழ்குருதி யாறடைப டக்குறட டுக்கியதி
லுபவனமொ ரேழையுமு றித்தருகொ முக்குவன
உடுபட லத்தை மறைத்த குறைக்கு வாலுட
லுதிரச முத்திர முற்று நிலைப்ப டாதன
ஓடைமால் வாரண யூகம டங்கலு
மோரோர்பேய் நீள்கடை வாயி லடங்குவ
உடலி னிசிசரர் மவுலி யொலியலு
முதடு மலைவன பதடி முலையின
உததி யேழும டங்கவு றிஞ்சியு
முதர வாரழ னிந்றுகொ ளுந்துவ
உக்கிரவி ராவணனெ டுத்தமே ருங்கிரியு
மொற்றியிரு தோள்கொடுப றித்திடா தப்புவன
ஒன்றித் திண்குரற் கூகை பாம்பொடு
வென்றிச் செந்தலைத் தாலி பூண்பன
ஒக்கமி டற்றி லிறக்கு குறைத்தலை
விக்கி வெளுக்க வெளுக்க விழிப்பன
யோகுபுரி யுங்குகையும் யோகபர ரும்பொருவ
ஓடைமத தந்திவயி றூடினிது றங்குவன
உசிதபிசி தங்கொணர்ந் திங்கேற விற்றுமென
மதமலையெ லும்புகொண் டங்காடி கட்டுவன
உதிரநிண வாள்பெருக வொட்டுவன வெட்டுவன
உடலினடு வூடுருவ முட்டுவன தட்டுவன
ஒழுகுபி ணத்துநி ணத்தின ளற்றி லேபமு
ஓடியவு ழக்கிவ ழுக்கி யுருட்டி வீழ்வன
ஊசலார் வார்குழை யோலை யிடும்படி
யோதுசா மீகர நேமி பிடுங்குவ:,

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

R. கிருஸ்ணசிவம்
(அவுஸ்திரேலியா)

இ. சங்கரலிங்கம்
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

இராமசாமி திருச்செல்வம்
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்- ஊரெழு)

அ. வரதராசா
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

வே. நடராசா
(தும்பளை மேற்கு)

சி. கிருஷ்ணபிள்ளை J.P.
(ஆவரங்கால்)

பொதுமுகாமையாளர்
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

பொதுமுகாமையாளர்
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

சி. குமாரலிங்கம்
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

செ.க. செல்வநாயகம்
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

திருமதி சு. செல்வக்குமார்
(மாநகரசபை, யாழ்ப்பாணம்)

அதிபர்
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

சு. சோமாஸ்கந்தமூர்த்தி
(சித்தங்கேணி)

யோ. சிவஉமாகரன்
(உயர் பட்டப்படிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

சி. கணபதிப்பிள்ளை (தலைவர்)
(இளை. பிரதேச உறுப்பினர், கரவெட்டி)
ச. தங்கராசா J.P.
(இளை. அதிபர், நீர்வேலி)
க. மணியன்
(புத்தூர்)
வ. துரைராசா
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
கு. ரங்கநாதன்
(இணுவில் தெற்கு)
க. வைத்தியநாதன்
(சுன்னாகம்)
சி. வல்லிபுரம்
(தும்பளை, பருத்தித்துறை)
சபா இரத்தினசிங்கம் J.P.
(சபா றேடர்ஸ், அச்சுவேலி)
V. பரமானந்தம்
((முன்னாள் பொது முகாமையாளர்- தொண்டைமானாறு)
K. கேதீஸ்வரநாதன்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
சு. மகேஸ்வரன்
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
தம்பிப்பிள்ளை குணரட்ணம்
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
S. திருவாஞ்சீஸ்வரன்
(V.S.K. மானிப்பாய்)
த. விவேகானந்தராசா
(டச்றோட், சித்தங்கேணி)
அ. கோணேஸ்கரன்
(தில்லையம்பதி, கோண்டாவில்)
இ. சந்திரசேகரன்
(மாசியப்புலம் வீதி, ஏழாலை)
ஜெ. ஜெயப்பிரதாப்
(சாவகச்சேரி)

சி. அழகேசன்

(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)

க. தர்மநாயகம்

(மஞ்சத்தடி, இணுவில்)

பொ. ஞானப்பிரகாசம்

(கரணவாய் தெற்கு)

உரிமையாளர்

(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)

இ. வீரசிங்கக்குருக்கள்

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

அதிபர்

(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)

அதிபர்

(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)

திருமதி சி. தருமலிங்கம்

(இமையாணன், உடுப்பிட்டி)

கனகலிங்கம் சந்திரவாசன்

(நீர்வேலி)

கி. அருள்நாதர்

(பாலாவி தெரு, பொலிகண்டி)

சறோஜினிதேவி மாணிக்கராசா

(வறாத்துப்பளை, பருத்தித்துறை)

கந்தையா காசிராசா

(குப்பிளான் தெற்கு)

மார்க்கண்டு முத்துப்பிள்ளை

(அத்தியடி, யாழ்ப்பாணம்)

திருமதி V. கௌரி

(கோயில் வீதி, நல்லூர்)

லலிதா சண்முகலிங்கம்

(திருமகள் வீதி, அரியாலை)

சி. விவேகானந்தம்

(பருத்தித்துறை)

K. பிரதீபன்
(யாழ்ப்பாணம்)
ஐ. காளிங்கநடனம்
(கொக்குவில்)
பா. சிவதர்ஷினி
(கலையகம், அல்வாய்)
க. ஜெயபாலகணேசன்
(சிறுப்பிட்டி தெற்கு)
Dr. அ. செந்தில்குமரன்
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)
இ. பாஸ்கரன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
க. சிவானந்தமூர்த்தி
(புத்தூர்)
சி. பத்மகுமார்
(இணுவில் தெற்கு)
அதிபர்
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
பா. சுதாகரன்
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி)
வ. கெங்கநாதன்
(நீர்வேலி)
P. நடராசா
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)
சி. சிவகுமார்
(ஆவரங்கால்)
S. முரளிதரன்
(அச்சுவேலி)
V. கருணாகரன்
(சங்கானை)
ச. சிவலிங்கம்
(மானிப்பாய்)
சண்முகம் தனலட்சுமி
(கரணவாய்)
வ. இரத்தினசிங்கம்
(கம்பர்மலை)

# புலனடக்கமும் ஞானமும்

– திரு இ. சிவராசா அவர்கள் –

மண்ணிலும் விண்ணிலும் நாம் காணும் அனைத்துப் பொருட்களும் பஞ்சபூதங்களின் தற்காலிகமான தோற்றப்பாடுகளேயாகும். ஓய்வின்றி ஒரு நாம ரூபத்திலிருந்து இன்னொரு ரூபத்துக்கு மாறிக்கொண்டே இருப்பவையாகும். மனித உடல் உருவாவதற்கு உறுதுணையாக விளங்கும் அணுக்களும் ஏழு ஆண்டுகளுக்கொருமுறை முழுமையாக மாற்றம் பெற்றவண்ணமிருக்கின்றன. சதா வெளிநோக்கிச்செல்லும் எமது புலன்களும் பொறிகளும் இந்த நிலையற்ற பொருட்களைத் தொற்றிக்கொண்டேயிருக்கின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் கர்மேந்திரியங்களும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஞானேந்திரியங்களும் பிரிக்கமுடியாதபடி ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. (உ+ம்) கண்ணிருந்தும் பார்வையில்லாதவர் மற்றும் செவிடர், ஊமை என்போர். இது தவிர எமது உடல் ஐந்து கோசங்களால் போர்க்கப்பட்டுள்ளது. ஊனுடல் அன்னமய கோசத்தாலானது. உடலுக்கு ஆற்றலையும் உயிரையும் வளர்த்துக்கொண்டிருப்பது பிராணமய கோசமாகும். சூக்கும உடலாகிய எமது அடிமனதுடன் தொடர்பு உடையது மனோமய கோசமாகும். அடுத்து மனோமய கோசத்திலும் நுட்பமாகவும் பகுத்தறியும் ஆற்றல் பெற்றுள்ளதும் உயர் மனதுடனும் இறை அறிவுடனும் தொடர்பு உடைய விஞ்ஞானமய கோசமாகும். இறுதியாக மேற்குறிப்பிட்ட கோசங்களைவிட மிக மிக நுட்பமாகிய ஆனந்தமய கோசம் அமைந்துள்ளது. ஆத்மாவை மறைக்கும் அறியாமையெனும் திரை இந்த இடத்தில்த்தான் உள்ளது. மேற்கூறப்பட்ட உடலுக்கு ஆதாரமான பதினைந்து தத்துவங்களுடன் உடலின் இயக்கங்களுக்கு இன்றியமையாத ஐந்து வகையான பிராணன்களும் (ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமான) முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆக, மேற்படி இருபது தத்துவங்களுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கும் சேர்ந்து இருபத்துநான்கு தத்துவங்கள் என்றும் மாறுபடாது நிலையாக விளங்கும் ஆத்மாவுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. இந்த 24 தத்துவங்களின் சேர்க்கையே மாயையாகும்.

கணத்துக்குக் கணம் நிலைமாறும் குறிப்பிட்ட தத்துவங்கள் உங்களிடம் ஆதிக்கம் செலுத்தும்போது என்றும் நிலையாக விளங்கும் ஆத்மாவை உங்களால் ஒருபோதும் புரிந்துகொள்ள இயலாது. வாழ்க்கைப் பயணத்தில் நீ அடையவேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்லும் குதிரைகளைப் போன்றவை எமது ஐம்பொறிகள். அவற்றைக் கட்டுப்படுத்தத் தவறும்போது தேரும் நீங்களும் பலவித இடர்பாடுகட்குள்ளாவதோடு சேரவேண்டிய இலக்கையும் அடையமுடியாது. உனது விவேகம் எதைத் தீர்மானிக்கின்றதோ அந்தக் கட்டளையை பொறிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அடிமனதில் தொற்றி உள்ள அற்ப ஆசைகளுக்கு அடிமைப்பட்டு புலன்களின் வழியே சென்று வாழ்பவன் அழிந்தேபோவான். விவேகத்தின் கட்டளைகளைப் பின்பற்றி உயர்மனதை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவன் பகுத்தறியும் ஆற்றல் பெற்று மானிடரில் சிறந்தவனாக விளங்குவான். புத்தியைப் பின்பற்றி செயல்

*வாய்ப்புக்காகக் காத்திருக்காதே, உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.*

ஆற்றுபவனுக்கு அவனது இறுதி இலக்கை அடையும்வரை அது வழிகாட்டியாக விளங்கும். தேகம் நீயல்ல. தேகியே நீ. அதாவது இந்தத் தேகத்தைப் பெற்றுள்ள ஆத்மாவே நீ. உனக்கு ஆரம்பமும் இல்லை. முடிவும் இல்லை. பிறப்பிறப்பென்பதும் உன்னை அணுகுவதில்லை என்று கீதையில் கண்ணன் போதிக்கின்றார். நெருப்பின் இயல்பு சூடென்பதையும் பனிக்கட்டியின் இயல்பு குளிரென்பதையும் உணர்ந்துகொண்டபின் அவை குறித்து கவலைப்படுவதில் அர்த்தமில்லை. இன்றோ என்றோ உலகப்பொருள்கள் அனைத்தும் மாறுபடுவது திண்ணம். புலன்கள் உங்கட்கு கட்டுப்படும்போது கர்மயோகம் பக்தி யோகம், ஞானயோகம் என்பவற்றில் வெகு எளிதாக தேர்ச்சிபெற்றுவிட முடியும். புலன்களை வென்றவன் வெளிமயக்கங்களால் பாதிப்படையமாட்டான். எப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் கவலையின்றி எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றவனாகின்றான்.

புலன்களை வெல்வதற்கு அடிப்படையாக முதலில் சுயநலமற்ற அன்பு, கருணை, இரக்கம், எனும் பண்புகள் கொண்ட பரந்த மனப்பான்மையை வளர்க்கவேண்டும் விரும்புகின்ற இடத்திற்கெல்லாம் அலைபாயும் மனத்தின் உதவியுடன் புலன்களை அகமுகமாக திருப்பும் கடிவாளத்தைப் பயன்படுத்த வேண்டும். பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளையோ விஷயங்களையோ பார்க்கவோ, கேட்கவோ வேண்டாம். அவ்வாறு செய்யும்போதுதான் மனதில் பதிந்துள்ள ஒன்றைப்பற்றி திரும்பச் சிந்திக்கும்போது அதன்மீது ஒருவித பற்று ஏற்பட்டு பின் அதனை அடையவேண்டும் என்ற ஆசை எழுந்து அது பின் பேராசையாக மாற்றமடைந்து விபரீதத்தில் ஆழ்த்திவிடும். ஆன்மீகப் பயிற்சி நாக்கில் ஆரம்பமாகின்றது. மற்றைய பொறிகள் நான்கும் ஒவ்வொரு ஆற்றலைப் பெற்றிருக்கும்போது நாவானது உண்ணுதல் பேசுதல் ஆகிய இரு ஆற்றல்களைப் பெற்றுள்ளது. எனவே இதைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சிதேவை. உங்களிடம் ஊடுருவி நிற்கும் பரந்த மனப்பான்மையின் புனிதத் தன்மையை வளர்த்துக் கொள்ளும் போதுதான் மற்றவர்கட்கு நற்சிந்தனைகளை அறிவுரைகளை உங்களால் கொடுத்துதவ முடியும். எல்லோரிடமும் இன்பத்தாகம் இருக்கிறதேயொழிய துன்பத்தாகம் இருப்பதில்லை. குளவிப்பருவம், இளமை, வாலிபம் என்பனவும் மாற்றமடைந்து கொண்டேயிருக்கும் பருவங்கள்தாம். குழந்தைப் பருவத்தில் வெறுப்பு, பொறாமை, கோபம் என்பவற்றால் பாதிப்படையாதிருப்பதனால் அவர்களிடம் அழகும் தெய்வீகமும் நிறைந்திருக்கின்றது. பின் காலவோட்டத்தில் சமுதாயத்தின் சகவாசத்தினால் தீய குணங்கள் நுழைந்துவிடுவதால் அழகும் மாற்றமடைந்துவிடுகிறது. பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் முகத்தில் காணப்படும் தேஜஸ் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். அவரது 86ஆவது வயதில் உடலை உகுத்த நேரத்திலும் மூன்று வயதுக் குழந்தையின் முகத்தோற்றத்தையே கொண்டிருந்தார்.

இராவணனின் சகோதரனான விபீஷணன் இராமரிடம் சரணடைந்தபோது "தனது மூத்த சகோதரனையே பகைத்துக் கொண்டு எமது பக்கம் வந்திருப்பவனை தாங்கள் நம்பக் கூடாது" என்று சுக்கிரீவன் கூறியபோது இராமர் "நீயே உனது அண்ணனாகிய வாலிக்குப் பகைவன்தானே முதலில் உனது குறைகளை அகற்ற முயல்வாயாக" என்று பதில் அளித்தார். சுவாமி! அவரது சரணாகதியை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் இலங்கையின் அரசனாக அமரவைப்பதற்கும் வாக்குறுதி அளித்துவிட்டீர்களே. இப்போ இராவணனே நேரில் வந்து தங்களிடம் சரணாகதி அடைந்தால் என் செய்வீர்கள் எனச் சுக்கிரீவன்

*நீதிபதியைவிட காலம்தான் உண்மையை வெளிக்கொணர்கிறது.*

கேட்டபோது "என் சகோதரன் பரதனை வழிவிடும்படி கேட்டு இராவணனை அயோத்தியின் அரசனாக்குவேன்'' என்றார் இராமர். அவதார புருஷர்கள் இப்படியான புனித எண்ணங்களை உலகம் உய்யும்பொருட்டு எடுத்துக்காட்டாகத் திகழும்படி வாழ்ந்து காட்டியவண்ணம் இருக்கின்றனர். புலன்களைக் கட்டுப்படுத்தி இன்ப துன்பம், வெட்ப தட்பம், மான அவமானம், முதலிய எதிர்நிலைகளை சமமாகப் பாவித்து சத்தியத்தில் நிலைபெற்றுவிட்டால் நீங்களும் ஞானியின் சிறப்பியல்புகளை பெற்றவர்கள் ஆவீர்கள். அற்பமான பொருட்கள் உங்களிடம் அற்பமான புத்தியையே வளர்க்கும். உங்களைப்பற்றி விசாரித்து அறியும் ஆற்றல் உங்களிடம் இல்லாதபோது மற்றவர்களின் அந்தரங்கங்களை புரிந்துகொள்ளும் ஆற்றல் ஏற்படுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும். முதலில் உங்கள் சொந்த வாழ்க்கையில் திருப்தி பெற முயலுங்கள் மற்றவர்களிடம் குறை காண்பதையோ தீஞ்சொற்களைப் பிரயோகிப்பதையோ தவிருங்கள் உங்கள் பொன்னான நேரத்தை நல்லவற்றை நினைப்பதிலும் பேசுவதிலும் கேட்பதிலும் செலவழியுங்கள். உங்கள் செயல்கள் அனைத்தும் ஆத்மாவுக்காக அல்லது இறைவனை மகிழ்விப்பதற்காக செய்யப்படுமானால் நீங்கள் புனிதமடைந்தவராவீர்கள்.

கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் இந்தியாவை வென்று கொள்ளையடிக்க வேண்டுமென்ற அவாவில் சிந்துநதிக் கரையோரமாக தனது படைகளுடன் அடர்ந்த கானத்தினூடு நுழைந்தான். சிறிது நேரத்தில் யோகி ஒருவர் கால்களை அகல வைத்து நடைபாதையில் படுத்திருப்பதைப் பார்த்த சிப்பாய் பாதையை விட்டு விலகி விடும்படி கட்டளையிட்டான். யோகியோ அதை அலட்சியம் செய்து அப்படியே படுத்திருந்தார். பின் அலெக்சாண்டர் அவ்விடத்தை வந்தடைந்தபோதும் யோகி அசையவேயில்லை. சினமுற்ற படைச்சிப்பாய் பாதையைவிட்டு விலகாவிடில் உனது சிரசைச் சீவிவிடுவேன் எனப் பயமுறுத்தினான். திடீரென எழுந்த யோகி கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தார். பேரொளியின் பொலிவுடன் திகழ்ந்த யோகியின் முகத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்த அலெக்சாண்டர் அவரை அணுகி "தலையைத் துண்டிக்கப்போவதாகக் கூறியதும் சிரிக்கின்றாயே ஏன்" என வினவினான். சத் சித் ஆனந்தத்தின் பிறப்பிடம் நான். என்றும் உள்ள சத்தியம் நான். விழிப்புணர்வு பெற்றவன் நான். உனது ஆயுதங்கள் என்னை எதுவும் செய்துவிடமுடியாது. நான் ஒருபோதும் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. நிலையான ஆத்மாவுக்குரிய இந்தத் தலையை உனது சிப்பாய் சீவப் போவதாக அதட்டுகிறான். அதை எண்ணும்போது எனக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்துவிட்டதென்று யோகி பதிலளித்தார். வியப்படைந்த அலெக்சாண்டர் சாவை வரவேற்று மகிழ்ச்சியாகச் சிரிப்பது அபூர்வமான செயல். சாவுக்குப் பயப்படாத உன்னத ஆன்மீக நிலையை அடைந்தவர்கள் வாழும் இந்நாட்டை நான் எவ்வாறு முற்றுகையிட முடியும் என உணர்ந்து தனது படைகளைப் பின்வாங்கிக் கொண்டான். உலக தத்துவங்களில் தூங்குபவனாகவும் ஆத்ம தத்துவங்களில் விழித்திருப்பவனாகவும் இருப்பவனே ஞானியாகும். ஆத்மஞானம் திடீரென உதித்துவிடக்கூடியதொன்றல்ல. பக்தியுடனும் புலன்கட்டுப்பாட்டுடனும் இடைவிடாது பயிலவும் வளர்க்கவும் வேண்டும்.

சாதாரண மக்கள் அனுபவிக்கும் இன்பங்கள் அனைத்தும் புலன்களின் மூலமாகவே கிடைப்பதாக உறுதியாக நம்புகின்றனர். மனதின் கற்பனையில் உருவாகும்

*மிருக பலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சிபெறமுடியும்.*

இந்த இன்பம் என்றும் ஒரு எல்லைக்குட்பட்ட தாகவே இருக்கும். இது புற உலகிலிருந்து கிட்டுவதாகவும் அது உண்மையான அனுபவமென்றும் நினைத்து மயங்கும் அவர்கட்கு அக உலகிலிருந்து கிடைக்கும் இன்பம் மாயையாகத் தோன்றுகின்றது. அதனால் பற்றற்ற தன்மையில் பயிற்சி பெற அவர்கள் நாட்டம் கொள்வதில்லை. அனுபவிக்கும் இவ் இன்பம் குறிப்பிட்ட ஒரு பொருளிலிருந்து கிடைப்பது உண்மையானால் அனைவரும் அதே இன்பத்தை சீராக அனுபவிக்க வேண்டுமல்லவா! ஆனால் அப்படியில்லையே. ஒரு சிலருக்கு விருப்பமாக இருக்கும் குறிப்பிட்ட பொருள் பலரால் வெறுக்கப்படுவதாகவும் அமைகின்றது. பசியோடிருக்கும்போது சுவையாக இருக்கும் அதே உணவு பசி தீர்ந்தபின் அப்படியிருப்பதில்லையே. எனவே, இந்த விருப்புக்கான காரணம் உங்கள் மனதிலிருந்து உதயமாகின்றதே தவிர புறத்தே உள்ள பொருட்களிடமிருந்து வெளிப்படுவதில்லை. இந்த அனுபவம் உங்களிடம் இருந்துதான் எழுகின்றதே தவிர மற்றவர்களின் ஒரு அங்கமாக இருப்பதில்லை. இதுபோன்ற ஒரு உபதேசம் மிருகதாரண்ய உபநிடதத்தில் யாக்ஞவல்யரால் கூறப்பட்டது. "அன்பே நீ என்னை நேசிப்பது உனக்காகவே அல்லாது எனக்காகவல்ல. ஒவ்வொரு பொருளிடத்தும் நீ காட்டும் அன்பும் பிரியமும் உனது சொந்த நலனுக்காகவேதான். உனக்கு அதிகம் பிரியமாக இருப்பது நீயேதான். மற்றவர்களிடம் நீ காட்டும் இந்த உணர்வுகள் உன்னிடம் நீ செலுத்தும் பேரன்பின் ஒரு பகுதிதான்'' மற்றவர்களும் ஒருவரிடம் அன்பு செலுத்துவது சுயநலத்துக்காகவேயன்றி பிறர் நலத்துக்காகவல்ல. தூய ஆன்மாவானது உடலுக்காக சொந்த நலனுக்காகப் பயன்படுத்தும்போது அது சுயநலமாகின்றது. இந்நிலை ஈற்றில் துன்பத்திலேயே ஆழ்த்திவிடும். பற்பல தியாகங்களும் மங்கலகரமான புனிதச் செயல்களும் நடந்தேறிய இடம் தர்மஷேத்திரமாகும். கௌரவர்களால் பல கொடிய தீச்செயல்கள் இங்கேதான் நடந்தேறின. இதனால் இது குருஷேத்ரமெனவும் அழைக்கப்படும். அரசனோ, ஆண்டியோ ஒரு குழந்தையைப் பார்க்கும்போது அது சிரிக்கின்றது. அதன் உடல் தர்மஷேத்ரமாக விளங்குகிறது. பின் காலவோட்டத்தில் உடல் வளர வளர பொறாமை, வெறுப்பு முதலிய தீய குணங்கள் மெதுமெதுவாக அதன் மனதில் குடிகொண்டதும் அதே உடல் குருஷேத்திரமாகின்றது. தர்மர் தர்மத்தின் பிறப்பிடமாயிருந்தும் பின் விளைவுகளை அறியும் நுட்பம் இல்லாததால் ஒரு செயல் முடிந்த பின் அதுபற்றி கவலைப்படுவார். வீமன் மனவலிமையுடன் பொருந்திய பலசாலியாக இருந்தும் மதிநுட்பமில்லாதவனாகக் காணப்பட்டான். ஆனால் அர்ச்சுனன் போர்க்களத்தில் எதிரணியினரைப் பார்த்ததும் தனது மதிநுட்பத்தால் பின்விளைவுகளை முன்கூட்டியே அறிந்து உறவினர்களாகிய இவர்களை அழித்துப் பெறப்படும் இராச்சியம் எமக்குத் தேவையில்லை என்று போரை வெறுத்தான். இது தூய இதயம் படைத்தவர்களிடம் மட்டும் காணப்படும் விசேஷ பண்பாகும். இதுவே கீதையைப் போதிப்பதற்கு அர்ச்சுனன் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணமுமாகும். கனவுகளற்ற உறக்கத்தில் இருட்டு அதாவது தமோ குணம் மாத்திரம் இருக்கின்றது. அறிவோ ஞானமோ இருப்பதில்லை. ஆத்மாவிலிருந்து வெளிவரும் ஆத்மஜோதியே அந்த இருளை அறிய உதவுகின்றது. வெளியே ஒளிபரப்பும் சந்திர சூரியரைப்போல் அது உள்ளே இருந்து பிரகாசித்து எல்லாவற்றையும் அறிய வைக்கின்றது. படைப்புக் கடவுளான பிரம்மாவின் விண்ணுலகிலிருந்து பரமானந்தம் எனப்படும் பிரம்மானந்தம்

வெளிப்படுவதாக மறைநூல்கள் மொழிகின்றன. ஆனால் பரந்து விரிந்த இந்த பிரம்மானந்தம் கூட இன்பம் அனைத்துக்கும் மூல ஊற்றாகிய ஆன்மீக இதயத்திலிருந்து வெளிப்படும் எல்லையற்ற இன்பத்துடன் ஒப்பிடும்போது அணுவளவேயாகும்.

அடிப்படையான சத்தியத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவாயானால் வெளித்தோற்றங்களால் உனக்குத் தொல்லை வராதென கண்ணன் கீதையில் போதிக்கின்றார். இடைவிடாது மாறிக்கொண்டேயிருக்கும் தோற்றங்களுடன் சேர்ந்து அடிப்படையும் மாறுமானால் உயிரினம் வாழவே முடியாது. உதாரணமாக வாகனம் அசைவதற்கு நிலம் அசைவடையாதிருக்க வேண்டும். இரண்டும் அசையும்போது எல்லையை அடையவே முடியாது. அதேபோல் உலகம் பறந்து கொண்டிருப்பதால் துன்பமும் தடுமாற்றமும் நிறைந்திருக்கின்றது. நிலையான ஆத்மாவின் பக்கம் திரும்பி ஆத்மீக தத்துவத்தில் ஈடுபடும் வரை நிலையான ஆனந்தத்தை அடைவது முடியாத காரியமாகும். உலகப் பொருள்கள் அனைத்தும் குறைகள் நிறைந்தவையென்பதை நினைவில் கொண்டால் எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக வாழலாம். பற்றின்மையும் பக்தியும் புலன் கட்டுப்பாடும் உங்களிடம் ஏற்பட்ட உடனேயே உங்கள் இதயத்தில் இறைவன் குடியேற ஆரம்பித்துவிடுவார்.

கடந்தகால செயல்களின் அல்லது கர்மாக்களின் வெகுமதிகளை அறுவடை செய்யவே இந்த உடலைப் பெற்றிருக்கின்றோம். இக்கர்மாக்கள் வந்து சேர்ந்ததற்கு எம்மிடமிருந்த விருப்பு வெறுப்புக்களே காரணமாகும். இந்தத் துவைத உணர்வுக்குக் காரணம் உண்மையான ஆன்மீக அறிவை மறைக்கும் அறியாமையென்னும் இருள் திரையாகும். நெருப்புத்தணல் சாம்பலால் மூடப்பட்டிருப்பதைப்போல் ஞானக்கனல் அறியாமையெனும் சாம்பலால் மூடப்பட்டுள்ளது. தெய்வீகக் கோட்பாடு ஒவ்வொருவரிடமும் இருப்பதால் ஞானமில்லாது யாருமிருக்க முடியாது. தீவினைப் பயனாக உடல்மீது பற்று வைத்து அதனுள் ஆழ்ந்துவிட்டதால் எல்லையற்ற ஆற்றலையளிக்கும் தெய்வீகத்தை நாம் மறந்து விடுகின்றோம். ஒவ்வொருவரும் நான் எனது என்று சொந்தம் கொண்டாடவே விரும்புகின்றோம். ஆனால் எமக்குச் சொந்தமாக என்றும் மாறாதிருப்பது ஆன்மா மட்டுமே. இதற்கு ஐம்பொறிகளின் தலைவனான மனமே காரணமாகும். மனம் இல்லாத நிலையில் கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் செயலற்று விடுகின்றன. உதாரணமாக தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு வேறு வேறு யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது கண்ணிருந்தும் தொலைக் காட்சியில் காணப்பட்டது தெரியாது. காதிருந்தும் பேசப்பட்டது புரியவில்லை. மனமென்பது எண்ணங்களின் தொகுப்பேயன்றி வேறெதுவுமல்ல. அது புலன்களுக்கு அடிமையாகி மாசுபடும்போது அசுத்தமனமாகின்றது. புத்தியின் அறிவுரைக்கேற்ப அடக்கியாளப்படும்போது சித்தமாகின்றது. புலன்களின் பின் மனத்தை அலையவிடாது திசை திருப்பி இறைவன்மீது செலுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும்போது அது இறைவனிடம் ஒன்றுபடும் தியானமாகின்றது. அதன்போது எண்ணங்கள் குறைவடைந்து ஓரளவு சாந்தி கிட்டுகின்றது.

மனமானது அகத்திலும் புறத்திலும் விடுதலையடைய வேண்டும். வெளியே காணப்படும் பந்தபாசங்களில் கட்டுப்படாதிருப்பது

புறத்தில் விடுதலை எனப்படும். ஐம்பொறிகளின் தளைகளிலிருந்து விடுபடுவதும் பொறிகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதும் அகத்தில் விடுதலை எனப்படும். கட்டுப்பாடற்ற புலன்கள் விரிவடையும்போது அது பலவீனத்தில் வீழ்த்திவிடும். அதன் விளைவாக இறைவனை மறந்துவிடும் நிலைக்காளாகும்போது எமது பலம் எம்மை விட்டு நீங்கிவிடும். "கண்ணன் பூதவுடலை நீத்தபின் அர்ச்சுனன் தனது பெண்டிர் சிறுவர்களை அஸ்தினாபுரிக்கு அழைத்துவரும் வழியில் கானகத்தில் திருடர்களை எதிர்கொண்டான். பல சாகசங்களைச் சாதித்த மஹாவீரனாகிய அவன் தனது வலிமை முழுவதையும் செலுத்தியும் அத்திருடர்களை வெல்ல முடியவில்லை. இதுவரை அடைந்த வெற்றி அனைத்துக்கும் தனது மனவலிமையே காரணமென அவன் மயக்கமுற்றிருந்தான். உறுதுணையாக இருந்த தெய்வீக வலிமையை இழந்தபின் அற்பமான காரியத்தைக் கூட அவனால் சாதிக்க முடியவில்லை.

எம்மிடம் இயல்பாகக் காணப்படும் விவேகத்தைப் பயன்படுத்தும்போது ஞானம் வளர்கின்றது. அப்போது அறியாமை அகன்றுவிடுவதுடன் துவைத உணர்வும் மறைந்துவிடும். அனைவரிடத்தும் உறைவது ஒரே தெய்வீகமாதலால் பகைமையும் பந்த பாசமும் மறைந்துவிடுகின்றன. தன்னம்பிக்கை வளரும்போதுதான் இறைவனுக்கு எம்மிடம் உறுதியான நம்பிக்கை பிறக்கும். இதற்கு இடைவிடாத சுயசோதனையில் ஈடுபட வேண்டியது இன்றியமையாததாகும். கீதை புலன்களை அழித்துவிடும்படி கூறவில்லை. மாறாக, கட்டுப்படுத்தும்படிதான் வலியுறுத்துகின்றது. கடமையின் பலனைத் துறக்கும்படி அறிவுறுத்துகின்றதே தவிர கடமையைத் துறக்கும்படி கூறவில்லை. பிரபஞ்சத்தில் காணப்படும் கோள்களும் ஜீவராசிகளும் தத்தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது நாம் மாத்திரம் விதிவிலக்காக எமது தர்மத்துக்குரிய கடமைகளைச் செய்யாதுவிடின் பிறப்பின் இலக்கை அடையவே முடியாது. கீழ்க்கொணர் நிலுவையாக சுமந்துவந்த பிராப்த கர்மாவையும் அழிக்கமுடியாது. பிரதியுபகாரமாக எதையும் செய்யாது மரங்களை வெட்டிக் காயப்படுத்தும்போதும் அதனைச் சிறிதளவும் பொருட்படுத்தாது காய்கனிகளை அளிப்பது மட்டுமல்லாமல் தம்மையே முழுமையாக அர்ப்பணிக்கின்றன. பசு பாலைத் தருவதன்மூலம் பெரிய தியாகத்தைச் செய்கின்றது. மற்றும் விலங்குகள், பறவைகள், பூச்சிகள் அனைத்தும் இயற்கைச் சமநிலையைப் பேணுவதிலும் நிலத்தைப் பண்படுத்துவதிலும் உறுதுணையாக விளங்குகின்றன. எமது மனமானது அகத்திலும் புறத்திலும் விடுதலை பெறும் நோக்குடன் இடைவிடாத சுயசோதனையின்மூலம் புலன்களை அகமுகமாகத் திருப்பி இந்த உடல் நானல்ல என்ற உணர்வு பெற்று என்றும் நிலையாகவுள்ள ஆத்மஜோதிப் பிரகாசத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தில் திளைத்திருப்போமாக.

அஸத்தோமா ஸத்கமய- பொய்மையிலிருந்து மெய்மைக்கு என்னை வழிநடத்துவாயாக.

தமஸோமா ஜோதிர்கமைய- அறியாமை எனும் இருளிலிருந்து ஞானமென்னும் ஒளிக்கு வழிகாட்டுவாயாக.

ம்ருத்யோமா அம்ருதம் கமைய- மரணத்திலிருந்து முத்திக்கு அழைத்துச் செல்வாயாக.

*செல்லும் பாதை சரியாக இருந்தால் வேகமாக அல்ல மெதுவாக ஓடினாலும் வெற்றிதான்.*

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 06. அநுபோக சுத்தி

அநுபோக சுத்தியென்பது சிவானுபவத்தின் பொருட்டு உயிர் தன் அநுபவங்களைச் சுத்திசெய்தல்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

55. ஈச னேயென் னெம்மானே எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்றும் அறியேனே.

**ப-ரை:**

ஈசனே- எல்லாவுயிர்களுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் இறைவனே, என் எம்மானே- எனக்கு அருள் செய்யுமாறு எழுந்தருளிவந்த எங்கள் தலைவனே, எந்தை பெருமான்- என் தந்தையாகிய பெரியோனே, என் பிறவி நாசனே- எனது பிறப்பை ஒழிப்பவனே, தேசனே- ஞான ஒளி வடிவினனே, அம்பலவனே- சிதாகாயத்தையுடையவனே, யாதும் ஒன்று அல்லா பொல்லா நாயான நீசனேனை- ஏதும் ஒரு பொருளாக மதிக்கப்படாத தீமையுடைய நாயாக உள்ள இழிவுடையவனாகிய என்னை, ஆண்டாய்க்கு- ஆட்கொண்டருளிய நின்னை, நான் நினைக்க மாட்டேன்- நான் இடையீடின்றி நினைக்கமாட்டாதவனாயிருக்கின்றேன், செய்வது ஒன்றும் அறியேன்- அதனால் இனிச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன்.

ஈசனே, என் எம்மானே, எந்தை பெருமானே, என்பிறவி நாசனே, தேசனே, அம்பலவனே, யாதும் ஒருபொருளாக மதிக்கப்படாத பொல்லா நாயாகவுள்ள நீசனேனை ஆட்கொண்டருளிய நின்னை நான் இடையீடின்றி நினைக்கவுமாட்டாதவனாயிருக்கின்றேன்; அதனால் யான் இனிச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன் என்பதாம்.

ஈசன்- சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சங்கள் எல்லாவற்றுக்கும் தலைவன்.

"ஈசான; சர்வ வித்யானாம்
ஈஸ்வர சர்வ பூதானாம்"

என வேதம் கூறுமாறும் காண்க. என் எம்மானே என்றது இறைவன் அருள் செய்யவேண்டி வலிய எழுந்தருளி வந்த உரிமைபற்றியதாகும். எந்தைபெருமான் என்பதில் விளியுருபாகிய ஏ தொக்கது "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென் கடவேன்" (சத) எனப் பிறிதோரிடத்து அருளிச் செய்த அடிகள், ஈண்டு என்பிறவி நாசனே என்றது

இனிப்பிறவி உண்டாகாதவாறு என் பிறவியை நாசஞ் செய்தமையால் எடுத்த பிறவியின் ஒழிவாகிய இறவியினால் துன்பமுனதாகாது என்னும் கருத்துப் பற்றியாகும்.

ஆண்டாய்க்கு என்னும் நான்காவது இரண்டாவதன் பொருட்கண் வந்தது. நினைத்தல், ஈண்டு இடையீடின்றி நினைத்தலைக் குறித்தது. அங்ஙனம் நினைக்க முடியாமை உலக அநுபவங்கள் தாக்குவதாலாகும். அத்தாக்குதலை நீக்கியருள வேண்டும் என்பதே இப்பாட்டில் வேண்டிக்கொண்ட பொருளாகும். தேசன்- ஒளிவடிவினன். தேசு- ஒளி.

செய்வதொன்றும் அறியேனே என்றது எடுத்த பிறப்புக்குரிய பிராரத்த வினையை அநுபவித்துக் கொண்டிருக்கும் யான் அந்த அநுபோகங்களினால் தாக்குதலடைந்து நின்னை இடையீடின்றி நினைக்கும் வழி ஒன்றையும் அறிகின்றிலேன் என்பதாம்.

இதன்கண், நீசனேனை ஆண்டாயை நினைக்கமாட்டேன் என்றமையாலும், செய்வ தொன்றுமறியேன் என்றமையாலும் பிராரத்த அநுபவங்கள் தாக்குகின்றன; அவற்றை நீக்கியருள வேண்டும் என்னும் வேண்டுகோள் பெறப்படுதலின், அநுபோக சுத்தியென்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

56. செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற்பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே.

ப-ரை:

போர் ஏறே- பொறி வாயில்களாகிய ஐந்து யானைகளையும் அழிக்கும் போரில் அரியேறு போன்றவனே, பொய் இலா மெய்யர்- நிலையில்லாத பொய்யாகிய உலக வாழ் விற் பற்றற்ற மெய்யன்பர்கள், வெறி ஆர் மலர் பாதம் மேவ கண்டும்- நறுமணம் நிறைந்த தாமரை மலர்போன்ற திருவடிகளை அடைதலை நேரிற் கண்டும், கேட்டிருந்தும்- நீ அறிவுறுத்தியருளக் கேட்டிருந்தும், பொய்யனேன் நான்- அந்நெறியிற்றலைப்படமாட்டாது நிலையற்ற பொய்யாகிய உடலோடு கூடி வாழும் வாழ்க்கையை உடையேனாகிய யான், உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்- இவ்வுடலைப் பேணும் பொருட்டு உண்டும் உடுத்தும் இருப்பவனாயினேன்; செய்வது அறியா சிறு நாயேன்- இந்நிலையினை நீக்குதற்குச் செய்யத்தக்கது இன்னதென்று அறியாத கீழாகிய நாய்போன்ற யான், செம்பொன் பாத மலர் காணா- சிவந்த பொன்போன்ற திருவடி மலர்களைக் காணும் பேறு இல்லாத, பொய் யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்- நிலையில்லாத உலக வாழ்க்கையை உடையார் பெறுகின்ற துன்பப்பேறுகள் அவ்வளவினையும் பெறுதற்குரியனாகின்றேன்; இது தகுமோ?

போரேறே, நிலையில்லாத உலக வாழ்விற் பற்றற்ற மெய்யன்பர்கள் திருவடி அடைதலை நேரிற் கண்டும் நீ அறிவுறுத்தியருளக் கேட்டிருந்தும் அந்நெறியிற்றலைப்படமாட்டாது பொய்யாகிய உடலோடு கூடிவாழும் வாழ்க்கையையுடையேனாகிய யான், இவ்வுடலை ஓம்புதற் பொருட்டு உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்; இந் நிலையினை நீக்குதற்குச் செய்யத்தக்கது இன்னதென்று அறியாத சிறுநாயேன், செம்பொற்பாத மலர்களைக் காணும் பேறில்லாத பொய்யர் பெறும் துன்பப் பேறுகள் அத்தனையும் பெறுதற்குரியவனாகின்றேன்; இது தருமமோ என்பதாம்.

*நீ தீய செயல்களிலிருந்து விலகுவதே உண்மையான அறிவு.*

செய்வதறியா என்றது உண்டு உடுத்து இங்கு இருப்பதாகிய பொய்யுலக வாழ்வை நீக்குதற்குச் செய்யத்தக்கது இன்னதென்றறியா என்றவாறு. சிறுமை- இழிவு. "செம்பொற் பாதமலர் காணாப் பொய்யர்" என்றமை யான் அப்பாத மலரைக் கண்டு வைத்தும் பொய்யுடல் வாழ்க்கையையுடைமையையாற் பொய்யர் போலாயினேன் என்பது பெறப்படும். பேறு என்றது பொய்யர் பெறும் துன்பப்பேற்றை உணர்த்தியது. உரியேன் என்பது உரியவனாவேன் என னும் பொருள்பட நின்றது. அதனால், செம்பொற்பாத மலர்கண்டும் மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டும் நீ அறிவுறுத்தியருளக் கேட்டும் இருக்கும் யான் துன்பநிலை யினை அடைதல் தகுமோ? அதனால் அத்துன்ப நிலையை நீக்கியருளவேண்டும் என்பது குறிப்பெச்சம்.

வெறியார் பாதம், மலர்ப்பாதம் எனத் தனி இயையும். வெறியார் பாதம்- நறுமணம் நிறைந்த பாதம். "நின்வெறி மலர்த்தாள்" (நீத்44) எனவும், "வெறியார் கழல் வீழ்சடைத் தீவண்ணன் சிவன்" (திருக்கோவை 286) எனவும் வருவனவுங் காண்க. மலர்ப்பாதம்- தாமரை மலர் போன்ற பாதம். "தாமரைத்தாள்" சத45 மெய்யர் பாதம் மேவக் கண்டும் என இயையும். "அருள்பெற்ற, சீரேரடியார் நின்பாதஞ் சேரக் கண்டும்", (சத 53) என வருதலுங் காண்க.

கேட்டிருந்தும் என்றது ஞான நன்னெறிக்கண் ஒழுகும் மெய்யன்பர்கள் மேன்மையான நம் மெய்ப்பதம் பெறுவர் என இறைவன் அறிவுறுத்தமையைக் குறிப்பதாகும்.

"புரிந்து போந்துள சிற்றறி வனைத்தும்
போக்கி யவ்வறி வெனச்சிவ போதம்
விரிந்து தோன்றுநெஞ் சுடையவித் தகரே
மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார்"

திருப்பெருந் 72.

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதலும் காண்க.

இருப்பதானேன் என்றது நின்திருவடிப்பேற்றைப் பெறமாட்டாது இவ்வுலகில் இருப்பது உடலை ஓம்புதற் பொருட்டு உண்பதற்கும் உடுப்பதற்குமாகவே அமைகின்றது என அடிகள் இரங்கிக் கூறியவாறு.

போரேறே என இறைவனை விழித்தது, இறைவன் பொறிவாயில்களாகிய ஐந்து யானைகளை அவித்தவனாதல் பற்றியாகும். அங்ஙனம் கூறுங்கால் பொறிவாயில்கள் இறை வனைத் தாக்க அவற்றை ஒருபாயத்தால் அவித்தான் என்னும் பொருளதாகதோவெனின் இயல்பாகவே பொறி வாயில்களின் தாக்குதல்களை நீக்கிய இறைவனைப் "பொறிவாயிலைந்த வித்தான்" (குறள்) எனக் கூறியது போன்ற ஒருபசார வழக்காகும். "உறுபொறி காய்ந்திசை மாதவனே" (ஞான 371:5) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இனி, போரேறே என்பதற்கு, அந்தமிலின்பத் தழிவில் வீடாகிய பரமுத்தியை அளிக்கும் செயலில் மற்றைய எத்தேவர்களுக் கும் இல்லாத ஆற்றலுடையான் இறைவனாதல் பற்றியும், தம்மையடையும் பக்குவான்மாக் களை ஆட்கொள்ளும்போது அவைகளை மேற்கதியடையவொட்டாது தடுக்கும் பாசபந்தங் களாகிய பகைகளை அறுக்கும் போரில் அரியேறு போன்றவனாதல் பற்றியும் எனினுமாம். இக் கருத்திற்கு அநுகூலமாக "நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும் அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்" (திருப்பள்ளி 10) என அடிகள் அருளியிருத்தலுங் காண்க. இறை வனைப் பேரேறு என்று அடிகள் பிறாண்டும் கூறுதலை, "திண்போர் விடையான் சிவபுரத்தார்

*ஒழுக்கமுள்ள இடத்தைக் கடவுள் தேடி வருவார்.*

பேரேறு" என இத்திருவாசகத்தும் (பூவல்லி 16) அப்பரடிகள் கூறுதலை, "கருங்கைக் களிற்றுரிவை கதறப்போர்த்த, போரேறே" (313:5) எனத் தேவாரத்தும் காண்க.

இதன்கண், உண்டுடுத்திங்கிருப்பதானேன் அதனாற் செய்வதறியாச் சிறுநாயேன் பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்குரியவனாகின்றேன்; இது தகுமோ எனக் கூறுமுகத்தால் அநுபோகசுத்தி என்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 52.

(தொடரும்..

## சுகந் தந்து காப்பாய் நீயே

சோதனை வந்த போதும்
சோகத்தால் நொந்த போதும்
வேதனை செய்து நோய்கள்
வெந்துயர் தந்த போதும்
காதினை அடைக்கு மாப்போல்
கடும்பசி வந்த போதும்
சாதனை காட்டும் கந்தன்
சந்நிதி வந்தே சேர்வோம்.

வெற்றியும் தூரப் போகும்
வேகமும் அற்றுப் போகும்
பற்றியே பாசம் வைத்த
பாங்கான உறவும் போகும்
சுற்றியே நிற்போ ரெல்லாம்
சொல்லாது தூரப் போவார்
வெற்றிவேற் கந்தா நின்றன்
வேலொன்றே துணையா யாகும்.

மாதொரு பாகனான
மழுவுடை சிவனார் மைந்தன்
ஏதொரு காரணத்தால்
என்னுளம் சேர்ந்த சொந்தம்
தீதொரு நாளுமில்லை
திவ்விய தரிசனத்தால்
யாதொரு பொல்லாப்பில்லை
யோகர்தாள் சரணந் தானே.

சிந்தையில் நிறைந்த செவ்வேள்
சந்நிதி மேவும் செல்வன்
கந்தனின் கோலம் காண
கண்கோடி வேண்டும் எங்கள்
முந்தையின் வினைகள் தேய
முன்னவன் குருவாய் ஆன
சொந்தமே சுப்ர மண்யா
சுகந்தந்து காப்பாய் நீயே.

- நீ. பாலசுப்பிரமணியம்.

# இயற்கையும் இறைவனும்

– திரு இராமலிங்கம் ஜெயபாலன் அவர்கள் –

இயற்கை என்றால் இயல்பானது என்றும் தானாகத் தோன்றியது என்றும் பொருள்படும். மற்றும் செயற்கை என்றால் செய்யப்பட்டது என்ற பொருள்பட்டாலும் மனிதர்களால் மட்டும் செய்யப்படுகின்ற குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் குறிக்கும் உதாரணம் தேன். இது தேனீக்களால் இயற்கையாகச் செய்யப்படும் ஒரு அற்புதம். இதை மனிதர்கள் செயற்கையாகச் செய்யலாம், ஆனாலும் இயற்கையாகக் கிடைக்கும் தேனின் இயல்பு இதற்கு வந்துவிடாது. இவ்வாறு பார்க்கும்போது கல்வியும் செயற்கையானது என்று சொல்லி விடலாம். ஆனால் கல்வியுருவான விதம் இயற்கையானது. அதேபோல் கற்கின்ற ஆற்றலும் வெளிப்படுத்துகின்ற புலமையும் இயல்பாக அமைந்தால் அது இயற்கையானது தவிர இயற்கையான தோடம்பழத்தில் பழரசம் செய்தால் அது இயற்கையானது. இரசாயனப் பதார்த்தங்களைக் கொண்டு செய்தால் மட்டுமே அது செயற்கையானது. எவ்வாறாயினும் மனிதன் இயற்கையைத் தவிர இயற்கையில் இருந்தே செயற்கைகளையும் உருவாக்கினான். உதாரணம் பறவையைப் பார்த்தே மனிதன் விமானத்தைப் படைத்தான்.

அடுத்து இயற்கை என்றால் தானாகத் தோன்றியது என்றும் பொருள்படும். அதாவது இந்தப் பிரபஞ்சமும், அதிலுள்ள அனைத்தும் தானாகத் தோன்றியது என்பதாகும். மேலும் இவ்வாறு தானாகத் தோன்றிய இயற்கை, அதன் இயங்கும் இயல்பைக் கொண்டு ஆராய்ந்து அறிகின்றபோது இயற்கை இயல்பாகத் தோன்றியது என்று சொல்வதா? அல்லது ஏதோ ஒரு சக்தியால் தோன்றச் செய்யப்பட்டதா? என்பது வெறுமனே சிந்தித்து அறியக்கூடியதல்ல, இவை கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இருந்தபோதும் இந்துமதம் அறுவகைச் சமயங்கள் அடங்கலாக இயற்கையையே இறைவனாகவும், மேலும் அவன் விரும்பியேற்கும் நெய்வேத்தியமாக இயற்கையானவற்றையே உயர்வாகப் போற்றுகிறது.

மேலும் இந்த இயற்கையின் இயங்கியலில் பஞ்சபூதங்களின் பணி அளப்பரியது. அதுபோல் மனிதனின் புலன்கள் ஐந்தும் அவனை இயக்கும் கருவிகளாகும் தவிர ஒரு உடல் அதன் உறுப்புக்களின் முக்கியமாக உள்ளுறுப்புக்களின் இயக்கத்திலேயே உயிர் வாழ்கின்றது. அவ்வாறு இல்லாது உள்ளுறுப்புக்களின் இயக்கம் நின்றுவிட்டால் அவ்வுடல் இறந்துவிட்டதாக அறிவிக்கப்படும். அதுபோல்த்தான் இந்த இயற்கையின் இயங்கியலிலும், அதாவது இந்த இயற்கையின் இயங்கியல் நின்றுவிட்டால் அதைப் படைத்த பிரம்மாவும் இறந்துவிடுவான் என்கிறது இந்துமத சாரம்.

எவ்வாறாயினும் இறைவன் ஒருவன் என்கின்றது வேதசாரம். ஆனால் புராணங்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்கின்ற முத்தொழிலைச் சொல்கின்றன. இது சிலருக்குக் குழப்பமாகக்கூட இருக்கிறது. ஆனால் இவற்றைச் சற்று ஆழமாகச் சிந்தித்தால் உண்மை புரியும்.

*உன்னை நீயே புகழாதே. அது உன்னை மற்றவர்கள் மத்தியில் முட்டாளாக மாற்றும்.*

இந்த வகையில் இறைவன் நன்மை தீமை கடந்தவன் அனைத்துக்கும் அவன் படைத்த விதியே காரணம். தவிர அவன் பற்றுப்பாசம் கடந்து எமது அறிவுக்கு எட்டாத தூரத்தில் இருந்தாலும், படைப்புக்கள் மீது கருணைகொண்டு இறங்கி வருகின்றான். அவையாவன, தாய் தந்தை அடுத்ததாக குரு, எவ்வாறாயினும் சில வேளைகளில் தாய் தந்தை கூட எமக்குக் குருவாக இருப்பதுபோல் இறைவன் செயலும் மாறுபடுகின்றது.

உதாரணம் தாய் பிள்ளைகளுக்கு வகை வகையாகச் சமைத்துப் போடுகிறாள். தந்தையே பிள்ளைகளின் உடல் நலத்தைக் கருத்தில்கொண்டு சில உணவுப் பொருள்களை உண்ணவிடாது தடுத்து விடுகிறார். ஆனால் தாய் சொல்கிறார் பிள்ளைகளுக்கு அவை விருப்பம் ஆகவேதான் சமைத்துப் போட்டேன் என்கிறாள். இது முதலாவது நிலை, அடுத்ததாக தாய் எப்போதும் இயற்கையான உடல் நலத்துக்கு உகந்த சாப்பாடுகளை மட்டுமே சமைத்துப் போடுகிறாள். ஆனால் தந்தையே பிள்ளைகள் விரும்புகின்றார்கள் என்பதற்காய் செயற்கையான உணவு வகைகளை பிள்ளைகளுக்கு வேண்டிக் கொடுக்கிறார். ஆனால் தாய் புத்திமதி சொல்லி திருத்துகிறாள் இங்கே தாய் குரு ஆகின்றாள். மூன்றாவதாக தாய் தந்தை இருவரும் கல்வியறிவே இல்லாதவர்கள் இவர்கள் பிள்ளைகள் விரும்பிச் சாப்பிடும் அனைத்து உணவுகளையுமே சமைத்துச் சாப்பிடக் கொடுக்கின்றார்கள். ஆனால் குரு பாடம் நடத்தும்போது உணவுகளையும் உடல் ஆரோக்கியங்களையும் வகைப்படுத்தியும் தீமையான உணவுவகைகளையும் தவிர்க்கும்படியும் கூறுகிறார்கள். ஆனால் பிள்ளைகளுக்கு இவைகளை உடனடியாக விளங்கிக்கொள்ள முடியவில்லை. மேலும் அந்தப் பிள்ளைகளின் தாய் தந்தையரும் தமது பழக்கவழக்கங்கள் காரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. பிள்ளைகளுக்கு அறிவு வளர குரு சொல்வதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஆகவே இறைவன் படைக்கும்போது ஒருவிதமாகவும், காக்கும்போது இன்னொரு விதமாகவும் அழிக்கும்போது இரண்டிற்கு மாற்றமாகவும் மாறிவிடுகிறான்.

ஆகவே அனைத்துக்கும் காரணமான இறைவனை நாம் வகைப்படுத்துவது தவிர்க்க முடியாதது தவிர, இன்னுமொரு மாற்றமான வகைப்படுத்தலையும் சுட்டிக் காட்டலாம். இறைவன் நன்மை தீமை இரண்டிற்கும் காரணமானவன். ஆனால் இறைவனை கெட்டவனாகவும் காட்டினால் அதை மனிதர்கள் தவறாக விளங்கித் தறிகெட்டுச் செல்லக்கூடாது என்பதற்காக, அசுரனாகவும் தேவனாகவும் கூடப் புராணங்கள் காட்டினாலும் இறைவனே அசுரர்களுக்கும் வரங்களை அளிக்கின்றான் என்கின்ற தத்துவங்கள் சொல்லப்படாமலில்லை, எவ்வாறாயினும் நன்மை தீமைகளால் கலந்தே இந்த உலகம் இயங்கிக்கொண்டு இருக்கிறது.

எனவே நன்மைகள் மறைந்து தீமைகள் மேலோங்குகின்றபோது தருமத்தை நிலைநாட்ட இறைவன் அவதாரம் எடுக்கின்றான் என்பது இந்துக்கள் நம்பிக்கை.

அதாவது சனத்தொகை பெருகி பாரம் தாங்காது பூமித்தாய் தவிக்கும்போது அசுரர்கள் தோன்றி விடுகிறார்கள். மேலும் பூமி முழுமையாக அழிந்துபோகக்கூடிய நிலையொன்று ஏற்படும்வரை அழிவுகள் தொடர்ந்து, புதிய உலகம் ஒன்று பிறக்கும் என்பதும் எமது நம்பிக்கைகளில் ஒன்றாகும். இந்த மறு உலகம் எப்போது ஏற்படும் என்பதுதான் இன்றைய கேள்வி.

*தாயின் பாதங்களைவிடப் புனிதமானது உலகில் வேறொன்றுமில்லை.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



### 71. பின் புகுவார் இன்புறுவார்

இன்புறுவார் துன்பார் இருளின் எழும் சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்.

**பொருள்:**

பக்குவம் வருவதற்கு முன்னே, துன்பம் தரும் இருளில் வழிகாட்டி வருகின்ற திருவருள் ஒளிக்கு முன்னால் சென்றவர், பக்குவம் வந்த காலத்தில் அதன் பின்னால் செல்வர்; அவ்வாறு பின் சென்று பேரின்பமாகிய பயனை அடைவர்.

**சொற்பொருள்:**

துன்பு ஆர் இருளின்- (பக்குவம் வராத காலத்தில்) துன்பம் நிறைந்த இருளில், எழும் சுடரின்- தோன்றி வழிகாட்டி வரும் திருவருள் ஒளிக்கு, முன் புகுவார்- முன்னால் சென்றவர், பின்- பக்குவம் வந்த காலத்து, பின் புகுவார்- அவ்வொளிக்குப் பின்னால் செல்வர், இன்புறுவார்- அவ்வாறு பின் சென்று பேரின்பத்தை அடைவர்.

**விளக்கம்:**

முன் புகுவார்:

உடம்பிற்குப் பலவகையான குற்றங் குறைகள் உண்டு. முதலாவதாக, அது பிறக்கும் பொழுதும் துன்பத்தைத் தருகிறது. இறக்கும்பொழுது அதைவிடப் பெரிய துன்பத்தைத் தருகிறது.

இரண்டாவதாக, மூப்பு என்னும் நிலை அதற்கு ஏற்படுகிறது. மூப்புநிலை எவ்வளவு துன்பமானது! உடலெங்கும் சுருக்கங்கள் விழுகின்றன. நடக்க முடியாமல் நடை தள்ளாடுகிறது. கண் பார்வை மங்கிப் போகிறது. பற்கள் கழன்று போகின்றன. காது சரியாகக் கேட்பதில்லை. வாயில் எப்பொழுதும் இருமல். அவனை யார் மதிப்பார்கள்? மனைவியும் அவன் சொன்னபடி கேட்பதில்லை. மகனைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. மகன் அவனிடம் எதிரிபோல நடந்துகொள்கிறான்.

மூன்றாவதாக, நெஞ்சுவலி, பல்வலி, மூட்டுவலி, கால்வலி, மேல்வலி, நீரிழிவு என்று எல்லா வகையான நோய்களும் வந்து தொல்லை கொடுக்கின்றன. இளமைக் காலத்தில் விருந்தினர்போல எப்போதாவது வந்து சென்ற நோய் மூப்பு வந்ததும், குடும்பத்தில் ஒருவர்போலக்

கூடவே தூங்கிவிடுகிறது! உலகினர் இதைப்பற்றியெல்லாம் சிந்திப்பதில்லை. சிந்தித்தால் உடல்மீது இவ்வளவு பற்று ஏற்படுமா? இவ்வாறு கூறுவது கொண்டு, உடம்பைப் பேணாது புறக்கணிக்க வேண்டும் என்று கருதி விடலாகாது. சிவ நூல்கள் உடம்பை நன்கு போற்று என்றுதான் கூறுகின்றன. நலமாக வைத்துக்கொள் என்றுதான் கூறுகின்றன. ஏனெனில், ஞானம் பெறுவதற்கு உடம்பு தான் சாதனம். உடம்பை உயிர் நலத்திற்குக் கருவியாகப் பயன்படுத்த வேண்டுமேயன்றி, உடம்பைப் பேணுதல் ஒன்றையே முடிந்த பயன் என்று நினைத்து விடக்கூடாது. ஆக்கைக்கே இரைதேடி அலையலாகாது. உடல்மீது அளவு கடந்த பற்று வைத்தல் கூடாது.

உலகர் உடற்பற்றும் பொருட்பற்றும் உடையராய் இருப்பதிலே வியப்பொன்றும் இல்லை. ஆனால், ஞான நெறியிற் செல்லும் சிலரும் அவ்வாறு இருப்பதுதான் வியப்பு.

ஞானாசிரியனிடத்தில் உடல், பொருளோடு ஒப்பத் தம்மையும் அவனுடையனவாக ஒப்புவித்துத் தானம் செய்த பிற்பாடு, தானம் செய்தவழியிலே நிற்றலே முறையாகும். தானம் செய்த வழியிலேயே நிற்றலாவது, தாம் சிவனுக்கு அடிமை என்பதை உணர்ந்து, அவனருளால் அல்லது ஒன்றையும் செய்யாமல் நிற்றலேயாகும். அவ்வாறு நில்லாமல், உடல் பற்றும், பொருட்பற்றும் உடையவராய்த் தன் முனைப்போடு நிற்றல் எவ்வகையில் உய்வைத் தரும்?

இதுபற்றித் திருமூலர் பின்வருமாறு கூறுகிறார். காட்டில் உள்ள கோடிக்கணக்கான சந்தன மரங்களின் கட்டைகளைத் தேய்த்து எடுத்த சந்தனத்தையும், வானைத் தொடும்படி குவித்த மலர்களையும் பயன்படுத்திச் சிவனை வழிபட்டாலும் என்ன பயன்? உடம்பைத் தமக்கு வேறாக உணர்ந்து, அதன்மீது வைத்த பற்றை விடுத்துச் சிவனையே பற்றாக உணர்ந்தாலன்றி அவனது திருவடியைப்பெற இயலாது என்கிறார்.

ஒருநோய் குணமாவதற்கு மருத்துவர் சில மருந்துகளைக் கொடுப்பார். அதனோடு சில பத்தியங்களையும் விதிப்பார். இதை உண்ணக்கூடாது. அதைத் தொடக்கூடாது என்றெல்லாம் சொல்வார். அவர் சொன்னபடி மருந்தையும் உட்கொள்ள வேண்டும். பத்தியத்தையும் பின்பற்ற வேண்டும். பத்தியத்தை விடுத்து மருந்தை மட்டும் உட்கொண்டு பயனில்லை.

பத்தியத்தை மேற்கொள்ளாமல் மருந்தினை மட்டும் உட்கொள்வார் போல, பற்று நீங்கியிருத்தல், விருப்பு வெறுப்பின்றி இருத்தல் முதலியவற்றை மேற்கொள்ளாமல் சிவபூசை செய்கின்றனர்; சிவபூசை செய்யும்போதே மனைவி மக்கள்மீது சீறிப்பாய்கின்றனர். அதை ஏன் செய்தாய்? இதை ஏன் செய்யவில்லை? என்று கடிந்து கொள்கின்றனர். இவ்வாறு திருவருளில் அடங்கி நில்லாமல் தன் முனைப்போடு திருவருளுக்கு முன்னே செல்லும் இவரையே "இருளின் எழும் சுடரின் முன் புகுவார்" என்று குறிப்பிட்டார் ஆசிரியர்.

**பின் புகுவார்:**

உடைமைகளும் உறவுகளும் ஆகிய எல்லாம் கடலில் மிதக்கும் கட்டைகள் போன்றவை என்பார்கள். இந்தக் கட்டைகள் ஒரு சமயம் சேர்ந்து இருக்கும். பிறகு காற்றோ, அலையோ அடிக்கும்பொழுது அவை பிரிந்து வெவ்வேறு திசைகளில் சென்றுவிடும். செல்வம், மனைவி, மக்கள், உறவினர் எல்லோரும் கடலில் ஒன்று சேர்க்கப்பட்ட கட்டைகள்

போன்றவர். எப்பொழுது போக வேண்டுமோ அப்பொழுது போகவேண்டியவர்கள். இந்த உண்மையைத் தெளிந்தால் பற்றை விடுவது எளிது.

தாமரை இலை தண்ணீரிலேயே பிறந்து தண்ணீரிலேயே வளர்கிறது. ஆயினும் அது தண்ணீரைத் தன்மீது தங்கவிடுவதில்லை. தண்ணீர்மீது அதற்குப் பற்றுதல் இல்லை. அந்தத் தாமரையிலையைப்போல வாழ வேண்டும்; பற்று இல்லாமல் வாழ வேண்டும். நான் செய்கிறேன் என்று நினைக்காமல், எல்லாவற்றையும் இறைவன் செயலாக உணர்ந்து அவன் வழியில் நிற்கவேண்டும்.

பக்குவம் வராதபொழுது திருவருளுக்கு முன்னால் சென்ற அவரே பக்குவம் வந்த காலத்தில் உண்மையைத் தெளிந்து, எல்லாப் பற்றினையும் விடுத்துத் திருவருளுக்குப் பின்னே செல்வர். ஆதலால் "இருளின் எழும் சுடரின் பின் புகுவார்" என்று குறிப்பிட்டார் ஆசிரியர்.

முந்திய அதிகாரத்தில் உள்ள "உற்கை தரும் பொற்கை" என்னும் செய்யுளின் தொடர்ச்சியாகவே இச்செய்யுள் அமைந்துள்ளது. அச்செய்யுள் அருள்நிலை இப்படிப்பட்டது என்பதை உணர்த்தியது. இச்செய்யுள் அருள்நிலையால் விளையும் பயனை உணர்த்துகிறது. அஃதாவது, அருள் நிலையினால் இன்புறு நிலை உண்டாகும் என்று கூறுகிறது.

**குறிப்பு:**

பொருள் நிலைக்கு ஏற்பச் செய்யுளில் உள்ள சொற்களைப் பின்வருமாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். "துன்பார் இருளின் எழும் சுடரின் முன் புகுவார் பின் பின்புகுவார் (ஆனபொழுது) இன்புறுவார்" என அமைத்துக் கொண்டால் பொருள் இனிது விளங்கும்.

### 72. அருள் நிலைக்கு அப்பால் உள்ளது

இருவர் மடந்தையருக்கு என்பயன்? இன்பு உண்டாம்
ஒருவன் ஒருத்தி உறின்.

**பொருள்:**

பெண் பாலார் இருவர் சேர்வதிலே இன்பம் இல்லை. பெண் மகள் ஒருத்தியும் ஆடவன் ஒருவனும் கூடும் கூட்டத்திலேயே இன்பம் உண்டாகும்.

அதுபோல, உயிர் அருளோடு சேரும் நிலையில் இன்பமில்லை. உயிர் அருளுக்கு முதலாகிய, சிவத்தோடு கூடும் போதே பேரின்பம் விளையும்.

**சொற்பொருள்:**

இருவர் மடந்தையருக்கு என்பயன்- பெண்பாலார் இருவர் சேர்விலே பயன் உண்டோ?, ஒருவன் ஒருத்தி உறின்- ஆடவன் ஒருவனும் பெண் மகள் ஒருத்தியும் தம்மில் கூடின், இன்பு உண்டாம்- அப்போதே இன்பம் உண்டாகும், திருவருளைப் பற்றிய அளவிலே உயிருக்குப் பேரின்பம் விளையாது; சிவத்தை அறிந்து அதில் அழுந்தியபோதே ஆனந்த நிலை உண்டாகும் என்பது இக்குறட்பாவின் கருத்து.

**விளக்கம்:**

உயிர் சிவத்தை அணைந்து பெறும் பேரின்பத்தை எப்படி விளக்குவது? உலகர்க்குத் தெரிந்த சிற்றின்பத்தை வைத்துப் பேரின்பப் பொருளை விளக்கிக் காட்ட முற்பட்டனர்

*அன்புக் கண்ணீர் துன்பம் தராது, அது முத்தாக மாறிவிடும்.*

நமது சமயச் சான்றோர். சிற்றின்பப் பொருளைப் பல துறைகளாக வகுத்துத் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலியோர் கூற்றாக அமைத்துப் பாடுவது பழைய அகப்பொருள் மரபாகும். அம் மரபையே இவர்களும் பின்பற்றினர். இறைவனைத் தலைவனாகவும், உயிரை அவன்மீது தீராக் காதல் கொண்ட தலைவியாகவும் வைத்துப் பாடல்கள் புனைந்தனர். ஞானசம்பந்தர் முதலிய அருளாசிரியர்கள் அகப்பொருளுக்குரிய தலைவி முதலியோர் கூற்றாகப் பல பதிகங்களைப் பாடியுள்ளதைக் காணலாம்.

## அக இலக்கியத் தலைவி:

பழைய அக இலக்கியத்தில் ஒரு நிகழ்ச்சி வருகிறது காதல் வயப்பட்ட தலைவன் ஒருவன் தலைவியைக் காணப் புறப்பட்டு வருகிறான். அது நள்ளிரவு. வழியில் ஒரு காட்டாறு. மதயானைகளையும் அடித்துக்கொண்டு செல்லும் வேகத்தோடு வெள்ளம் ஓடுகிறது. அதையும் பொருட்படுத்தாது குறுக்கே பாய்ந்து நீந்தி வருகிறான். தலைவி சொன்ன குறிப்பிட்ட இடத்தில் வந்து நிற்கிறான்.

வீட்டிலுள்ள தலைவி "இந்நேரம் அவர் வந்திருப்பாரே" என்று தவிக்கிறாள். முன் கோபம் கொள்ளும் தந்தை இருக்கிறார். அவருக்குத் தெரியாமல் வெளியேற வேண்டும். எனவே காற் சிலம்பை ஓசையெழாதபடி கட்டிக்கொண்டு ஏணிமேல் ஏறித் தோட்டத்தில் இறங்கி, மழை "சோ"வெனப் பெய்யும் அந்த நள்ளிரவில் காதலன் அகலத்தைத் தழுவுகிறாள்.

## ஆன்மாவாகிய தலைவி:

இவளைப் போன்ற துணிவுள்ள தலைவியைத் திருநாவுக்கரசர் பதிகத்திற் காணலாம். திருவாரூர்ப் பெருமான்மீது காதல் வயப்பட்டுத் தன்வசம் அழிந்த தலைவி அவள். பக்குவப்பட்ட ஆன்மா தான் அந்தத் தலைவி. "அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்; அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை" என்று அவளது செயலைத் தோழி கூற்றாகக் குறிப்பிடுகிறார் நாவுக்கரசர். ஆன்மாவாகிய இந்தத் தலைவியின் செயல் அக இலக்கியத்தில் வரும் அந்தத் தலைவியின் செயலை நமக்கு நினைவூட்டுகிறது அல்லவா?

## உவமையளவிலே கொள்ளுதல்:

உயிரைத் தலைவியாக வைத்துப் பாடும் மரபினை ஒட்டியே இங்கும் நம் ஆசிரியர் உமாபதிசிவம் உயிரைப் பெண்ணாகக் குறிப்பிடுகிறார். உயிர் அருளோடு கூடிய அளவில் இன்பநிலை உண்டாகாது. உயிரும் சிவமும் கூடியபோதே இன்ப நிலை உண்டாகும் என்னும் பொருள்பட "இன்புண்டாம் ஒருவன் ஒருத்தி உறின்" எனக் கூறுகிறார். இங்கு இறைவன் ஆணாகவும் உயிர் பெண்ணாகவும் கூறப்பட்டுள்ள நிலையைக் காணலாம். இது கொண்டு, உயிர் இயற்கையிலே பெண்ணியல்பினது என்று கருதிவிடலாகாது. ஆண் பெண் என்னும் வேறுபாடு உடம்பிற்கேயன்றி உயிருக்கு இல்லை. எனவே, இச்செய்யுளில் ஒருவன் ஒருத்தி என்றதை உவமை என்ற அளவிலே மட்டும் கொள்ள வேண்டும்.

## இருவர் மடந்தையர்:

உயிர் கட்டு நிலையில் உலகைச் சார்ந்து நிற்கிறது. முத்தி நிலையில் இறைவனைச் சார்ந்து நிற்கிறது. எவ்விடத்திலும் இறைவனது துணையின்றி அதற்கு நிலையில்லை;

*நீ குறைவாகப் பேசும்போதுதான் கூடுதலாகச் செவிமடுக்கிறாய்.*

அறிவில்லை; செயலில்லை; வாழ்வில்லை. மணிவாசகர் இறைவனது திருவருட் சார்பு இல்லாமையால் தமக்கு ஏற்பட்ட நிலை பேறின்மையையும், வாட்டத்தையும் புலப்படுத்து வாராய், “கொம்பர் இல்லாக் கொடிபோல் அலமந்தனன்” என்று கூறுதல் காணலாம். இவ்வாறு எவ்விடத்தும் ஒரு துணையின்றித் தனித்து நிற்கும் இயல்பு இல்லாமை பற்றி உயிர் பெண்ணோடு உவமிக்கப்பட்டது.

சிவம் முதலாக இருக்க, அருள் அதன் குணமாக இருப்பது. முதலாகிய பொருளை விட்டுக் குணம் தனித்து நில்லாது. ஆசிரியர் உமாபதிசிவம் தமது சிவப்பிரகாச நூலில்,

“இறையவன் முதல்; அவன்றன்
இலங்கொளி சத்தியாமே”

என்று கூறியிருத்தல் காணலாம். இவ்வாறு சிவத்தையின்றித் தனித்து நிற்றல் கூடாமை பற்றிக் குணமாகிய அருளும் பெண்ணோடு உவமிக்கப்பட்டது.

### அருள்நிலையும் ஆனந்த நிலையும்:

உயிர் முதலில் திருவருளை உணர்ந்து அதனோடு கலந்து ஒற்றுமைப்படும். அவ்வாறு அருளோடு கூடிய அளவிலே உயிருக்கு இன்பநிலை உண்டாகாது. உயிரும் அருளும் பெண்டிர் நிலையில் உள்ளவையாதலின், பெண்டிர் இருவர் சேர்வதால் இன்பம் உண்டாகுமா? என்றார். அவ்வருள் தனக்கு முதலாக உள்ள சிவத்தைக் காட்ட, உயிர் சிவத்தையறிந்து அதில் அழுந்தும்போதே பேரின்பம் விளையும். இதனையே, “இன்புண்டாம் ஒருவன் ஒருத்தி உறின்” என்றார்.

அருள்நிலையை எய்தினார் அவ்வளவில் நில்லாது நிட்டை கூடலாகிய ஆனந்த நிலையை அடைதல் வேண்டும் என்பது இச்செய்யுளின் கருத்தாகும். (தொடரும்...

---

### வாசகர் உள்ளத்திலிருந்து...

சந்நிதிவேலனின் அருள்பெற்று அனைவருக்கும் அன்னம்பாலிக்கும் சுவாமி மோகனதாஸ் ஐயா அவர்களின் பெருமைதனை ஆண்டவனின் அருளுடன் - ஆசியுடன் சமர்ப்பிக்கலாம் என எண்ணுகிறேன்.

ஆம்! கடந்த இரண்டு வருடங்களாகவே எனக்கு ஐயா அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் கிட்டியது. மலையகத்தில் மண்சரிவில் சிக்குண்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய சுவாமி அவர்கள் அதனைத் தொடர்ந்து எத்தனையோ பல அறநெறிப் பாடசாலைகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் உயர்தரக் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கும் பதுளை மலையகச் சிறுவர்களுக்கும் (சிறுவர் இல்லம்) ஆலயங்களுக்கும் பல வகையிலும் உதவிகளைச் செய்துவருகின்றனர். முதலாவதாக அவரது அளப்பரிய பணியினைச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் கண்ணாரக் கண்டபோது மனமுருகி வார்த்தைகள் வர மறுத்தன. மாறாகக் கண்ணீர்தான் வந்தது. காரணம் நாயன்மார்களின் வரலாற்றில் நடந்தவற்றை நாம் புத்தகங்களில் படித்ததுண்டு. கண்ணாற் கண்டதில்லை. ஆனால் நம் கண்முன்னே நடைபெறும் விடயங்களை காணும்போது மெய் சிலிர்த்தது. எவ்வித எதிர்பார்ப்புமின்றி பசியென்று வந்தவர்களுக்கு இன்முகத்துடன் பசியைப் போக்கி அனுப்புவதும் அங்கிருக்கும் அனைவரும் தமது சிரமத்தையும் பாராது மகிழ்வுடன் உணவு பரிமாறுவதையும் கண்டபோது மனம் உருகியது. அதுமட்டுமன்றி தொலைவிலிருந்து செல்பவர்களுக்கு சகல உதவிகளையும் செய்துகொடுப்பது அதோடு அங்குள்ள ஆலயங்களுக்கு அழைத்துச் செல்வது போன்ற பணிகளையும் காண முடிந்தது.

சந்நிதி வேலவனின் அருள்பெற்று விளங்கும் எமது மோகனதாஸ் ஐயா அவர்களின் சேவை மென்மேலும் வளர எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

ஹப்புத்தளை -சிகாமணி. வெள்ளிமலர்-


*அறிவோடு கூடிய பொறுமை உள்ளவர் நிச்சயம் வெற்றி பெறுவார்.*

# பசுவை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்

– திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள் –

உலகம் எத்தனை விந்தைகளைக் கொண்டது. சிவனின் படைப்பை எண்ணிப் பார்ப்பவர்கள் எத்தனைபேர். உலகம் வேண்டும் அதனில் மண்ணும் வேண்டும், கடலும் வேண்டும் மரஞ்செடி கொடிகளும் வேண்டும். மழையும் வேண்டும் பிராணிகளும் விலங்குகளும் வேண்டும். அதற்குள் உயர்ந்த மனிதனையும் படைத்தான் சிவன். இவையெல்லாம் மனிதனுக்கு வேண்டும் வேண்டும் என மேலும் மேலும் ஆசைப்படுகின்றான் மனிதன்.

முட்டையிலிருந்து கோழிக் குஞ்சு வருகின்றது. குஞ்சுக்கு உணவு முட்டையில்தான் இருந்து எடுத்துக் கொள்கின்றது. குஞ்சு பொரித்து வெளிவந்ததும் தானே தன் வாயால் உணவு தேடி உண்கின்றது. விலங்குகளில் முலையூட்டி விலங்குவகைகளைப் பார்க்கின்றோம். பிள்ளையோ கன்றோ தாயின் வயிற்றில் வளர்கிறது. வயிற்றில் உள்ளபோதே தாயிடம் உணவு முதலியவற்றைப் பெற்றுக்கொள்கின்றது. ஆனால் தாயைக் குட்டி கொடுமைப் படுத்துவதில்லையே. கன்றையோ குட்டியையோ ஈன்ற பின்னாளில் சிறிதுகாலம் தன் முலைகளிலிருந்து பாலைக் கொடுத்து கன்றை வளர்க்கின்றது. ஆட்டுக்குட்டியோ பசுவில் பால் குடிப்பதில்லை. பசுக்கன்று எருமையில் பால்குடிப்பதில்லை. ஆனால் மனிதனோ எல்லாவற்றிலிருந்தும் பாலைப்பெற்றுக் குடிக்கின்றான்.



தாயின் வயிற்றில் பிள்ளை பத்து மாதம் வளர்கிறது. தாய் பிள்ளைக்கு வேண்டிய அத்தனையையும் தன்னில் இருந்து கொடுக்கின்றாள். குழந்தை பிறந்ததும் தாய் தன் பிள்ளைக்குப் பால் கொடுக்கின்றாள். வேறு யாருக்கும் கொடுக்கமாட்டாள். பிள்ளைக்குப் பால் கொடுக்கத்தான் பசுவின் பாலைக் குடிக்கின்றாள். போதாதென்று பிள்ளைக்கும் பசுவின் பாலை ஊட்டுகின்றாள். இது என்ன விந்தையா? விளையாட்டா? அறிவின் உச்சமா?

பசு தன் கன்றுக்குப் போதுமான பாலை மட்டும் சுரப்பதில்லையே ஏனைய உயிர்களுக்கும் பால் கொடுக்குமாறு சிவன் படைத்திருக்கின்றானே. என்ன விந்தை யோசித்துப் பார்த்தால் சிவனின் செயலன்றோ. இதனாலன்றோ இப்பாலை நம்மவர்கள் தெய்வத்துக்கும் அர்ப்பணமாக்குகின்றார்கள். கிரியைகளுக்குத் தேவையான பஞ்சகௌவியங்களைக் கொடுப்பதும் பசுவே. இதிலே பால்

முதன்மை பெறுகிறது. பாலிலிருந்து பெறும் தயிர், நெய் இத்தோடு கோசலம், கோமயம் ஆகியவற்றையும் தருவது பசுதான். மேலும் இறைவனுக்குச் செய்யும் அபிஷேகத்திலும் பால், தயிர், நெய், முக்கிய இடம்பெறுகிறது. விளக்கேற்றுவதற்கு சூழல் மாசடையாது சிறந்த எண்ணெய் பசு நெய்தானே. மேலும் நன்கு முதிர்ந்த பசுக்களிலிருந்து கோரோசனையும் பெறப்படுகின்றதல்லவா?

மேலை நாடுகளில் பசுக்களைச் சீராக வளர்த்து பாலைப்பெற்று அந்நாட்டில் வாழ்கின்றவர்கள் தேவைபோக எஞ்சிய பாலைக் கட்டியாக்கியும், பவுடராக்கியும் பால்மா வகைகளாக ஏற்றுமதி செய்து பணம் சம்பாதிக்கின்றார்கள். பசுதான் அவர்களுக்கு செல்வமாக உள்ளதே. இதனால் அவர்கள் ஆரோக்கியமாகவும் சந்தோசமாகவும் மகிழ்வுடனும் வாழ்கின்றார்கள், ஆனால் நம் நாடு எங்கே? சிந்திக்கின்றீர்களா?

குழந்தை பிறக்கின்ற காலத்தில் சில தாய்மார்கள் இறந்திடுவார்கள். இக்குழந்தைக்குப் பால் கொடுப்பது யார்? ஒரு தாய் தன் பிள்ளைக்கு மட்டும்தானே பால் கொடுப்பாள். அதுவும் கொடுக்காத சில தாய்மார்களும் உண்டு. அழகு கெட்டுவிடுமாம். அவர்களைத் தாயென்று சொல்ல முடியுமா? ஆனால் தாயில்லாத குழந்தைகள் மட்டுமன்றி ஏனைய குழந்தைகளுக்கும் பசு தாயாகிறது. இதனாலன்றோ கோமாதா எங்கள் குலமாதா என்கின்றார்கள். பசுப்பாலே அப்பிள்ளைகளுக்கு உணவாகிறது. தாய்ப்பால் குடித்து வளராத மனிதர்கள் இந்த உலகத்தில் வாழலாம். ஆனால் பசுப்பால் குடித்து வளராத மனிதர்கள் இருக்க முடியுமா? சிந்தியுங்கள் எல்லோரும் பசுப்பால் குடித்தீர்கள்தானே.

தேனீர், கோப்பியிலும், பால். ஐஸ் கிறீம் வகைகளிலும் பால்தான். சொக்கிலேட் வகைகளிலும், பிஸ்கற் வகைகளிலும் இன்னும் எத்தனை தின்பண்டங்களிலும் பசுப் பாலே பயன்படுகிறது. லக்ஸ்பிறே, அங்கர், கைலண்ட் என்கிறீர்களே அதுவும் பசுப்பாலில் இருந்துதானே உருவாக்கப்பட்டது. இவற்றை உண்ணாதவர்கள் யாரும் உளரோ? இவர்களுக்கெல்லாம் பசு தாயல்லவா? "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது பழமொழி. அப்படியானால் பால் கொடுத்த பசுவை எவ்வளவு காலம் வரை நினைக்கவேண்டும்,போற்ற வேண்டும் என்பதை யோசிக்க முடிகிறதா?

தாரா ஒன்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொன் முட்டை இட்டு வந்ததாம். அதை வளர்த்தவன் அந்தப் பொன் முட்டைகளை எடுத்து விற்றுப் பணக்காரன் ஆனான். அவனுக்கு ஆசை அதிகரித்தது. அது பேராசையானது. பேராசை பெரு நட்டம் என்பது உங்களுக்குத் தெரியுமே. அதேபோல் அவனும் படித்திருந்தான். ஆனால் ஆசை யாரைத்தான் வாழ வைத்தது. ஒருநாள் தாராவை வெட்டினால் அதன் வயிற்றில் பல பொன் முட்டைகள் இருக்கும் என எண்ணினான். அவற்றை எல்லாம் விற்றால் நான் கோடீஸ்வரனாகி விடுவேனே என நினைத்தான். நாங்களும் சிலவேளை இவ்வாறுதான் கோட்டை கட்டுவோம். நீங்களும் கற்பனைக் கோட்டைகட்டி விடாதீர்கள். தாராவின் வயிற்றை ஒரு வாளால் வெட்டினான். வயிற்றில் ஒரு பொன்முட்டையே இருந்தது. அதுவும் வெட்டுண்டது. தாராவும் இறந்தது. பொன் முட்டை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளும் கிடைக்காமலேயே போனது. தன் மதியீனத்தை எண்ணிக் கவலைப்பட்டான். முன்னல்லவா யோசிக்கவேண்டும். தாராவை வெட்டிய கொலைப் பாவமும் அவனைப் பற்றிக்கொண்டது அல்லவா? இக்கதைகளை எல்லாம் நீங்களும் படித்திருக்கின்றீர்களே. மேலும் பலவற்றைப் படித்திருக்கின்றீர்களே.

*நூல் நிலையம் இல்லாத வீடு, உயிரில்லாத உடம்பைப் போன்றது.*

பட்டங்களும் பெற்றிருக்கின்றீர்களே- இதன் பிற்பாடும் இவ்வகையான கொடுமையான பாவம் தரும் செயல்களைச் செய்யலாமா? சிந்தியுங்கள் நான் செய்யவில்லையே, நாம் கொல்லவில்லையே என்று சிந்திப்பது விளங்கு கின்றது. ஆனால் நீங்களும் காரணமாகவே உள்ளீர்கள்.

உலக மனிதர்களையே வாழ வைக்கும்- நிறையுணவை உற்பத்தியாக்கும் பசுக்களோ ஒரு தொழிற்சாலைக்கு மேலான பணியைச் செய்கின்றது. இப்பசுக்கள் மனிதருக்குப் பயன்படும் உணவுகளை உண்பதில்லையே. மனிதருக்கு வேண்டிய உணவை எடுத்துவிட மிகுதிக் கழிவுகளையே உணவாக உட்கொள்கின்றது. புல், பூண்டுகள், வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு, உழுந்து, பயறுக் கோதுகள், இலைகுழைகள் என்பனவே உணவாகிறது. பசு இவற்றை எல்லாம் உண்டு சத்துக்கள் அடங்கிய சுவையான பாலைத் தருகின்றது. இப்பசுவை நாம் சரியான முறையில் வளர்க்கின்றோமா? பராமரிக்கின்றோமா. இன்று பசுக்களின் எண்ணிக்கை குறைவடைவதேன்.

பசுவில் நாம் நித்தம் வழிபாடு செய்யும் பிள்ளையார், சிவபெருமான், உமை, முருகன், நாராயணன், வீரபத்திரர், மகாலட்சுமி, கல்வியைத் தரும் சரஸ்வதி, ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்கள் மட்டுமன்றி முப்பத்து முக்கோடி தேவர்களும் விரும்பி உறைந்து கொள்கின்றார்கள். இதனாலன்றோ கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற முன்னர் பசுவை சில நாட்களுக்கு கோயில்களுக்குள் கட்டி வளர்க்கின்றார்கள். புது மனையை அமைத்த பின்னர் புதுமனைப் பிரவேசம் நடைபெற முன்னர் வீட்டிற்குள் கட்டி வளர்க்கின்றார்கள். இது மட்டுமா கோயில்களில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதும் திருக்கதவு சாத்தப்படும். முன்னே நிறைகுடம், குத்துவிளக்கு, கண்ணாடி, பிராமணோத்தமர்கள், பிரமச்சரியன், இல்லறத்தான், துறவி, எஜமானர்கள், பக்த சனங்கள் ஆகியவற்றோடு பசுவையும் அதாவது கன்றுடன் கூடிய தாய்ப்பசுவையும் அழைத்துப் பசுவுக்குப் பூசை செய்து தேவாரம்பாடி திருக்கதவைத் திறந்து எம்பெருமானே பசுவில் தனது பார்வையை முதலில் செலுத்துகின்றார் என்றால் நாமெல்லோரும் தினமும் காலையில் எழுந்து பசுவைத் தரிசனம் செய்தால் அன்றைய தினம் தீமைகளகன்று நன்மைகள் விளையுமல்லவா?

கடவுளைத் தினமும் வழிபாடு செய்வது அவசியமானதுபோல பசுவுக்கும் ஒருபிடி புல்லோ, குழையோ கொடுத்துப் பசுவை வழிபடுவதும் இன்றியமையாததேயாம். மற்றவர்களோடு உரையாடுகையில் இன்சொல் பேச வேண்டும் என்று பலரும் கூறுகிறார்கள். நாமும் இதனை ஏற்றுக்கொள்கின்றோம். உண்ணும் வேளையில் மற்றவர்களுக்கும் கொடுத்துண்ண வேண்டும் என நமக்கு காக்கையே வழிகாட்டுகிறது. இதனையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோமல்லவா? இதனாலன்றோ "எள்ளென்றாலும் ஏழாய்ப் பங்கிட்டு உண்" என்றார்கள். இவற்றையே பின்வரும் திருமந்திரப் பாடலும் தெளிவு படுத்துகின்றது.

"யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

எனவே சிறுவர் முதல் பெரியோர் வரை ஆண்கள் முதல் பெண்கள் வரை இக்காரியங்களை தினமும் செய்து கொண்டால் எவ்வளவு நன்மை விளையும் என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா?

எம் முன்னோர்கள் எல்லோரும் இதனை உணர்ந்துதான் வீட்டுக்கொரு பசு வளர்த்தார்கள். பசுவை வழிபட்டார்கள்;

*உன் கஷ்டங்களை மறப்பதற்கு இறைவனை நினை.*

பசுவைத் தரிசித்தார்கள். நல்ல பயன்களைப் பெற்றார்கள். தம் குடும்ப உறுப்பினர்போல் பேணினார்கள். இவ்வாறு இருந்த காலத்தில் நமது சமயத்தை தூஷிக்க வந்த போர்த்துக் கேயர் நாம் வணங்கும் பசுவை வெட்டி தாம் உண்டால் எம் பண்பாடு சீரழியும் என வீட்டுக் கொரு பசு தினமும் தரவேண்டும் என வாங்கினார்கள்.

இவ்வாறு பசுவைக் கொடுத்து வரும் போதில் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் நன்கு யோசித்தார். நான் பசுவைக் கொலை செய்யக் கொடுப்பதா. பசுவை வளர்ப்பதற்கு தானமாகக் கொடுப்பது புண்ணியத்தின் மேல் புண்ணியம். பசுவை வெட்டி உண்ணக் கொடுப்பது மகா கொடியபாவம் என்பதை உணர்ந்து இரவோடு இரவாகப் பசுவையும் கன்றையும் அழைத்துக்கொண்டு தானும் கடல் கடந்து இந்தியா சென்றார். இப் புண்ணிய கைங்கரியம் செய்து பசுவைக் காப்பாற்றியதால் உயர்ந்த ஞானியானார். சிதம்பரத்தில் பலநாள் வாழ்ந்து பல நூல் களை எழுதினார். சைவ சித்தாந்த நூல் களுக்கு உரை எழுதினார். பேரின்ப முத்தி கண்டார். யாழ்ப்பாணத்தவருக்குப் பெருமை யும் தேடிக் கொடுத்தார். இவற்றையும் நாம் அறிய வேண்டும்.

பசுவை வெட்டிய போர்த்துக்கேயனும் போய்விட்டான். ஆனால் போர்த்துக்கேயன் அல்ல நம்மவர்களே நாம் பெரியவர்கள், உயர்சாதியில் பிறந்தவர்கள். நம் முன்னோர் கள் சிவபூசை செய்தவர்கள் ஆலய பரிபால கர்கள் என்று சொல்லிக்கொண்டு மாட்டிறைச் சிக்காக கடைகளில் கியூவில் நிற்கிறார்களே- இது பகுத்தறிவுள்ள மனிதன் செயலாகுமா? சைவர்களென்றால் பஞ்சமா பாதகத்தை செய்யாதவர்களன்றோ. எமது சமயத்தைப் பின்பற்றிவந்த பௌத்தர்களோ பசுவைக் கொலை செய்யவில்லை. மாட்டிறைச்சியை விரும்பிப் புசிக்கவில்லை. பசுவைப் பாது காக்க வேண்டும் எனத் தொழிற்படுகின்றார் கள். இலங்கை அரசாங்கமே பசுவைக் கொலை செய்வது பிழையானது குற்றமான செயல் என பசுக்கொலை செய்யக் கூடாது எனச் சட்டமியற்றிப் பாதுகாக்க முனை கின்றது.

ஆனால் தமிழர்களோ நல்ல பண்பாடு உடையவர்கள் எனக் கூறிக்கொண்டு சட்டத் தையும் மீறிக்கொலை செய்கின்றார்களே. இதற்குச் சில அதிகாரிகளும் துணைபோகின் றார்களே. அனுமதி வழங்குகிறார்களா என்று சிந்திக்கும்போது மனம் வெதும்புகிறதில் லையா, இத்தனைக்கும் மேலான கொடிய பாவத்தையல்லவா சம்பாதிக்கின்றார்கள்.

தன் இரத்தத்தையே பாலாக்கி நமக் குத் தரும் பசுக்களுக்கு இந்தக் கொடு மையா? அப்படியானால் மனிதன் தன்னைத் துன்பப்படுத்துவது பிழை என்கின்றார்களே இது எவ்வளவு தூரம் பொருத்தமானதாகும்.

எமது உடலில் தோல் காயப்பட்டு சிதைந்து உள்ளே உள்ள தசை தெரிந்தால் அது புண் என்கின்றார்களே. மணக்கிறது என கைகளாலேயே தொட அருவருகின்றார் களே. விஞ்ஞானம் படித்திருக்கின்றீர்கள் அல் லவா? எம் தசைக்கும் மாட்டின் தசைக்கும் வித்தியாசமுண்டா? அப்படியானால் புண்ணை யல்லவா சீ, வாயிலிட்டு ருசிக்கின்றீர்கள். பகுத்தறிவுள்ள மனிதனே சிந்தித்துப் பார்.

மாமிசத்தை ருசித்துப் புசித்தவர்கள் என்னதான் கோயில்களில் வழிபட்டாலென்ன அபிஷேகம், பூசை, திருவிழா என்பவற்றைச் செய்து கொண்டாலென்ன புண்ணியம் கிடைக்குமா? விமோசனம் வருமோ? கடவுள் தான் பாவம் என்று எவ்வாறு வரம் கொடுக்க முடியும்.

திருமண வீடுகளில் மணமக்கள் நன் றாக வளரவேண்டும் பதினாறு வகையான

*முடியும் என்பதே நம்பிக்கையின் ஆரம்பம்.*

செல்வங்களும் பெறவேண்டும் என்ற நோக்கில் மாங்கல்யம் சூடியபின் பசுவுக்கு உணவு கொடுத்துப் பசுவை வழிபடுகின்றார்கள். பலர் முன்னிலையில் பசுவை வழிபட்டு விட்டு மறைவாக மாட்டிறைச்சியைப் புசித்தால் எவ்வளவு கொடுமையானது. தன் உயிருக்குத் தானே உலைவைக்கும் நிலையல்லவா? நன்றிகெட்ட மனிதர்களே தாயைக் கொன்ற பாவத்தைவிட மேலான பாவம் பசுவைக் கொன்ற பாவம். இவ்வகைப் பாவச் செயல்கள் இந்தப் பிறப்பிலேயே அவனுக்கு தீமையைக் கொடுப்பதோடு மறு பிறப்புக்களிலும் துன்பங்களை அனுபவிக்கச் செய்யும் என்பதைப் பலர் உணருவதில்லை.

பசுவை வெட்டிக் கொலை செய்தவன் அடுத்த பிறவி பசுவாகப் பிறக்க அதை இன்னொருவன் வெட்டிக் கொலை செய்து உண்பான். அப்போதுதான வேதனை புரியும். "தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்கும்" என்பார்கள். இவ்வாறு தான் ஒருவர் பசுமாட்டிறைச்சியைச் சுவைத்து ருசித்துப் புசித்து வந்தார். ஒரு நாள் இவருடைய மாட்டையே திருடர்கள் திருடிச்சென்று வெட்டிக் கொலை செய்து இறைச்சியாக்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள். தலை அப்படியே இருந்தது. சென்று பார்த்தார் கண்களிலிருந்து கண்ணீர் வடிவதைப் பார்த்தார். இதன்பின் தான்மட்டுமன்றி அயலவர்களையும் இறைச்சி சாப்பிடுவதை விட்டுவிடச் செய்தார்.

பெரியோர்களே! நண்பர்களே! முற்காலங்களில் பசுவின் எருவைப் பசளையாகப் பயன்படுத்தினர். நிலத்திற்கும் தாவர உணவிற்கும் நீர் நிலைகளுக்கும் மனிதருக்கும் மாசுக்கள் சேரவில்லை. இன்று நவீன பசளைகள் சூழலை மாசடையச்செய்து மனிதனுக்குப் புற்றுநோய் போன்ற பல நோய்கள் ஏற்படுகிறது. எனவே பசுக்களைப் பேணி, நீராட்டி, பொங்கல் பொங்கிப் படையல் செய்து பூசை செய்து பசுவைப் போற்றுவோம் பசுவைப் பாதுகாப்போம். பசுவதையை நிறுத்துவோம் என்ற உறுதி மொழிகளை நாம் இதயபூர்வமாக ஏற்றுக்கொள்வோம். பயன் பெறுவோம்.

# குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 02 | பங்குனி | 19 | திங்கள் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 12 | பங்குனி | 29 | வியாழன் | பரமகுரு சுவாமிகள் |
| ஏப்ரல் | 17 | சித்திரை | 04 | செவ்வாய் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 19 | சித்திரை | 06 | வியாழன் | மங்கையற்கரசியார் |
| மே | 09 | சித்திரை | 26 | புதன் | திருநாவுக்கரசர் |
| மே | 20 | வைகாசி | 06 | ஞாயிறு | நமிநந்தியடிகள் |
| | | | | | சேக்கிழார் |
| மே | 31 | வைகாசி | 17 | வியாழன் | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |

*நீ பேசுவது எதுவானாலும் ஒருமுறை யோசிப்பது நன்று.*

(தொடர் -06)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

வாழ்க்கை என்பது ஒரு கூட்டமைப்பு. ஒவ்வொன்றும் தனித்தனியானவைபோல் தோன்றினாலும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்பு கொண்டவை. வாழ்க்கையை எளிமைப் படுத்துவதற்காக சைவ சமயத்தவர் தனித்தனிப் பகுதிகளாக்கி, அதற்குரிய இயல்புகளைச் சொன்னார்களே தவிர, ஒன்றில்லாமல் இன்னொன்றில்லை என்பதையும் வரிசைப் படுத்திய முறையில் அருமையாக அமைத்துக் காட்டினார்கள்.

அறம் என்பதற்கு தர்மம் என்று பொதுவாக அர்த்தம் சொன்னாலும், வாழ்க்கையை வாழ்கின்ற முறைப்படி வாழ்வதுதான் அறம். ஒருவன் தனி மனிதனாகவும், சமுதாயத்தில் ஒருவனாகவும் வாழவேண்டிய நிலையில் இருக்கிறான். வாழ்க்கையில் தனக்கும் அவன் நியாயம் வழங்க வேண்டும். சமுதாயத்திற்கும் நியாயம். வழங்க வேண்டும். அவன் எந்த நிலையில் இருந்தாலும் இது நடைபெற வேண்டும் அந்த நிலைகளை இரண்டாகப் பிரித்தார்கள். அதாவது அற வாழ்க்கையை இரண்டு நிலைகளாக்கிக் காட்டினார்கள். ஒன்று இல்லற வாழ்க்கை, இன்னொன்று துறவற வாழ்க்கை.

திருமணம் செய்துகொண்டு மனைவி மக்களுடன் வாழ்க்கை நடத்துவதும் அறம் தான். பற்றற்ற நிலையில் தனித்து வாழ்கின்ற துறவு வாழ்க்கையும் அறம்தான். இரண்டையும் சைவ சமயம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. காரணம், இரண்டுமே சமுதாய மேம்பாட்டுக்குத் தேவை என்பதுதான். இல்லற வாழ்க்கையில் வாழ்கின்றவனுடைய கடமைகள் வேறு, துறவற வாழ்க்கையில் வாழ்கின்றவனுடைய கடமைகள் வேறு. ஆனால் இல்லற வாழ்க்கையில் வாழ்கின்றவன் துறவிகளின் வாழ்க்கைத் தேவைகளைப்பூர்த்தி செய்கின்றவனாகவும் இருக்கவேண்டுமென சமயம் வற்புறுத்துகிறது.

உண்மைத் துறவிகள் தங்களுக்கென்று எதுவும் இல்லாதவர்கள். அவர்களின் தேவைகளைக் கவனிப்பது சமுதாயக் கடமை. அந்த சமுதாயக் கடமையினை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இல்லறத்தில் இருப்பவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

துறவு வாழ்வு என்பது தூய்மையின் வெளிப்பாடாகும். துறவிகள் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்தார்கள். எனது வாழ்வில் நான் சந்தித்த, என்னில் தாக்கத்தை மாற்றத்தை ஏற்படுத்திய துறவிகள் பற்றிய எனது பார்வையை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன்.

எனது பாடசாலை நாட்களில் கவிஞர் கண்ணதாசனின் நூல்களை அதிகளவில் படித்தேன். பெரும்பாலான அவரது நூல்கள் காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகள் (பெரிய சுவாமி) பற்றிய அதிகளவு மேற்கோள்கள் காணப்பட்டன. அவற்றை வாசித்தபொழுது அவரைப் பார்க்கவேண்டும் என்ற உள் உணர்வு ஏற்பட்டது. 1978ஆம் ஆண்டு தை மாதம் பெரியவரைப் பார்க்க வேண்டும் என்று சென்னை புறப்பட்டேன். அங்கிருந்து காஞ்சிபுரம் நோக்கி பயணம். பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து இடத்தை விசாரித்துக்கொண்டு சங்கர மடத்தை

அடைந்தேன். எனக்குக் கிடைத்த தகவல் பெரியவர் ஊரில் இல்லை. எப்ப வருவார் என்று தெரியாது. மிகுந்த வேதனையுடன் சென்னை திரும்பி இலங்கைக்கு வந்தேன். இதே போன்று 1979இல் மீண்டும் நடைபெற்றது.

1980ஆம் ஆண்டு பங்குனி மாதம் மீண்டும் பயணம். ஆனால் இம்முறை மனதில் முடிந்த முடிவாக பெரியவரைப் பார்த்தே ஆக வேண்டும் என்று திடமாக எண்ணிக் கொண்டேன். சென்னையை அடைந்தேன். காஞ்சிபுரம் சென்றேன். வழமைக்கு மாறாக லொட்ஜில் தங்குவதற்கு அறை எடுத்தேன். குளித்து வேட்டியும் கட்டிக்கொண்டு மாலை 6 மணியிருக்கும் நடந்து செல்கிறேன். காஞ்சி காமாட்சி அம்மன் கோவில் வீதியில் சுவாமி தங்கரதம் பவனி நடந்துகொண்டிருந்தது. அற்புதமான காட்சியைக் கண்டேன். மனதில் ஒரு நம்பிக்கை பிறந்தது. காஞ்சி பீடத்தை நோக்கி நடந்தேன். என்ன ஆச்சரியம், காஞ்சிப் பெரியவர் வாசலில் நின்றார். கண்கள் ஈரமாகி இந்தச் சம்பவத்தை எழுதுகிறேன். எனது மகிழ்வுக்கு அளவில்லை. அருகில் சென்றேன்; ஆசீர்வாதம் கிடைத்தது. இலங்கையிலிருந்தா வாரே? பெரியவரின் கேள்வி. என்னை திக்குமுக்காடச் செய்தது. உள்ளே அழைத்துச் சென்றார்; பிரசாதம் கொடுத்தனர்; பெரியபுராணம், ஆதிசங்கரர், பஜகோவிந்தம் அடங்கிய நூல்களும் படமும் எனக்குத் தந்தார். எனது வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் என்றும் மறக்கமுடியாதது. பின்னர் சுவாமி அமரராவதற்கு முன்னர் மூன்று தடவைகள் தரிசனம் கிடைத்தது. அவர் தந்த பெரியபுராணம் அடியேனைப் பக்குவப்படுத்தி சமய வாழ்விற்கு கொண்டு வந்தது. இதன் பின்னர்தான் ஆலயங்களில் பேச ஆரம்பித்தேன்; பேசிக்கொண்டிருக்கிறேன்.

எனது வாழ்வில் நடந்த இந்தச் சம்பவத்தில் முக்கிய விடயம் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். முதலில் காஞ்சிபுரம் சென்றபொழுதெல்லாம் பெரியவரைப் பார்ப்பது என்பது எனது மனதில் "மனிதர்" ஒருவரைப் பார்க்க வேண்டும்; உடனே திரும்பிச் சென்னை வரவேண்டும் என்றளவில்தான் இருந்தது. பார்த்தே ஆகவேண்டும் என்ற வைராக்கிய எண்ணம் ஏற்பட்ட பின்னர் மிகச் சுலபமாக பார்க்க முடிந்தது. நமது சமயம் சொல்லும் அடிப்படை "நம்பிக்கை" என்பதுதானே.

காஞ்சிப் பெரியவர் அரண்மனை போன்ற கட்டடத்தில் மண் குடிசை அமைத்து, மண் சட்டியில் சமைத்து உண்டு, வாழ்ந்தார். எளிமை அவரிடம் குடிகொண்டு இருந்தது. நாலுமுழ வேட்டியும், பின்னாளில் கைத்தடியுடன் குனிந்த தோற்றம். இதுவே காஞ்சிப் பெரியார். ஏழை மக்களுக்காக ஊர் ஊராகச் சென்றார். இன்றுள்ள காஞ்சிபீடம் முற்றிலும் மாறுபட்டது. அண்மையில் அமரராகிய "கயேந்திரர்" பற்றிய எனது கருத்து வேறுபட்டது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து நான் கண்டவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். இவர் ஆதீனத்திற்குள் முடங்கியிருந்ததில்லை. சமயப் பிரசாரங்கள், பட்டிமன்றம், வழக்காடு மன்றங்களுடன், அரசியல் மேடையில் அவ்வப்போது தோன்றினார். அவரினால் எழுதப்பட்ட நூல்கள் சிறந்த சமூகச் சிந்தனைகளைக் கொண்டவை. குடிசை வீடுகளினுள் நுழைந்து, அவர்களின் தேவைகள் என்ன? என்று கேட்டறிந்து குடிசைக் கைத்தொழிலாக பல தொழில்களை உருவாக்கினார். இவைதான் துறவிகளின் செயல்.

ஆனால் இன்று, இந்தியா முழுவதும் போலிச் சாமியார்கள் இருப்பதாக ஒரு பட்டியலே வெளியாகி இருக்கிறது. அந்தப் போலிச் சாமியார்களின் பெயரில் இலங்கை

அன்பர்கள் சிலர் இங்கும் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது விடயத்தில் சைவப் பெருமக்கள் கவனமாக இருக்க வேண்டும். இத்தகைய அமைப்புக்கள்மீது கூடிய கவனம் தேவைப்படுகிறது. போலிச் சாமியார்களை சிவபூமியாகிய எமது பிரதேசத்தில் நுழையவிடக்கூடாது என்பது எனது கருத்தாகும். உண்மைத் துறவுக்கு மதிப்பளிப்போம். அவர்களின் சமூக சேவைக்கு தலை வணங்குவோம். இன்று நமது சிவ பூமிக்குத் தேவைப்படும் நல்ல விடயங்களை முன்னெடுக்க உறுதுணையாக இருப்போம். அண்மையில் சந்நிதியான் ஆச்சிரமம் மாணவர்களைக் கௌரவித்ததை இவ்விடத்தில் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

ஒருவன் ஒருத்தியுடன் வாழ்ந்து குழந்தைகளைப் பெற்றுக் குடும்பம் நடத்துவது இல்லறமாகும். வள்ளுவர் சொல்கிறார்,

**"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"**

அறம் எனச் சொல்லப்படுவது குடும்ப வாழ்க்கையினையே ஆகும். அந்தக் குடும்ப வாழ்க்கையும் எவராலும் பழிக்கப்படாமல் நடைபெறுமாயின் அது மேலும் சிறந்ததாகும். குடும்ப வாழ்க்கைதான் சைவ சமயத்தின் அத்திவாரம். இங்கு அமைந்துள்ள குடும்ப வாழ்க்கைபோல் உலகில் வேறு எந்தச் சமுதாயத்திலும் இவ்வளவு கட்டுப்பாட்டுடனும், ஒழுங்குடனும் நடைபெறுவதாகச் சொல்லமுடியாது. காரணம் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு வெறும் ஒப்பந்தம் அல்ல; வாழ்க்கை ஒப்பந்தம்.

திருமணச் சடங்கின்போதே கணவன் மனைவிக்கு வாக்குறுதி அளிக்கிறான். "இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்நாள் பூராகவும், எக்காரணம் கொண்டும் உன்னைவிட்டு நான் பிரியமாட்டேன்" என்று சத்தியம் செய்கிறான். "கடைசி வரையில் நான் கற்புள்ளவளாக உன் ஒருவனுக்கு சொந்தமானவளாக வாழ்வேன்" என்று மனைவி கணவனுக்கு உறுதி மொழி கொடுக்கிறாள்.

இவ்விடத்தில் ஒரு பழைய நிகழ்வைக் குறிப்பிடலாம் எனக் கருதுகிறேன். 1961ஆம் ஆண்டு பழைய பிரியாத ரஷ்யா நாட்டில் கலாசார விழாவொன்று நடைபெற்றது. இவ்விழாவுக்கு இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து அன்று பிரபலமாகவிருந்த கலைவாணர் N.S. கிருஷ்ணன் மதுரம் தம்பதியினர் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். விழாவிற்குச் சென்றவர்களைத் தொலைக்காட்சி அலைவரிசையொன்று செவ்வி கண்டது. அந்நிகழ்வில் கலைவாணரிடம் "உங்கள் நாட்டில் எதனைச் சிறப்பாகக் கருதுகிறீர்கள் எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில், "தமிழ்நாட்டின் சிறப்பு எங்கள் குடும்ப வாழ்வுதான்" எனக் குறிப்பிட்டார். இன்றைய இளைஞர்களுக்கு இதனை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நமது சமயம் வெறுமனே வீடு பேறைப் பற்றி எடுத்துக்கூறிய சமயமல்ல. நல்ல குடும்ப வாழ்வுதான் வீடுபேற்றுக்குச் சுலபமான வழி எனக் காட்டியுள்ளது. திருமணத்துக்குப் பிறகு கணவன் மனைவியிடையே கருத்துவேறுபாடு தோன்றாது என்று சொல்லுவதற்கில்லை. தோன்றத்தான் செய்யும். வாக்குவாதங்கள் வரலாம். கோப தாபங்கள் ஏற்படலாம். சண்டை சச்சரவுகள் மூளலாம். ஆனால் பந்தம் மட்டும் அறுபடுவதே இல்லை. இது தமிழர்களின் குடும்பங்களில் உள்ள ஒரு சிறப்பான விடயமாகும். "கணவன் பலமாகக் குறட்டை விடுகிறான், அதனால் என் தூக்கம் கெட்டுப் போகிறது" என எந்த மனைவியும் கணவனிடம் இங்கே விவாகரத்து

கோர முடியாது. "கணவனின் சிகரெட் பிடிக்கும் பழக்கம் எனக்குப் பிடிக்கவில்லை, ஆகவே அவருடன் சேர்ந்து வாழ எனக்குப் பிடிக்கவில்லை" என்று மனைவி வழக்குத் தொடுக்க முடியாது. மனைவி தொலைக் காட்சி பார்ப்பதிலேயே கவனமாக இருக் கிறாள், எனக்குத் தேவையானவற்றைச் செய் வதில்லை என கணவன் நீதிமன்றம் செல்ல முடியாது; செல்லக் கூடாது. (தொலைக் காட்சி பார்க்கிறாள், என்னைக் கவனிப் பதில்லை. எனக்கு இவளிடமிருந்து விடு தலை தாருங்கள் எனக் கேட்டு நீதிமன்றத் தில் வழக்குள்ளது)

மேலை நாடுகளில் இம்மாதிரி வழக்கு களும் விவாகரத்தும் சர்வ சாதாரணம். பிடிக்காத வீட்டைக் காலிசெய்துவிட்டு வேறு வீட்டுக்கு குடிபோவதைப்போல, கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் ஒதுக்கிவிட்டு புது நபர்களைத் தேடிக்கொள்ளும் பழக்கம் இங்கே இருக்கமுடியாது. இவர் என்னுடைய ஐந்தாவது கணவர். இவள் என்னுடைய மூன்றாவது மனைவி என்கிற உரையாடல் களை இங்கே கேட்க முடியாது.

கணவனும் விவாகரத்து ஆனவன். மனைவியும் விவாகரத்து ஆனவள். விவா கரத்து ஆன இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள். புதிதாகக் குழந்தைகளையும் பெற்றார்கள். ஒருநாள் வீட்டில் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்து கணவன் மனைவி யிடம் சொன்னான் "உன்னுடைய குழந்தை களும் என்னுடைய குழந்தைகளும் நம் முடைய குழந்தைகளுடன் எவ்வளவு மகிழ் வாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள், பார்த்தாயா?

இம் மாதிரிக் காட்சிகளை சைவ சமய சமுதாயத்தில் கற்பனை செய்துகூடப் பார்க் கக்கூடாது. ஒருவனுக்கு ஒருத்தி என்பது இங்கே தீர்மானிக்கப்பட்ட விடயம். வாழ்க்கை யில் கணவன் மனைவியாக ஒன்றுபட்டவர் கள் சேர்ந்து வாழமுடியாமல் போனால் என்ன செய்வது?

(தொடரும்...

## பாலிக்கும் ஆச்சிரமம்

பழையபடி இந்தமண் கல்வியில் பேறாகப்
பாலித்ததே மாணவர் கௌரவிப்பு நிறைவாக
மழையாகச் சந்நிதியான் ஆச்சிரமம் நல்கிய
மாணவர் உபகாரம் வடமாகாணத்தை உயர்த்துமே.

தேசியம் மாகாணம் இரண்டிலும் தேறிய
தீர்க்கதரிசிகளே இந்த உயர்தர மாணவர்கள்;
ஆசியோடும் ஆசையோடும் நன்றாகப் படித்து
அதிசயமாகி அற்புதம் செய்வீர் ஆண்டிடுவீர்.

-கே.எஸ். சிவஞானராஜா-

உன் நண்பனுக்காகக்கூட உண்மையைச் சொல்ல மறுக்காதே.

# எமது சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் பொறுப்பானவர்கள் பெற்றோர் - ஆசிரியர்கள்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

நம் சந்ததி பெருகுவதற்குச் சமுதாய வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். எமது சந்ததி தற்பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல் மிகவும் சுருங்கிவிட்டது. வெளிநாட்டு மோகம் மக்களிடம் ஏற்பட்டதினால் தன் ஊரை மறந்து வெளிநாடு செல்கின்றனர். இதனால் எமது சனத்தொகை குறைவடைந்துள்ளது. பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம், அவர்கள் உள்ளத்தை மனம் மாறச் செய்துவிட்டது. இதனால் எமது சமுதாயம் கலாசாரங்களை மறந்து மேல்நாட்டு மோகத்தில் அலைந்து திரிகின்றனர். எமது சமுதாய வளர்ச்சி குறைவடைவதுடன் பழக்க வழக்கங்களும் மாறுதல் அடைகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. எனவே பெற்றோரும் ஆசிரியர்களும் இத்தருணத்தில் சமுதாயத்தை நன்னெறியில் கொண்டுவர அயராது உழைக்க வேண்டும். இது எல்லோர் பொறுப்பும் கடமையுமாகும்.

விஞ்ஞானம் அதி உச்சப் பாதையில் சென்று கொண்டிருப்பதினால், மனிதனின் பொருளாதார வளர்ச்சியும் கல்வி அறிவும் அதிவேகத்தில் வளரவேண்டும். இதற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக பிள்ளைகளுக்கு உதவவேண்டும். எமது கலாசார விழுமியங்கள் மிகவும் பேணப்படவேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளை அதிகாலையில் எழச்செய்து, காலைக் கடன்களை முடித்து, விபூதி அணிந்து, சுவாமி அறையில் சென்று பெற்றோர் தேவாரம் படித்து இறைவணக்கம் செய்ய வேண்டும். இதைப் பார்த்து பிள்ளையும் தினமும் சுவாமி அறை சென்று தேவாரம் பாடித் தீப ஆராதனை செய்து கடவுள் வணக்கம் செய்யும். இம்முறையைத் தினந் தோறும் செய்துவர பிள்ளைக்கு கடவுள் நம்பிக்கை ஏற்படும். பெற்றோர் கண்கண்ட தெய்வம் என்ற மனப்பாங்கு ஏற்படும். பெரியோருக்கு கீழ்ப்படிய வேண்டும், தந்தை தாய் சொல்லைத் தட்டக்கூடாது, பொய் பேசக் கூடாது, பிறர் பொருளை அபகரிக்கக் கூடாது, எல்லோருடனும் அன்பாகப் பேச வேண்டும், மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற பரந்த மனப்பான்மை பிள்ளையிடம் ஏற்பட்டுவிடும். வீட்டில் எல்லோரையும் மதித்து நடக்க அன்பு, பாசம் பிறக்கும். தமது அயலில் வாழுகின்ற மற்றவர்களையும் அணைத்து, இன்பமாகப் பேசி வாழப் பழகிக் கொள்ளும். இவற்றை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு செய்து வந்தால், எமது சமுதாயம் வளர்ச்சியடையுமென்பது திண்ணம்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதுடன், நல்லொழுக்கக் கட்டுப்பாடுகளையும் பேணி நடக்க வழிகாட்டவேண்டும்.

ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கு சமயம் துணை புரிவதால், சமய நெறிகளையும், ஔவைப் பாட்டியின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி பாடல்களையும் கற்பிக்க வேண்டும். குழந்தைகள் தொடக்கம் முதிய வர்வரை கற்கக்கூடிய விடயங்கள் ஔவைப் பாடலில் பொதிந்து இருக்கின்றன. அத்துடன் திருக்குறளையும் கற்பிக்க வேண்டும். முத லாம் ஆண்டுப் பிள்ளைக்கு திருக்குறளின் கடவுள் வணக்கச் செய்யுள்,

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன்
முதற்றே உலகு"

"கற்றதினாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்"

என்னும் குறள்களின் பொருளை அறியவைத்து, மனனம் செய்விக்கலாம். முதலாம் ஆண்டுப் பிள்ளைக்குப் பாடசாலை தொடங்கியவுடன் திருக்குறள் கடவுள் வணக்கப் பாடலையும் அடுத்த பாடலையும் (கற்றதனாலாய பயனென்கொல்) தினமும் சொல்ல வைக்கலாம். பாலர் தொடக்கம் பன்னிரண்டு ஆண்டுவரையுள்ள பிள்ளை களுக்கு ஔவை பாடல்கள் உள்ளன. ஔவை பாடலை நன்கு கற்று, உணர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கையின் படிகளை இலகு வாகக் கடக்கலாம்.

தற்பொழுது விஞ்ஞானம் கொடி கட்டிப் பறக்கின்றது. கணப்பொழுதில் சொல்ல முடியாத மாற்றங்கள் ஏற்படுகின் றன. இவற்றைக் கருத்திற் கொண்டு ஆசிரி யர்களும் விஞ்ஞானம், கணிதப் பாடங்களை முறைப்படி நன்கு கற்பிக்கக் கடமைப் பட்டுள்ளீர்களென்பதை மறந்துவிடக்கூடாது. பிள்ளைகளைக் கற்கவைப்பதில் நீங்கள் உங்கள் கைவண்ணத்தைக் காட்டவேண்டும். ஒழுங்கு முறைப்படி, படிமுறை தவறாது பாட அலகுகளை மாணவர்களுக்குக் கற் பித்து வந்தால் எல்லா மாணவர்களும் நல்ல பெறுபேறுகளைப் பெறுவார்கள். பாடங்களில் கவனத்தை ஈர்க்க வைப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். ஆசிரியர் கற்பிப் பதை நன்கு ஏற்றுக் கொள்ளும் மாணவன் ஆசிரியரிடம் தனது அன்பை வெளிப்படுத்து வான். இறுக்கமான உறவு ஏற்பட கல்வியில் தனது திறமையை மாணவன் காட்டுவான். வகுப்பறையில் கற்றல் நன்கு நிகழ்ந்தால் வேறு குழப்படிகள் வந்துசேராதென்பது உண்மை. எமது சமுதாயத்தை கட்டியெழுப்ப ஆசிரியர்கள் மன உறுதியுடன் பாடங்களைக் கற்பித்துவர சமுதாயத்திலுள்ள நெளிவு, சுழிவுகள் பறந்து ஓடிவிடும். எழுத்து அறி வித்தவன் இறைவனாகும் என்னும் தெய்வ மொழிக்கு இணங்க வாழ்வீர்கள் என்பது வெள்ளிடைமலை.

எமது சமுதாய வளர்ச்சிக்கு தொண்டை மானாறு செல்வச்சந்நிதியான் ஆற்றங்கரை யிலிருந்து வரும் அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான். எந்நிதியை யும் சந்நிதியில் பெறலாம். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வழிபட்டால் கந்தன் கடைக் கண் பார்வை தங்களிடம் விழும். நாமும் நாடும் வளர்ச்சிபெற செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று வழிபடுங்கள். உங்கள் பசியைப்போக்க செல்வச்சந்நிதி அடியவன் காத்துக்கொண்டிருக்கின்றான். அநாதை களுக்குக் கைகொடுக்க செல்வச்சந்நிதியான் அடியவரைப் பணித்துள்ளான். எனவே எமது சமுதாயம் வாழ வளர செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று வழிபட்டு வாருங்கள்.

*உன்னைத் தவிர உனக்கு வேறுயாரும் அமைதியைத் தரமுடியாது.*

# வழித்துணை 9

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 யார்சொன்னார் என்று ஒன்றை ஆராய்ந்து விட்டிடாமல்
ஏதுசொன்னார் என்றறிந்து ஏற்றிடலே ஏற்றதுவாம்
மானிடராய் ஓர்முறைதான் பூமியிலே நாம்பிறப்போம்
நேர்வழியில் நடையின்றேல் கால்நடையில் ஒன்றாவோம்.

02 நம்மவரின் சிறப்புக்களைப் பிறர்கண்கள் பார்த்ததனால்
கண்ஊறு பட்டதென்று கண்கெடவே எரிக்கின்றோம்
பிறர்கண்கள் கெட்டபின்பு நம்மவரும் நாமுமிங்கு
கண்ணோடு வாழ்தல்பெரும் சிறப்பென்று எண்ணலாமோ.

03 சலுகைகள் பெறுதலிங்கு பெருமையென்று எண்ணாதீர்
நிலுவையில் வரும்போதே நின்மதியை அதுகுலைக்கும்
கொலுவிருக்கும் காலமதில் கொள்கையோடு வாழ்ந்திட்டால்
வலுவிழக்கும் போதிலதே வழித்துணையாய் வந்து விடும்.

04 கடவுளை நம்புங்கள் கடமையைச் செய்யுங்கள்
இடர்வந்த போதன்றி இடையறாது வணங்குங்கள்
சுடரதில் தோன்றியே பரவிடும் ஒளியதாய்
படர்வினை போக்கிடப் பரம்பொருள் தோன்றுவார்.

05 கொடும்பாவி கட்டியழக் கோடைமழை பெய்யும்
கடும்விரதம் தானிருக்கக் கர்மவினை யகலும்
நெடுந்தூரம் தேவையில்லை நெஞ்சத்து அழுக்ககற்ற
படுந்துயரம் போகும் பரமனருள் சேரும்.

06 கேடுநினைக்கின்றோம் பிறர்க்கு என்று எண்ணாதீர்
நாடியது பின்னர் நம்மையே வந்தடையும்
ஓடிஓடி ஒளித்தாலும் ஓவென்று அழுதாலும்
தேடிவைத்த தெதுவோ கூடிவரும் அதுவே.

*நீ நிதானத்தைக் கடைப்பிடி, அதுவே வெற்றியின் முதற்படி.*

07 நீரும் நெருப்பும் காற்றும் அவனென்றும்
ஊரும் உலகும் உள்தும் அவனென்றும்
பேரும் புகழும் அவனுக்கே உரித்தென்றும்
பாரும் அன்றோ பார்செழிக்க மழைபொழியும்.

08 தகுதியும் அந்தஸ்தும் தருவதன்று மரியாதை
பகுத்தறிவு மாந்தர்கள் பகிர்வதுவே மரியாதை
வகுப்பாளி யானாலும் பகுத்தறிவின் படிநடந்தால்
தகுதி உடையவரே மரியாதைக்காளாவர்..

09 சூரனை அழிக்கமட்டும் வேலவன் வருவதில்லை
ஆணவக் காரரெனில் எம்மையும் கூடத்தான்
மானிடராய் வாழ்ந்திட்டால் வானிடையே சென்றுநாம்
வேலோடும் மயிலோடும் உறவாடி மகிழ்ந்திடலாம்.

10 நீதிக்கு அப்பால்நாம் சேர்க்கின்ற அனைத்துமே
மேதினியில் நாம்பட்ட வட்டிக் கடனேயாம்
வீதிக்கு வந்தோர்நாள் வட்டியையும் சேர்த்தே
ஆதியோடு செலுத்தவேண்டும் நீதியும் அதுவே.

---

## தாண்டிச் செல் தடைகளை!

### -கதையும் பாடமும்-

ஒரு குரு மரத்தடியில் இளைப்பாறிக்கொண்டிருந்தார். சீடன் விளையாட்டாக மரத்தில் ஏறிக்கொண்டிருந்தான். அங்கே பட்டாம்பூச்சியின் வலைப்பின்னலைக் கண்டான். அந்தப் பூச்சி பின்னலைவிட்டு வெளியேவரத் திணறிக்கொண்டிருந்தது. குழப்பத்துடன் சீடன், "ரொம்பச் சிரமப்படுகிறதே! அதற்கு உதவி செய்ய வேண்டும்!" என்ற எண்ணத்துடன் அதை நெருங்கினான்.

கண்விழித்த குரு சீடனைக் கண்டார். "சும்மா இரு! அதன் போக்கிலேயே விட்டுவிடு!" என்று சொல்லிவிட்டு மீண்டும் உறங்கினார். சீடனுக்கு மனம் கேட்கவில்லை. குருவுக்குத் தெரியாமல், தடுமாறும் அந்தப் பூச்சியைப் பின்னல் கூட்டிலிருந்து விடுவித்தான்.

ஆனால், அந்தப் பூச்சி பறக்கமுடியாமல் தரையில் விழுந்தது. கண்விழித்த குரு சீடனை நோக்கி, "சொல்லியும் கேட்கவில்லையே! அதன் சிறகைச் சேதப்படுத்தி விட்டாயே! பட்டாம்பூச்சி பறக்கவேண்டுமானால் அது தானாகவே கூட்டைவிட்டு வெளியே வந்திருக்க வேண்டும்" என்று கடிந்து கொண்டார்.

பட்டாம்பூச்சி மட்டுமல்ல! மனிதனுக்கும் இது பொருந்தும். வாழ்வில் குறுக்கிடும் கஷ்ட நஷ்டங்களுக்காக பிறரது உதவியை நாடக்கூடாது. தானாகவே சமாளிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும்.

விடாமுயற்சியுடன் செயலாற்றினால்த்தான், தடைகளைத் தாண்டி உயரமுடியும்.

*உனது இன்றைய நிலைக்குக் காரணம், நீ எண்ணிய எண்ணங்களே.*

# அமரர் கந்தையா நீலகண்டன்

## -அஞ்சலியுரை-

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –



"செயற்கரிய செய்வார் பெரியர்" எனவும்; "அந்தணர் என்போர் அறவோர்" என்றும் திருவள்ளுவர் மொழிந்துள்ள மறை வாக்குகளை உரைகல்லாகக் கொண்டு, அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் ஆற்றிய சமய, சமூக, அறப்பணிகளை நோக்குமிடத்து அப்பெருமகனார் பெரியார் ஆகவும் அறவோர் அந்தணர் ஆகவும்; சமுதாயத்தில் உயர்ந்து நிற்பதை உணரமுடிகின்றது. மனிதநேயம், ஆன்ம நேயம் இரண்டும் அப்பெரியாரின் இரு கண்கள் போன்றவை.

மனிதர்கள் அனைவரையும் எவ்வித வேற்றுமைகள், கருத்துவேறுபாடுகள் பாராட்டாது, நேசித்தல், அன்பும் கருணையும் செலுத்துதல் மனித நேயம் எனப்படுகிறது. எல்லா உயிரினங்கள்மீதும், அருள் உள்ளத்தோடு, அன்பும் கருணையும் கொண்டு பாதுகாத்தல், ஆன்மநேயம் ஆகும் என்பது இந்து தர்மம் காட்டும் வாழ்க்கை நெறி.

இந்து சமயத்தவர் சமய சேவைக்கே முக்கியத்துவம் வழங்குபவர்கள்; சமூக சேவைக்கு இடமளிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்கு அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பணிகள், செயற்பாடுகள்மூலம் முற்றுப்புள்ளி வைத்த பெருமகனார். அதன் கௌரவ பொதுச் செயலாளர் ஆகவும்; அதன் தலைவர் ஆகவும் பல ஆண்டுகள், தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் பணியாற்றியவர் அமரர் கந்தையா நீலகண்டன். "இந்துவாக வாழ்வோம்; இந்து தர்மம் காப்போம்" என்பது அகில இலங்கை இந்துமாமன்றத்தின் மகுடவாசகம். இம் மகா வாக்கியத்திற்கு, உயிர்ப்புக் கொடுத்து; அதனைச் செயற்படுத்திக் காட்டிய, தனிப்பெருந் தலைவரும் ஆவார். இது வெறும் புகழ்ச்சிக்காக, ஒருவரின் மறைவுக்குப் பின்னர் கூறப்படும் வெற்றுரையோ, புகழுரையோ அன்று. இது உண்மை.

அமரர் கந்தையா நீலகண்டனின் தலைமைத்துவம் போற்றுதற்குரியது. அவர் ஒரு செயல்வீரர்; கர்மயோகி. சொல்வதைச் செய்பவர்; செய்யக்கூடியவற்றையே செய்வதாக வாக்களிப்பவர். அந்த வகையில் ஆன்மீகப் பண்புகள் நிறையப் பெற்றவர்.

முழுமுதற் கடவுள், சிவபெருமான்; எமது இறைவன். இறைவன் என்ற சொல்லுக்குத் தலைவன் என்று பொருள். தலைவன் எப்படி இருக்கவேண்டும்; தலைமைத்துவம் எவ்வாறு அமையவேண்டும் என்பதைத் தமது அருட்செயல்மூலம் உணர்த்தி, வழிகாட்டியுள்ளார். ஆலகால விஷத்தைத் தாம் உண்டு; தேவர்களைக் காத்த வரலாறு, இதற்கு உதாரணமாகும்.

ஒருமுறை, தேவர்களும் அசுரர்களும்; அமிர்தம் எடுப்பதற்கு திருப்பாற்கடலைக் கடைந்தனர். அமிர்தம் உண்டவர்களைச் சிரஞ்சீவிகளாக, மரணமின்றி உயிர்வாழச் செய்யும்

*காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் இரகசியம்.*

சஞ்சீவியாகும். அப்பொழுது திருப்பாற் கடலில் இருந்து, முதலில் வெளிவந்தது ஆலகால விஷம்; அமிர்தம் அல்ல. ஆலகால விஷம் அகில உலகத்தையும்; மற்றும் அண்ட சரா சரங்களையும் கண நேரத்தில் அழித்தொழிக்க வல்லது.

தேவர்களும் அசுரர்களும் ஆலகால விஷத்தின் கடும் வெப்பத்தைத் தாங்க முடியாமல், ஓடோடிச் சென்று சிவபெருமானிடம் சரண்புகுந்து, தம்மைக் காப்பாற்றும்படி வேண்டினர். சிவன், தனிப்பெருந்தலைவர் அல்லவா! சிவன், உடனே ஆலகால விஷத்தை அப்படியே தமது திருக்கரத்தால் எடுத்து வாயினுள் போட்டு விழுங்கிவிட்டார். இதைக் கண்ணுற்ற உமாதேவியார், தமது திருக்கரத்தால் சிவனின் தொண்டையை அழுத்திப் பிடித்தார். ஆலகாலம் தொண்டைக்குள் நின்று விட்டது. அதனால், சிவனின் கண்டம் நீல நிறமாகியது. ஆலமுண்ட நீலகண்டன் எனும் திருநாமத்தைப் பெற்றார். தேவர்களும் அசுரர் களும் உயிர் பிழைத்தனர். சிவபெருமான் அனைத்து உலகங்களின் கர்த்தாவும்; தலைவரும் ஆவார். அந்தவகையில், துன்பங்களைத் தாம் ஏற்றுக்கொண்டு, இன்பங்களைத் தம்மால் பரிபாலனம் செய்யப்படுகின்ற தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் ஆகியோருக்கு வழங்கினார். அதுவே ஒரு தலைசிறந்த தலைவனின் கடமையும் பண்புமாகும். அதுவே இந்து தர்மம் ஆகும்.

சிவபெருமானின் இவ் அருட்செயல்; தலைமைத்துவம் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. தலைமைத்துவம் இந்து தர்மத்தின் அடிப்படையில் அமைந்துள்ளமை நோக்கற்பாலது.

அமரர் கந்தையா நீலகண்டன்; அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைமையை; இந்துதர்மத்தின் அடிச்சுவட்டில் நடத்திச்சென்று, வெற்றிகண்ட மாமனிதன். அக்கடமையை இம்மியளவும் வழுவாது; கடைப்பிடித்து, நடைமுறைப்படுத்திய பெருமை, மறைந்த தலைவர், கந்தையா நீலகண்டனுக்குரியது. அன்னாரின் சேவை, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. அன்னாரின் மறைவு; அவரது குடும்பத்திற்கும்; இந்து மக்களுக்கும் மட்டுமன்றி; முழுநாட்டிற்கும்; மனித சமுதாயத்திற்குமே பேரிழப்பு ஆகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

"இந்துவாக வாழ்வோம்; இந்து தர்மம் காப்போம்"

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| நியூ மைதிலி நகைமாடம் தகப்பனார் நினைவாக யாழ்ப்பாணம் | | 50000. 00 |
| இ. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| J. சந்திரப்பிரகாசம் குடும்பம் | பருத்தித்துறை | 15000. 00 |
| S.T.R. தியாகராஜா | கொழும்பு S.T.R | 5000. 00 |
| பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் | கோண்டாவில் | 50000. 00 |
| அண்ணா அன்கோ | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| சுசிலா நகைமாடம் | பருத்தித்துறை 50 தேங்காய் 1மூடை அரிசி | |
| பு. கதிரித்தம்பி | அச்சுவேலி | 500. 00 |
| K. வருணநாதன் குடும்பம் | இருபாலை | 4000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| செ. சிவராஜா, கு. செல்லம்மா | கரவெட்டி | 10000. 00 |
| வை. சிதம்பரநாதன் | கொழும்பு | 5000. 00 |
| தம்பையா நவரட்ணராஜா | துன்னாலை | 1000. 00 |
| K. பார்த்தீபன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| செல்வம்ஸ் சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| க. தெய்வேந்திரம் | பண்டத்தரிப்பு | 1000. 00 |
| ர. குருபரன் | இத்தாலி | 3000. 00 |
| க. ஸ்ரீவதனி | கொருடாவில் | 10000. 00 |
| குமாரசாமி சோமசுந்தரம் | கொழும்பு | 5000. 00 |
| மா. பரிபூரணானந்தன் | லண்டன் | 50 பவுன்ஸ் |
| கந்தையா குருபரன் | கொழும்பு | 5000. 00 |
| சு. துரைசிங்கம் | சுன்னாகம் | 500. 00 |
| A. தவரட்ணம் | திக்கம் | 5000. 00 |
| கனகரத்தினம் சுதன் | அல்வாய் | 5000. 00 |
| த. பவளரதம் நினைவாக | நாச்சிமார் கோவிலடி | 3000. 00 |
| பா. கிருஷாந் நினைவாக | நாச்சிமார் கோவிலடி | 1000. 00 |
| திரு கமலாநந்தன் | கொற்றாவத்தை | 6000. 00 |
| சிவராஜா சகுந்தலாதேவி | உடுப்பிட்டி | 1000. 00 |
| இ. தனுஷன் | வரணி | 5000. 00 |
| பொ. முகுந்தன் | கொழும்பு-13 | 5000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராஜா | லண்டன் | 3000. 00 |
| சீ. திருமுருகன்மூலம் டானியல் கந்தசாமி நினைவாக உரும்பராய் | | 10000. 00 |

*நீ தெரிந்தோ தெரியாமலோ செய்த புண்ணியம் நிச்சயமாக உனக்குப் பயன் தரும்.*

| | | |
|---|---|---|
| S. மணிவாசகன் | கொழும்பு | 9000. 00 |
| N. டினோஜீத் | கைதடி | 2000. 00 |
| வே. பரமேஸ்வரன் | நீர்வேலி | 1000. 00 |
| ஆ. சரஸ்வதி நினைவாக | யாழ்ப்பாணம் 2மூடைஅரிசி, பருப்பு | 1000. 00 |
| இ. தயாபரன் | கோண்டாவில் | 1000. 00 |
| P.R. கனகலிங்கம் குடும்பம் | வெள்ளவத்தை | 5000. 00 |
| பொ. செல்வக்கிருஷ்ணன் | புலோலி | 3000. 00 |
| S. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| S. சபேசன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| S. அசிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| S. சசிதரன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திருமதி T. கனாதீபன் | தெகிவளை | 5000. 00 |
| பரமநாதன் ராஜேஸ்வரி | பண்டத்தரிப்பு | 95 கனேடியன் டொலர் |
| வாகீசன் விற்பனை நிலையம் | யாழ்ப்பாணம் | 1 டப்றா 5000. 00 |
| த. லீலாவதி | யாழ்ப்பாணம் | 1 டப்றா |
| இ. அபயா | விசுவமடு | 3000. 00 |
| லோ. சதீஸ்வரன் | கொழும்பு | 2000. 00 |
| சாந்தகுமார் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| கஜன், தீபன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| திரு பூபாலசிங்கம் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| சு. சுரேந்திரரட்ணம் | கோப்பாய் தெற்கு | 5000. 00 |
| சு. விஜயகுமார் | கோப்பாய் தெற்கு | 10000. 00 |
| T. ஜனதா | உரும்பராய் கிழக்கு | 5000. 00 |
| சு. சின்னத்தம்பி | சுவிஸ் | 2100. 00 |
| ஜெயலீலா கனகராஜா, ஜெ. சஞ்ஜை | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| V. துர்க்காயினி | கனடா | 5000. 00 |
| பூ. ரஞ்சனாதேவி | திருநெல்வேலி | 22000. 00 |
| இ. திருக்குமரன் | சங்குவேலி | 2000. 00 |
| பா. கேதீஸ் | உரும்பராய் | 2500. 00 |
| இ. தயாபரன் | மானிப்பாய் | 2000. 00 |
| செ. செல்வநாதன் | ஜேர்மனி | 5000. 00 |
| ம. அபர்ணா, ச. கோவர்த்தனன் | ஏழாலை | 1100. 00 |
| K. ரமணன் | சாவகச்சேரி | 1000. 00 |
| செ. நல்லையா | ஆவரங்கால் | 1மூடை அரிசி |
| S. சுஜாந்தினி | வவுனியா | 1000. 00 |
| R. நவரட்ணம் | திருநெல்வேலி | 1000. 00 |
| S. ஞானாம்பிகை | சாம்பல்தீவு | 1000. 00 |

(தொடரும்...

# உண்மைக் காதலும் வாழ்வும்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

வேதமுதல்வனே விநாயகனே
மோதகப் பிரியனே மோனகுருவே
நாதஸ்வ ரூபா ஞானமுதல்வனே
காதலின் பெருமை சொலக் காப்பு.

"காதல்" என்னும் சொல் அன்பின் உயர்நிலையைக் குறிப்பதாகும். இது இன் றைய இளைஞர், யுவதிகளிடையே மிகமிக மலிவான சொல் ஆகிவிட்டது. இதன் மகிமை, புனிதத் தன்மையை அறியாமல் வெறும் உடல் உளக் கவர்ச்சியால் தூண் டப்பெற்று; வாழ்வின் அமைதியையும் சந் தோஷத்தையும் இழந்து துன்பப்படுகின்றனர்.

உடலின் அழகும் கவர்ச்சியும் நிரந் தரமானதல்ல. இவை மாறும் தன்மையுடை யவை. இத்தகைய கவர்ச்சி புலனிச்சை யைத் தூண்டுவதேயன்றி அன்பைத் தூண்டு வதல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண் டும். இவ்வாறு சிற்றின்பத்தைத் தூண்டும் காதல் உண்மையான காதல் அல்ல. இது நிரந்தரமானதல்ல. காலப்போக்கில் இது வெறுமையாகிவிடும். உள்ளன்பினால் ஈர்க்கப் பட்டு நான், நீ என்ற பேதமின்றி ஒருநிலைப் பட்டு ஒரு மனமாகி ஒருவரையொருவர் நேசித்திருப்பது உண்மைக் காதல். இதைப் பேரின்பக் காதல் எனலாம். இறைவனிடம் வைக்கும் அன்பே நிரந்தரமான நிம்மதியான காதலாகும்.

இறைவன் அன்புமயமானவன். இறை யன்பு எந்தவித எதிர்பார்ப்புமின்றி அனைத்து உயிர்கள்மீதும் பொழியப்படுகின்றது. ஒவ் வொரு சீவனையும் ஈர்ப்பது இறையன்பு. (இறைவன்) இறைநிலை என்றும் மாறாதது. ஆகையால் அன்பு சொரூபியான இறை வனிடம் வைக்கும் அன்பு நிரந்தரமானது. இந்த மாறா அன்பைப் பற்றினால் அது நித்திய சந்தோஷத்தை அமைதியை, திருப்தியைப் பெற்று வாழலாம்.

இறைவனிடம் நாம் உலகப் பொருட் களைக் கேட்காமல் இறைவா நீ என்றும் எப்பொழுதும் என்னுடன் இருக்கவேண்டும்; உன்னை மறவா நிலைவேண்டும். உன் அன்பு வேண்டும்" என்று கேட்கும்போது எமக்கு எப் போது எது தேவையோ அவ்வப்போது அதை யதைத் தந்து எம்மை வாழ வைப்பார். எம்மை அன்பால் நிறைவித்து எமக்கு வேண்டியவற்றையெல்லாம் உரிய நேரத்தில் தந்து எம்மை வாழ வைப்பது இறையன் பாகிய நிறையன்பேயாகும். இறைவனிடம் நாம் கொண்டுள்ள அன்பும் விசுவாசமுமே உண்மையான காதல் ஆகும்.

இந்நிலையில்த்தான் நாயன்மார்கள் இறைவனோடு ஒன்றிணைந்து இறைவனை உணர்ந்து இரண்டற்ற நிலையில் அனு பவித்த ஆனந்தத்தின் வெளிப்பாடே தேவார திருவாசகங்களாக மலர்ந்தது. இத்தகைய பேரின்பப் பொக்கிஷமான தேவார திருவாச கங்கள் ஏதோ கடவுளுக்காகப் பாடப்படுபவை என இன்றைய இளைஞர் யுவதிகள் கருது கின்றனர். இவற்றையே எப்போதும் ஓதி சிந்தித்துக் கொண்டிருந்தால் வாழ்க்கையை அனுபவிக்க முடியாதென்ற தவறான அபிப் பிராயத்தைக் கொண்டிருக்கின்றனர். இவர்கள்

உண்மையை உணராதவர்களாவர். ஆனால் "பாவை நோன்பு" அதாவது மார்கழி மாதத்தில் திருப்பாவை திருவெம்பாவை ஆகிய நோன்புகள் ஆண்களாலும் பெண்களாலும் நோற்கப்படுகின்றன. இவை இறைவனோடு இரண்டறக் கலந்து இறையின்பத்தைப் பெறுவதற்காகவே நோற்கப்படுகிறது.

இத்தகைய நோன்பை அதன் புனிதத் தன்மையை உணர்ந்து இறை குணங்களை இறைவனின் தன்மையை உணர்ந்து நோற்பதற்காகவே இறையருளால் அடியார்மூலம் வெளிப்படுத்தப்பட்ட திருவாசகம், திருப்பாவை என்பன எமக்குக் கிடைத்த பொக்கிஷங்களாகும். இதை மனிதர்கள் எவ்வாறு தம் வாழ்வில் பயன்படுத்தலாம் என்பதை நாம் புரிந்து கொண்டால் உண்மைக் காதல் எது? என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பெண்ணும் இறைவனை மணாளனாக அடைய வேண்டுமென்றே நோன்பு இருக்கின்றாள். ஒரு இறைவன் எல்லாப் பெண்களுக்கும் எப்படிக் கணவனாக முடியும்? இறைவனின் குணங்களை, இயல்பைப் புரிந்துகொண்ட இறைநேசமுள்ள மனிதனால்த்தான் அந்த இறைவனைப்போல மனைவிக்குப் பூரணமான அன்பையும் பாதுகாப்பையும் வழங்கமுடியும். இத்தகைய இறையடியார்கள் நெஞ்சில் இறைவன் வாழ்கின்றார். ஆகவே இறைநம்பிக்கை விசுவாசம் உள்ள பக்தர்களை மணாளனாக அடைந்தால் வாழ்க்கைப் பயணம் சுகமாக அமையும். சிற்றின்பப் பாதை செம்மையாக இருந்தால் அது பேரின்பப் பாதைக்கு நம்மை இட்டுச் செல்லும். இத்தகைய காதல் கணவனிடம் (காதலனிடம்) அன்பை, நம்பிக்கையை விசுவாசத்தையூட்டுவதால் கணவனிடம் பக்தியும் நம்பிக்கையும் ஏற்படுகிறது. இந்த நம்பிக்கையே ஒற்றுமையையும் அமைதியையும் தரவல்லது. இந்த நம்பிக்கை இழக்கப்படும்போது அல்லல் துன்பம் ஏற்படுகின்றது. ஆகவே என்றும் தளராத நம்பிக்கை இறை நம்பிக்கை. இறைவனிடம் சரணாகதி அடைவதென்றால் உன்னைவிட வேறு கதி இல்லையென அவனையே முழுமையாக நம்பியிருத்தல் ஆகும். அதேபோல வாழ்க்கைத் துணையை நம்பி வாழ்வில் இறங்கிக் கடைசி வரை எம்மை நம்பிக்கையுடன் வாழ வைப்பது இறை காதலாகிய உண்மைக் காதலேயாகும். எப்படி ஒரு பெண் (மனைவி) தன் கணவனை இறைநிலையில் வைத்துப் பார்க்கின்றாளோ அந்த எண்ணங்கள் அவனைப் புனிதனாக்குகின்றது. இதனால் வாழ்க்கைப் பாதையில் பயணம் சுகமாக அமைகின்றது.

இதேபோல ஒவ்வோர் ஆண்களும் பெண்களை இறைநிலையில் வைத்து அந்த அம்பிகை சொரூபமே மனைவியென அன்புடனும் நம்பிக்கையுடனும் வாழ்வைத் தொடங்கினால் அதுவே அமைதியான அன்பு வாழ்க்கையாகும். உலக அன்பிலே தாயன்பைவிட மேலான, உயர்ந்த அன்பு இல்லையென யாவரும் ஏற்றுக் கொள்வர். விநாயகரும் தனக்குத் தாயைப்போல அன்பு செலுத்தக்கூடிய ஒரு மனைவிக்காகவே தவமிருந்தார் என்ற கதையும் உண்டு. ஆகவே கணவனுக்கு மனைவிமீதும், மனைவிக்குக் கணவன்மீதும் அன்பு, பக்தி, விசுவாசம் இருந்தால் இல்லறம் நல்லறம் ஆகும். உலக வாழ்வு சுகமானதாகும். வாழ்க்கை தெய்வீகமாகும். நற்சந்ததி உருவாகும். நல்லுலகம் நிலைத்திருக்கும். ஆகவே ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் இத்தகைய அருமை பெருமை நிறைந்த நோன்பினை நோற்றுத் தெய்வீகமான, புனிதமான காதலை இனங்கண்டு அதனை அனுபவித்து வாழ்வில் வளம் பெற்றுத் தூய இனிய வாழ்வு வாழ எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த அன்பு மயமான இறைவன் நல்லருள் நல்கியருள்வாராக.

இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க!

*கடந்த காலத்தைப்பற்றி வருந்தி எதிர்காலத்தை இழக்காதே.*

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

நற்றமிழிலக்கியமாகத் திகழ்வது பதினோராந் திருமுறை. சங்ககாலம் முதல் சோழர் காலம்வரை வாழ்ந்த பன்னிருவர் பாடிய நாற்பது சிற்றிலக்கியங்கள் இதில் தொகுக்கப் பட்டுள்ளன.

தேவார திருவாசகம் பாடிய நாயன்மார்களுக்கு முன் வாழ்ந்தோர் பாடிய பாடல்களும் இதில் உள்ளன என்பதுடன் இதன் முதலாவது திருமுகப் பாசுரத்தை அருளியவர் திருவால வாயில் வீற்றிருந்து அருள்நல்கும் சிவபிரானே என்பது முக்கியமான ஒன்று. இது தனக்கு இசையாராதனை செய்து பணிபுரிந்த பாணபத்திரனுக்கு உதவுமாறு சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய பன்னிரண்டு அடிகளே கொண்ட சீட்டுக்கவி வகையிலமைந்த சிறிய நேரிசை ஆசிரியப்பாவாகும்.

திருஆலவாயுடையாரைவிட காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், நக்கீரதேவ நாயனார், கல்லாடதேவ நாயனார், கபில்தேவ நாயனார், இளம்பெருமாள் அடிகள், அதிரா அடிகள், திருவெண்காட்டு அடிகள், நம்பியாண்டார் நம்பி, பாணதேவ நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோரும் சேர்ந்து பன்னிருவர் பாடிய 1401 பாடல்கள் பதினோராம் திருமுறையில் உள்ளன.

திருவிரட்டை மணிமாலை, திரு மும்மணிக்கோவை, திருவந்தாதி, திருவெண்பா, திருக்கலிவெண்பா, உலா, எழுபது, ஆற்றுப்படை, திருக்கலம்பகம், திருத்தொகை, திரு விருத்தம், திருஏகாதசமாலை, திருமறம் முதலிய சிற்றிலக்கிய வகைகள் இருப்பதனால் தமிழிலக்கியச் சுவையினையும் இத்திருமுறையைக் கற்போர் பருகிடலாம், யமகம், திரிபு, சிலேடை முதலியவற்றையும் நயந்திடலாம்.

சிவபெருமானை மட்டுமன்றி பிள்ளையார், முருகன் ஆகியோர்மீது பாடப்பட்ட பாடல் களுடன் கண்ணப்பர், ஆளுடையபிள்ளை, நாவுக்கரசர் ஆகியோரையும் பாடிய பாடல்களை இத்திருமுறை கொண்டிருப்பது இதன் மற்றொரு சிறப்பாகும்.

காரைக்கால் அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதியில் ஒரு பாடல்.

ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டாற்
கேளாத(து) என்கொலோ! கேள்ஆமை - நீளாஆகம்
செம்மை யான் ஆகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மையாட் கொண்ட இறை. என்பதாகும்.

இடர்ப்பட நேரும் வேளைகளில் "இறைவன் எமைக் கைவிட்டுவிட்டானோ?" என மனம் அந்தரிக்கும்போது "எமை ஆட்கொண்ட இறைவன் ஆட்பட்ட யாம் எமது அல்லல்களை அவன் அறியும் வகையில் முறையிட்டால் கேளாது இருப்பது ஏனோ? அவனது திருமேனி சிவந்த நிறங்கொண்டது. ஆனால் அவரது கழுத்தோ வேறு ஆகக் கருமை நிறம் பொருந்தியது. இவ்வாறுதான் தானே ஆட்கொண்டவன் முறையிட்டதைக் கேட்காதிருப்பதும் உள்ளது எனும் பொருள் கொண்ட பாடலைப் பாடுகையில் இதமாக இருக்கும். சிவந்த

நிறத்தில் கருமை இருப்பதுபோல் தானே ஆட்கொண்ட கருணை நிறைந்தவன் குறையைக் கேட்பதில் பாராமுகமாயுள்ளான்.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருவாரூர் மும்மணிக்கோவையுள் கட்டளைக் கலித்துறைப் பாடலொன்றை அடுத்து நோக்குவோம்.

தாழ்ந்து கிடந்த சடைமுடிச்
சங்கரன் தாள் பணியா
தாழ்ந்து கிடந்துறை வார்கிளை
போலயர் வேற்(கு) இரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல்
திரையென்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி
லாதிவ் விரிகடலே.

"தாழ்ந்து கிடந்த சடாமுடியையுடைய சங்கரனது பதங்களைப் பணியாமல் தாழ்ச்சியாகிக் கிடந்துழல்வரைப்போல் வருந்தி நிற்கும் எனக்கு இரங்கி, விரிந்தகடல் தன்னைச் சூழ்ந்திருக்கும் கரைமேல் திரைகளாகிய கைகளை வீசி வீழ்ந்து அலறித் துயிலாதிருக்கும் எனும் பொருள் பொதிந்த இதனைப் பாடும் வேளையில் மனம் சங்கரன் தாள் பணிய அவாவும்

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையும் இத்திருமுறையுள் உள்ளது. இது முருகனிடம் எம்மை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. திருப்பரங்குன்றம், திருச்சீர் அலைவாய், திரு ஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை ஆகிய தலங்களில் வீற்றிருக்கும் முருகனை அடைய ஆற்றுப்படுத்துவதால் அத்தலங்களையும் நம் கண்முன் கொணர்கிறது இத்திருமுருகாற்றுப்படை.

விநாயகரை வழிபட்டுப் பாடும் பாடலொன்றை அடுத்து நோக்குவோம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

செல்வத்தையும் சீர் சிறப்பையும் பெருக்கும், நாம் செய்யும் செயல்களை தடைகளின்றி நிறைவேறச் செய்யும். வாக்கு வன்மையும், பெருமையும் பெருகச் செய்யும். சாரூப பதவியை நல்கும் இவற்றின் காரணமாகத் தேவர்களும் யானை முகங்கொண்ட விநாயகனை பக்தியுடன் கைகுவித்து வணங்குவர் என்னும் பொருள் கொண்ட இப்பாடலை விநாயக வணக்கமாக அனைவரும் பாடி வணங்குவது வழமை.

விநாயக வணக்கம் முதலில் அமைய வேண்டும் என்பதனால் திருமுறையைப் பாடுவோர் முதலில் பதினோராம் திருமுறைப் பாடலாகிய இதனை முதலில் பாடுகின்றனர். திருமுறைகளின் ஒழுங்குப்படி பாடுவதே சரியான முறையாகும். எனவே சரியான முறையை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

சுவை மிகுந்த பதினோராந் திருமுறைப் பாடல்களையும் தினசரி வழிபாட்டில் பாடிப் பயன்பெறலாம்.

*தெய்வ வசத்தால் தானாகக் கிடைத்ததைக்கொண்டு மகிழ்ச்சியாய் இரு.*

# வேதத்தின் இருதயம் ஐந்தெழுத்து

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

வேதத்தின் இருதயம் ஐந்தெழுத்து என்பது பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.



நமசிவாய, சிவாயநம என்பது ஐந்தெழுத்தாகும். இதுவே பஞ்சாட்சர மந்திரம் எனப்படும். யசுர் வேதத்தில் எவ்வாறு ஸ்ரீருத்ர மந்திரம் நடுநாயகமாக விளங்குகின்றதோ அதேபோன்று ஸ்ரீருத்திரத்தில் நடுநாயகமாக விளங்கு கின்றது நமசிவாய என்னும் மந்திரம். இப்பஞ்சாட்சர மந்திரம் வேதத்தின் இருதயம் போன்றது. மனித உடலுக்கு மனிதன் வாழ்வதற்கு இருதயம் இன்றியமையாதது. நாம் செயலாற்றினும் சரி, செயல் அற்று ஓய்வெடுத்தாலும் சரி எமது இரு தயம் இயங்கிக்கொண்டேயிருக்கும். இயங்கியே ஆகவேண்டும். உடல் வாழ எவ்வாறு இருதயம் அவசியமாகின்றதோ, அதேபோன்று ஆத்மீக வாழ் வுக்கு ஐந்தெழுத்து அவசியமாகின்றது. வேதம் ஓதுதல் எல்லோர்க்கும் எளிதன்று. ஆனால் நமச்சி வாய மந்திரம் நவிலுவது மிக எளிது.

மாணிக்கவாசக சுவாமிகள் சன்மார்க்கத்தைப் பின்பற்றியவர். கோகழி என்றழைக்கப்படும் திருப்பெருந்துறையிலே இறைவனால், தான் ஆட்கொள்ளப்பட்ட காரணத்தால் “கோகழி ஆண்ட குருமணி” என எம்பெருமானை இங்கு சுட்டிப் பாடுகின்றார்.

நமச்சிவாய என்னும் மந்திரம் இந்துக்கள் யாவர்க்கும் பொதுவானது. தீட்சை பெற்றோரும் இம்மந்திரத்தைச் செபிக்கலாம். தீட்சை பெறாதோரும் இதனை ஓதலாம். தாயைக் கூவி அழைக்க சேய்க்கு உரிமை இல்லையா? என்ன! அதேபோன்று இறைவனைக் கூவியழைக்க எல்லா உயிர்கட்கும் உரிமை உண்டு.

ஆத்ம சாதனங்களுள் ஜபம் மிக எளிதானது. எப்போது வேண்டுமானாலும் இறைவன் நாமத்தை ஓதிக்கொண்டேயிருக்கலாம். ஜபம் சக்தி வாய்ந்தது. பக்தன் அடைகின்ற பரிபக்கு வங்களுள் ஜபசித்தி பெறுவதற்கு இறைவன் நாமத்தை இடையறாது ஓதவேண்டும். இறை நாமம் ஓதும்போது அவன் எம் நெஞ்சிலும் நீங்காது இடம்பெற்று விடுகின்றான்.

ஒன்றாக இருப்பவனும் பலவாக இருப்பவனும் இறைவன். மணிவாசகரது மனோ வேகத்தைத் தடுத்து அவர் மனத்தை ஒருவழிப்படுத்தியவர் எம்பெருமான். ஒரு வழிப்படுத்திய வர் என்பதிலும் பார்க்கத் தன்வழிப்படுத்தியவர் என்று கூறுதல் பொருந்தும். திருப்பெருந்துறை யில் ஆட்கொள்ளப்பட்ட பின் மணிவாசகரது வழி, இறைவன் வழியாக இருந்தது. எங்கும் சிவம், எதிலும் சிவம்.

*உன் குற்றம் குறைகளைக் கண்டுபிடி. அடுத்தவர்களிடம் நற்குணங்களைத் தேடு.*

எண்ணங்கள் மனதைக் கொதிப்படையச் செய்யும்போது எண்ணங்கள் யாவும் பூர்த்தி அடையப் பிறவிகளும் பெருகிக் கொண்டே போகின்றன. எண்ணங்களுக்கு வலிவு கொடுப்பது ஆசை. இந்த ஆசையை "வேகம்" என்றார் மணிவாசகப் பெருமான். ஆசைக்கு இருப்பிடம் அஞ்ஞானம். இறைவன் அருள் வாய்க்குமிடத்து அஞ்ஞானம் அகல்கின்றது. ஆசை அறுபடுகின்றது. எண்ணக் கொதிப்பு அடங்குகின்றது. இதுவே "வேகம் கெடுத்தாண்ட வேந்தனது செயல்"

விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு விளக்கை அறிகின்றோம். சூரிய வெளிச்சத்தைக் கொண்டு சூரியனை அறிகின்றோம். அதேபோன்று இறைவனது அருளைக் கொண்டே இறைவனை அடையவேண்டும் என்பது மணிவாசகர் சிவபுராணத்தில் எமக்கு அறிவுறுத்தும் நெறி.

இயற்கை அல்லது பிரபஞ்சம் என்பதற்கு மற்றொரு பெயர் மாயை. ஒரு கணப்பொழுதில் இருப்பதுபோல் தோன்றி மறு கணப்பொழுதில் மறைவதெதுவோ அதுவே மாயை.

கண்ணுதலான் எம்பெருமான், அதாவது நெற்றியில் கண் உடையவன். அது ஞானக்கண். புருவத்தின் கீழ் உள்ள ஊனக்கண்கள் உலகப் பொருட்களைக் காட்ட, ஞானக் கண் பரம்பொருளைக் காட்டும் கண்ணாக அமைகின்றது. சிவனைக் காட்டும் கண்ணாக அமைகின்றது. சிவனாரது ஞானக் கண் ஜீவாத்மாக்களுக்கு அருள் சொரிந்து அவர்கள் உய்வடைவதற்கு உறுதுணையாகின்றது.

விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய், எண்ணிறைந்த எல்லை இலாத எம்பெருமான், அண்டபகிரண்டமாய்ப் பரந்து, அவையாவையும் கடந்து "கடவுள்" என நாமம் பெறுகிறார். அவரது தரிசனம் கிடைக்க எமது மனம் தூயதாக அமைதல் அவசியம். மனம் ஒரு தடாகம் போன்றது. அதன் கண் சேற்று நீர் இருந்தால் அதன் அடி மட்டம் தென்படாது. தடாகம் தூய நீரோடு அமைதியுற்றிருந்தால்தான் அதன் அடி "பளிச்"செனத் தென்படும். அதுபோலவே எமது மனமாகிய தடாகத்தின் கண் பந்தபாச அலைகளும் ஆசை என்னும் அழுக்கும் சேர்ந்து கொண்டால் ஆத்ம தரிசனம் எமக்கு அப்பாற்பட்டதாகி விடும்.

இறைவனிடத்திலிருந்து தோன்றிய உயிர்கள் பல பிறவிகள் எடுக்கும் பெரும் பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் இறைவன் பாதங்களை அடைதலே வீடுபேறு அல்லது முத்தி எனப்படுகின்றது.

அடியவர்களை உய்விப்பது இறைவனது அருள் நோக்கமாகும். அதேநேரம் ஈசனிடம் தங்களை ஒப்படைக்க பக்தர்களும் அருட்துறையில் அரும்பாடுபட்டாக வேண்டும். அதற்கு நாம் கரம் குவித்து சிரம் தாழ்த்தி இறை நாமம் செபித்து இறைவன் பாதம் வணங்கியாக வேண்டும்.

---

நான் ஏன் பிறரை நேசிக்க வேண்டும்? ஏனெனில் அவர்களும் நானும் ஒன்றல்லவா! நான் ஏன் என் சகோதரனிடம் அன்பாக இருக்கவேண்டும்? நானும் அவனும் ஒன்று என்பதால்தான். மிகத் தாழ்ந்த புழுவிலிருந்து மிக உயர்ந்த பிராணிவரை உள்ள உயிரினங்களுக்கெல்லாம் உடல்கள் பலவாறானாலும், ஆன்மா ஒன்றுதான். எல்லா வாய்களின் மூலமும் நீ உண்கிறாய். எல்லாக் கைகளின்மூலமும் நீ உழைக்கின்றாய். எல்லாக் கண்களின் மூலமும் நீ காண்கின்றாய். பலகோடி உடல்களின்மூலம் ஆரோக்கிய வாழ்வை அனுபவிப்பதும், பலகோடி உடல்களின்மூலம் நோயால் துன்புறுவதும் நீதான். இந்த எண்ணம் உறுதிபெற்று அனுபவமாகி, இதை நாம் கண்டு உணர்ந்தோமானால் அந்த நிமிடத்திலேயே துக்கமும் பயமும் அழிந்துவிடும்.

-சுவாமி விவேகானந்தர்-

*இன்றைக்கே முடிக்கக்கூடிய வேலையை நாளைக்கென்று தள்ளிப்போடாதே.*

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

சிந்தித்துக்கொண்டிருந்த சுவாமிகளிடம், திருநெல்வேலியைச் சேர்ந்தவரும்- தற்போது சுவிஸ் நாட்டில் வசிப்பவருமான அந்த அம்மையார், ஆச்சிரமப் பணிகள்பற்றி தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொண்டதுடன், மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்காக பொதி செய்து வைத்திருந்த கற்றல் உபகரணங்களையும் சுவாமிகள் காண்பித்தார். அதைப் பார்த்த அம்மையார் தாமும் இவ்வகையான செயற்பாட்டில் பங்குகொள்ள ஆர்வமாக இருப்பதாகவும், ஆனால், பணமாகத் தருவதில் எனது கணவருக்கு உடன்பாடில்லை. பொருட்களாக வாங்கித் தர- கணவரோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவதாகவும் கூறினார். வவுனியா கணேசபுரம் விநாயக வித்தியாலயம் சார்பாக தமக்கு கிடைக்கப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தினை அம்மணிக்குக் காண்பித்தபோது, அதனைக் குறித்துத் தருமாறு அம்மணி கேட்டுக்கொண்டார். தேவையான கற்றற் பொருட்களின் பெறுமதி மிகவும் கூடுதலாக இருந்ததால் சற்றே அவநம்பிக்கையுடன் அந்தக் கடித விபரத்தினை சுவாமிகள் குறித்துக் கையளித்தார்.

அன்று மாலை ஆச்சிரம மையமண்டபத்தில் நடைபெறும் பூசை நிகழ்வுகள் நிறைவெய்தியதன் பின்னர் ஆச்சரியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அந்த அம்மணியின் சகோதரி ஒருவர் வந்து, தாங்கள் மாணவர்களுக்குத் தேவையான பேனா வகைகளை வாங்கத் தவறுதலாக மறந்துவிட்டதாகவும் ஒருதொகைப் பணத்தைச் சுவாமிகளிடம் கொடுத்து ஏனைய பொருட்கள் வேறொரு வாகனத்தில் வந்துகொண்டிருப்பதாகவும் கூறினார். சற்று நேரத்தில் சிறியரக வாகனம் ஒன்றில் முந்நூறு பிள்ளைகளுக்குமான பல ரகத்திலுமான கொப்பி வகைகள் 12 பெரிய பெரிய பொதிகளில் கட்டப்பட்டு ஆச்சிரம வாசலுக்கு வந்து சேர்ந்தது.

சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான இந்தப் பொதிகளைப் பார்த்து சுவாமிகள் ஆச்சரியமடைந்ததுடன், அந்த அம்மையாரின் வள்ளல்தன்மையையும், முருகப்பெருமானின் திருக்கருணையையும் எண்ணி பெரு வியப்படைந்தார்.

ஆம்! அன்று 03.01.2018 புதன் காலை 8.00 மணிக்கு நான் ஏற்கனவே சுவாமிகளுடன் தொடர்புகொண்டதற்கமைவாக, கோப்பாய்ச் சந்தியில் வவுனியா கணேசபுரம் விநாயக வித்தியாலய மாணவர்களுக்கு வழங்கவேண்டிய பொதிகளுடன் வரவேண்டிய பேருந்தினை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். பஸ் வந்தது. நானும் வேறோர் பேரவை உறுப்பினரும் ஏறிக்கொள்கிறோம். உள்ளே பேருந்து நிறையக் கொப்பிகள் அடங்கிய பொதிகள். பிள்ளைகளுக்கு வழங்கும் பொதிகளுடன் ஏதாவது தீன்பண்டம் கொடுப்பது பிள்ளைகளுக்கு மனநிறைவைக் கொடுக்கும் என்ற எண்ணத்துடன் சுவாமிகளால் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டு இருந்த- அப்பிள் பழங்கள் அடங்கிய நான்கைந்து பெரிய பெட்டிகளுடனும், மாணவர்களுக்கான கொம்பாஸ் வகைகளும்

மக்களோடு சமாதானமாக வாழ். உன் பாவங்களோடு சண்டை செய்.

ஒரு வாகனத்தில் எடுத்துவரப்பட்டு கோப்பாய் சந்தியில் காத்திருந்தது. அந்தப் பொதிகளும் பேருந்தில் ஏற்றப்பட்டன. பேருந்து புறப்படு கிறது. முருகண்டியானைத் தரிசித்தபின் பயணந் தொடர்ந்தது. நாம் குறித்த அந்த வவுனியாப் பாடசாலையை 11.00 மணியள வில் அடைகிறோம். எம் வரவை எதிர்பார்த்து அதிபர், ஆசிரியர், மாணவர்களுடன் சில நலன்விரும்பிகளும் வந்திருந்தனர். ஓர் அளவான அழகான கிராமப்புறத்திற்கேயுரிய அழகுடன் பெயர் வளைவை முகப்பிற் தாங் கிய வளர்ந்துவரும் பாடசாலை என்பதை எம் போன்றவர்களால் இலகுவில் புரிந்துகொள் ளும் வண்ணமான புறச்சூழல் மிளிர்கின்றது. ஆம்! இப்பாடசாலை வவுனியா கணேசபுரம் விநாயக வித்தியாலயம். ஏறக்குறைய முந் நூறு பிள்ளைகள். மிகவும் ஆர்வமானவர்கள். ஆர்வத்திற்கு ஏற்றபடி யாழ்ப்பாணத்து ஆசிரி யர்களும் மாணவர்களுக்கேற்ற வண்ணம் ஆளணிப் பங்கீடு அமைந்துள்ளதையும் அறிய முடிந்தது.

எமது வரவை அறிந்து அதிபர், ஆசி ரியர்கள் எம்மை அன்போடு அழைக்கிறார் கள். நாற்புறமும் வகுப்பறைகளும் மண்டபங் களும் சூழ நடுவில் அழகான சிறு மைதானம், நிழல் மரங்கள் குழுமை சேர்த்தவண்ணம் இருந்தன. நிறைகுடம், மங்கள விளக்குடன் வந்த மாணவ, மாணவிகள் எமக்கு அன் போடு மாலைசூட்டி, விழா மண்டபத்திற்கு அழைக்கின்றனர். அருமையான 100'x20' அளவுடைய மண்டபம். ஏதோ அவர்களுக்கு ஏற்றவகையில் அதனை அழகுபடுத்தியிருந் தனர். 20'-20' ஓர் மேடை முகப்பு எனப் பெரி தாக இல்லாத பொழுதிலும் புடவைகளால் அலங்கரித்து வளைவுகேட்டின் போட்டிருந் தது. வறுமையிற் செம்மையைக் காட்டி நின் றது. ஒலி அமைப்பும் வசதிகளோடு ஓர் பேச்சுக்குரிய ஸ்ரான்டையும் ஏதோ ஒரு விதத்தில் அதனையும் அழகான புடவை களால் அலங்கரித்து அமைத்திருந்தது எம்போன்றவர்களை வியக்க வைத்தது. எமது பாடசாலைகளில் பல்லாயிரக்கணக் கான வேலைப்பாடுகளைத் தாங்கிய நவீன பாணியில் தங்கள் பாடசாலை இலச்சினை களைக் காண்பிக்கும் வண்ணமான மலர்க் கொத்துக்களால் அழகாக்கும் பேச்சுத் தாங்கி களை வீடியோக்களிலும், விழாக்களின் படங்களிலும் பார்த்த எமக்கு இதுவும் அவர் கள் வளர்வதற்கு இன்னும் பலகாலம் பொறுத்திருக்க வேண்டும் என்பதையும், வளர்க்கவேண்டிய தேவை கல்விப்புலத் தார்க்கு உண்டு என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுதல் தகும் எனக் கருதுகின்றேன். ஆக பொருத்தமான ஓர் பாடசாலையினைத்தான் தெரிந்துள்ளான் முருகன் என்பதையும் மாணவர்களுடன் கலந்துரையாடியதிலிருந் தும் ஊர்ஜிதப்படுத்த முடிந்தது. அந்தவகை யில் நாம் கொண்டுவந்த உதவிப் பொருட் கள்கூட முழுக்க முழுக்க இம்மாணவச் செல் வங்களின் கற்றலுக்கு உதவும் வண்ணமாக அமைந்த புத்தகப்பை, கொப்பிகள், கொம் பாஸ்கள், எழுது கருவிகள் இருந்தன என் பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

முதலில் மங்கள விளக்கேற்றல் நிகழ்வு நடைபெற்றது. ஆம் இதனை நெறிப் படுத்திய ஆசிரியர் மங்கள விளக்கேற்றல் என்று எம் தற்கால மேடைகளில் பாவிக்கும் பதத்திற்குப் பதில் இப்பொழுது எமது வணக் கத்திற்குரிய சந்நிதியான் ஆச்சிரம சுவாமி கள் அவர்கள் "*ஒளி ஏற்றுவார்கள்*" என்றாரே பார்க்கலாம். எல்லோரும் ஒருகணம் வியந்து நின்ற அக்கணம் இப்பொழுதும் என்நெஞ்சில் நிழலாடுகிறது....

(காட்சி தொடரும்...

*இன்பமும் துன்பமும் விதியல்ல, நீயே தானாகத் தேடிக்கொண்டவை.*

# குலதெய்வ வழிபாடு

–திருமதி செல்வக்காந்திமதி அவர்கள்–

மானிடராய் பிறந்த எல்லோருக்கும் தங்கள் தங்களின் குல தெய்வங்கள் உண்டு. ஒருவருக்கு அம்மன் இன்னொருவருக்கு முருகன் மற்றவருக்குப் பத்திரகாளி, வைரவர், சிலருக்கு ஸ்ரீ மகாலட்சுமி, கண்ணன், ஆஞ்சநேயர் இப்படி தங்கள் குல தெய்வங்களை குடும்பத்துடன் சென்று வழிபாடு செய்வர். வருடா வருடம் தவறாமல் செய்யவேண்டும்.

குலதெய்வ வழிபாடு மிகமிக அவசியம். கிளம்பும் நாள், நேரம், நல்ல நேரமாக இருக்க வேண்டும். கூடியவரை அதிகாலையில் சென்று இரவில் திரும்பிவிடுதல் நல்லது. செல்லும்போது குலதெய்வ நினைவுடன் செல்வது நல்லது. போகும் வழியில் வீண் பேச்சுக்களைப் பேசாதிருக்க வேண்டும். குலதெய்வ எல்லைக்கு முன்பாகவே பேச்சை நிறுத்தி, குலதெய்வ சிந்தனையுடன் இருக்க அறிவுறுத்தல் வேண்டும்.

வீட்டில் திருமணம் போன்ற சுப காரியங்கள் ஆரம்பிக்கும் முன்பாக குலதெய்வத் துக்குப் படையல் செய்து அதன்பின் சுபகாரியங்களுக்கான ஏற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

இதுவரை குலதெய்வ வழிபாடுகள் செய்யாதவர்கள் தங்கள் குலதெய்வம் இடத்தை அறிந்து கொண்டு ஒரு நல்ல நாளில், நல்ல நேரத்தில் சென்று குலதெய்வ வழிபாட்டை ஆரம்பிக்கலாம். வீட்டு வாசலில் காலையும் மாலையும் தண்ணீர் தெளித்துக் கோலம் போடவேண்டும்.

காலையில் எழுந்தவுடன் பல்துலக்கி முகம் கழுவி வாசல் பெருக்கிச் சுத்தம் செய்து தண்ணீர் எடுத்து வாசலில் தெளிக்கவேண்டும். வாசலில் தண்ணீர் தெளித்து கோலம் போடுதல் வீட்டில் உள்ள பெண்களே செய்யவேண்டும். அழகுக்காக கோலம் போடக்கூடாது. எறும்பு, அணில் போன்ற பிராணிகளுக்கு அது உணவளிக்கிறது. கோலத்துப் புள்ளி வைக்கும்போது வலது கைப்பெருவிரலும், சுட்டு விரலும் சேர்ந்து நடுவில் சொரு சொருப்பான மாவை அழுத்தி புள்ளி வைக்க வேண்டும்.

## கண்ணகி அம்மன் சடங்கு

மனித வாழ்க்கையில் முக்கியத்துவம் என்னவெனில் புனிதத்தன்மையோடு மக்கள் மேற்கொள்ளுவது மனித வாழ்க்கையில் பிறப்புத் தொடக்கம் இறப்புவரையும் சடங்குகள் நடத்தப்படுகின்றன. சடங்குகள் எல்லோரையும் ஒன்றுபட வைக்கிறது. மக்களை ஒன்றுபடவும், கருத்து வேறுபாடுகளை மறக்கவும் உதவுகிறது. ஓர் இனத்தின் பண்பாட்டுக் கோலமே சடங்குகளாகும். வாழ்க்கையுடன் இணைந்த சடங்குகள் ஆவன:- சமயச் சடங்குகள், பிறப்புச் சம்பந்தமான சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள், ஈமச் சடங்குகள், பிற சடங்குகள் ஆவன. எம்மால் வழிபடப்பட்டுவரும் கிராமிய பெண் தெய்வங்கள் ஆகிய காளி, மாரி, பேச்சி, நாச்சிமார், சப்தகன்னி, சீதை முதலியன.

*அடுத்த வீட்டுக் கதையை ஆராயமுன் உன் வீட்டுக் கதையை ஆராய்ந்துபார்.*

தமிழ் நாட்டிலிருந்து வந்த கஜபாகு மன்னனால் இலங்கையில் கண்ணன் வழிபாடு கொண்டுவரப்பட்டது.

சிங்கள பௌத்த மக்களிடையே கண்ணகி வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப் படுகிறது. கண்ணகி வழிபாடு, கண்டி, நாவலப்பிட்டி, குருநாகல் போன்ற இடங்களில் மேற் கொள்ளப்படுகிறது. பௌத்த மக்கள் பதினேழு நாட்கள் பத்தினிப் பெண்ணைப் பூஜை செய்வர்.

இலங்கையில் வடக்கில் கண்ணகி ஆலயங்கள் கந்தரோடை, சுதுமலை, மந்திகை, புங்குடுதீவு, கல்வியங்காடு ஆகிய இடங்களில் உள்ளன. கிழக்கில் அமிர்தகளி, ஆரயம்பதி, ஈச்சந்தீவு தேற்றாத்தீவு போன்ற இடங்களில் உள்ளன.

வன்னிப் பிரதேசத்தை வன்னியர்கள் ஆட்சி செய்தபோது, போர்த்துக்கீச தளபதி நெவில் என்பவன் கோவிலை அழிக்க முற்பட்டவேளை ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தனது காய்களை வீசி அழிக்கவிடாது தடுத்த அற்புத வரலாற்றை பாடற்சித்துமூலம் அறியக் கிடக்கிறது.

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் வைகாசி மாதத்தில் பொங்கல் இடம்பெறும். முதல்நாள் சிலாபத்துறை கடலில் மண் முட்டிகளில் நீர் எடுத்து தீர்த்தக்குடம் ஊர்வலமாக எடுத்துவந்து காட்டு விநாயக ஆலயத்துக்குக் கொண்டுசென்று கடல் நீரில் விளக்கேற்றுவர். அதன் பின் கச்சு நேருதல், கட்டுச் சொல்லுதல், வளந்துநேரல் இடம்பெறும்.

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனி மாதத்தில் பொங்கல் இட்டு வழிபடுகின்றனர்.

கண்ணகி அம்மனை வழிபடுவதால் தீராத நோய்கள் தீரும், வேளாண்மை சிறக்கும், ஆடு, மாடுகள் பெருகும்.

## நாகதம்பிரான் வழிபாடு

இலங்கையின் ஆதிக்குடிகளான "நாகர்" என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிபாடு நாகதம்பிரான் வழிபாடாகும்.

"நாக" என்று தொடங்கும் ஊர்ப் பெயர்கள், ஆண், பெண் பெயர்கள், பழமொழிகள் என்பன இன்றும் வழக்கில் உள்ளன.

வீட்டிற்கு வரும் நாகத்தை வணங்குதல், நாகத்தைக் கொல்லுதல் பாவம். நாகக்கடி மந்திரிப்பு, நாகத்திடம் நாகரெத்தினம் உண்டென நம்புதல் போன்றன இதற்குச் சான்றாகும்.

நாகர்களால் தொடங்கப்பட்ட இவ்வழிபாட்டை வெவ்வேறாக வணங்கினார்கள். அதாவது

தனிக்கோயில் வழிபாடு,
அரசு, வேம்பு, மரத்தடி வழிபாடு
பாம்புப்புற்று வழிபாடு
தலவிருட்ச நாக வழிபாடு
பிள்ளையார் பக்க வழிபாடு
இல்ல நாகவழிபாடு என்பனவாம்.

நாகதம்பிரான் கோயில்கள் ஆவன:

பண்டாரவெளி, மண்டூர், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புளியம் பொக்கனை ஆகும்.

நாகதம்பிரான் ஆலயங்களில் நிகழும் சடங்குகள் ஆவன: மடைப்பண்டம் எடுத்தல், மடைபரவுதல், பாம்பு குடியிருக்கும் புற்றுக்குப் பால் வார்த்தல், பொங்கல் வைத்தல், வழிவெட்டுதல் ஆகும்.

மட்டக்களப்பு நாகதம்பிரான் சடங்குகளைக் கர்ண பரம்பரைக் கதையில் வந்த "கொம்பிக்கிழவார், குத்துவார், காலிங்காகுடியென அழைக்கப்படுவர் பூஜை செய்கின்றனர். ஆனி உத்தரத்தன்று பொங்கல் செய்வர். நாகத்திற்கு வெண்ணிறப் பொங்கல், பால், பழம் கரைத்து வார்த்தல், முட்டை வைத்தல் என்பனவாகும்.

கண்டாவளைப் புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடப் பொங்கல் பங்குனி உத்தரத்தன்று நடைபெறும்.

விளக்கு வைப்பு எனும் சடங்கு பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன் நடைபெறும். ஆராதனைகள், பிரம்பு வழங்கும் வைபவமும் நடைபெறும். நாகபடம் வைத்து வழிபடல், பாம்புக்குப் பால் வார்த்தல் போன்ற சடங்குகள் நடைபெறும்.

நாகதம்பிரானை வழிபட்டால், பாம்பு தீண்டாதிருத்தல், கிருமி சார்ந்த நோய்கள் வராதிருத்தல், மலட்டுத் தன்மை நீங்குதல், குழந்தை பிறத்தல், வரட்சி நீங்குதல் மழை பெய்தல் போன்றவை நடக்கும்.

நாகதம்பிரான் சடங்குகள் வைகாசி, ஆனி மாதத்துக்குள் நடைபெறும்.

## மௌன அஞ்சலி

இலங்கையின் சிரேஷ்ட சட்டத்தரணியும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் கௌரவத் தலைவரும், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவரும், இலங்கை இந்திய நட்புறவுக் கழகப் பிரதிநிதியும் சைவ வித்யா விருத்திச் சங்கத் தலைவருமான அமரர் கந்தையா நீலகண்டனின் நற்பணிகளை நினைவுகூர்ந்து திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளது 39ஆவது திருவடி வழிபாடு, திருவாசக முற்றோதல் வழிபாட்டு நிகழ்வின்போது ஆத்மசாந்திப்பிரார்த்தனை இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் சபாரத்தின சுவாமிகள் நினைவாக மாதந்தோறும் பூரணை தினத்தில் நடைபெற்றுவரும் குருபூசை, திருவடி வழிபாடு, திருவாசக முற்றோதல், திருவமுது நிகழ்வுகள் கடந்த 01.03.2018 அன்று கலாசார மண்டபத்தில் இடம்பெற்றபோது காலை 11 மணியளவில் அடியார் குழுவினரால் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

திருவாசகம் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை, -தம்பு துரைராசா-

திருக்கேதீச்சரம். (தர்மகர்த்தா, செயலாளர்)

*நீ கோபத்தோடு எதைச் செய்தாலும் அது பாவமாகும்.*

(கட்டுரைத்தொடர் - 40)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## கோண்டாவில் சித்தர் - குடைச் சுவாமிகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சைவமும் தமிழும் செழித்து வளர்ந்த கிராமங்களிலே கோண்டாவில் பதி முக்கிய இடம்பெறுகிறது. பல ஆலயங்களால் சூழப்பட்ட கிராமம். மகோற்சவம் நடைபெறும் ஆலயங்கள் பல உண்டு. நான்கு தெருக்கள் சந்திக்கும் இடம் சந்தி ஆகும். பெரும்பாலான சந்திகள் சந்தடிமிக்க இடமாகவும், சமூக விரோதிகள் பலரும் ஒன்றுகூடும் இடமாகவுமே காணப்படுகிறது. ஆனால் கோண்டாவில் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள இடங்கள் புனிதமான சந்திகளாகக் காணப்படுகின்றன. சிறப்பாகக் கோண்டாவில் கிழக்கு சந்தி மிகப் புனிதமான இடமாகத் திகழ்கிறது. அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் அமைந்திருப்பதால் இந்த இடம் திருவருள் ஒளி வீசும் இடமாகக் காணப்படுகிறது. மிண்டு மனத்தவர்களை எல்லாம் மெய் அடியார்கள் ஆக்கும் தன்மை அற்புத நர்த்தன விநாயகருக்கு உண்டு. குடைச் சுவாமிகளின் சமாதியும் ஆலய வளாகத்திற்கு உள்ளேயே வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நோன்மதி தினத்திலும் சமாதிக்கு முன்பாகத் திருவாசகம் முற்றோதல் நடைபெற்று அன்ன தானமும் வழங்கப்படுகிறது.

1897ஆம் ஆண்டு கோண்டாவிலின் குமரகோட்டம் பகுதியில் வாழ்ந்த நாகேந்திரர் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரராகக் குடைச் சுவாமிகள் தோன்றினார். விவசாயமே இவர்களுடைய தொழில் சுருட்டுக் கைத்தொழிலை உப தொழிலாகக் கொண்டிருந்தனர். குடைச்சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் கந்தையா என்பதால் இவரைக் குடைச்சாமிகள் என்றும் கந்தையா சுவாமிகள் என்றும் மக்கள் அன்போடு அழைத்தனர். விவசாயம், சுருட்டுத் தொழில் என்பவற்றைச் செய்த குடைச்சுவாமிகள் ஓய்வு நேரங்களில் வேதாந்த மடம் மகாதேவ சுவாமிகள் நடாத்தும் வகுப்புகளில் கலந்துகொண்டு ஆன்மீக ஞானத்தைப் பெற்று வந்தார். திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரை சொல்லும் பௌராணிகராகவும் விளங்கினார். திருவாசகத்தில் நிறைந்த ஈடுபாடு கொண்டிருந்தார். 30ஆவது வயதில் இல்லறத்தில் புகுந்தார். சில ஆண்டுகளில் துணைவியார் மறைய முற்றும் துறந்த முனிவர் ஆனார்.

தவத்திரு யோகர் சுவாமிகள் குடை ஒன்றைக் கக்கத்தில் வைத்துக்கொண்டே நடமாடித் திரிந்தார். இவரைப்போல கந்தையா சுவாமிகளும் குடையுடனே நடமாடினார். இதனால் இவரை மக்கள் அனைவரும் குடைச் சுவாமிகள் என அன்போடு அழைத்தனர். எந்த நேரமும் இறைவன் அருட்குடையின் கீழ் இருக்கிறேன். அந்த நிழலின் கீழ் இருப்பதால் எவ்வித குறையுமில்லை என்ற நினைப்பும் அவரிடம் இருந்தது. பலர் உலகிலே இறைவனைத் தேடுகின்றார்கள். சுவாமிகள் தனக்குள்ளே இறைவனைத் தேடிக் கண்டு கொண்டார்.

"தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என அப்பர், சுவாமிகள் கூறுவது போல இறைவனை அகத்திலே சுவாமிகள்

*உன் கௌரவம் உனது நாக்கின் நுனியில் இருக்கிறது.*

அகப்படுத்திக் கொண்டார். நடமாடும் கோயிலாக இப் பூமியிலே நடமாடித் திரிந்தார். உள் வளைந்த தோற்றம், முழங்கால்வரை இடுப்பிலோர் நான்குமுழ வேட்டி, தோளிலே சால்வை, கையிற் குடை, தாடியுடன் வளர்ந்த சிகை, பாதணியற்ற திருப்பாதம், தாவித் தாவி நடக்கும் பாங்கு, ஆளுமைமிக்க ஆத்மீகத் தோற்றம் என்பன குடைச் சுவாமிகளின் வெளித்தோற்றம் ஆகும். தண்டு கமண்டலம், தலைமொட்டை, காவி, உருத்திராக்கம் ஆகிய வெளிவேஷங்கள் எதுவுமே அவரிடம் இல்லை. எந்நேரமும் தன்னை "ஏழை அடியவன்" என்றே சொல்லிக் கொள்வார். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தன்னைச் சிவசொரூபியாக்கி தெய்வ நிலையில் நடமாடினார்.

தினமும் பல கிராமங்களைப் பாதங்களால் நடந்து புனிதமாக்கினார். விறகின் மேலும், வைக்கோலிலும் ஈச்சம் பற்றை மறைவிலும், மண்ணின் மேலும் நித்திரை செய்வார். இயம நியமங்கள், சங்கற்பங்கள் எதுவுமே இல்லாத மகான்தான் சுவாமிகள். பேச்சினாலும், ஏச்சினாலும், குடையடியாலும், திருவடித் தீட்சையாலும் நயன தீட்சையாலும் அடியார்களுக்கு வாழ்வளித்தார். நினைப்பவர் நெஞ்சில் காட்சியளிப்பார். காட்சிக்கு எளியவர்; கருணைக்குப் பெரியவர். பார்ப்போர் பைத்தியம் என்று சொல்லும்படி இறைவன் பித்தேறித் திரிந்தார்.

திருவாசகத்திலே நனைந்த குடைச் சுவாமிகள் தனது இறுதி மூச்சுவரை திருவாசகத்தின் சென்னிப்பத்துப் பதிகத்தை நாத் தழும்பேறப் பாடினார். திருவடி சூட்டும் இன்பத்தைப் பெறுபவர் பேரின்பப் பெருவாழ்வு பெறுவர். இறைவனது திருவடியின்கீழ் அன்பரது சென்னி (தலை) பொருந்தி விளங்குவதையே "தூய மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னிச்சுடருமே" என்னும் தொடர் குறிப்பிடுகிறது. இப்பதிகம் ஒரு தனித்துவமானது என்பதை உணர்ந்த சுவாமிகள் மகா சமாதி எய்தும் திருக்குறிப்பை உணர்ந்து அன்றைய தினம் முழுவதும் இப்பதிகத்தை ஓதினார்.

சுவாமிகளின் அற்புதமான நடமாட்டங்கள் பல. அடியார்களின் வாய்மொழியாலே இவை அறியப்பட்டன. அறியப்படாமலும், வெளிப்படுத்தப்படாமலும் பல நிகழ்வுகள் நடைபெற்றிருக்கலாம். சித்தர்கள், ஞானிகளின் அருள் விளையாட்டுக்களை ஆவணப்படுத்தி வைக்கவேண்டும் என்ற ஆர்வம் நம்மவர்களிடம் மிகவும் குறைவு. இதனால் நமது அடுத்த சந்ததியினர் நம்முடன் வாழ்ந்த மகான்களின் பெருமைகளை அறியமுடியாத பரிதாபகரமான நிலை ஏற்படுகிறது.

மறவன்புலோவில் சின்னத்தம்பிச் சுவாமிகளின் சமாதியில் இரு பெண்கள் இருந்தார்கள். ஒரு அம்மா வெளியில் செல்லும் போது கஞ்சியை வடித்துக் கன்றுக் குட்டிக்கு வையென்று கூறிவிட்டு வெளியில் சென்று விட்டார். அவர் கூறியபடி கஞ்சிவடித்து முடியும் நேரம் சுவாமிகள் அங்கு சென்றார். சுவாமிகளுக்கு கொடுப்பதற்காக அங்கிருந்த அம்மா கஞ்சியைக் கொண்டு வந்தார். "பசுக் கன்றுக்கு உரிய கஞ்சி எனக்கு வேண்டாம்; கன்றுக்கே வையுங்கள்" என்று மறுத்துச் சென்று விட்டார். கமக்காரர் ஒருவர் பெரிய குடும்பத்தர் அவருடைய தோட்ட விளை நிலத்திலிருந்து சில வருடகாலமாகப் போதிய பயன் கிடைக்கவில்லை. ஒருநாள் குடைச் சுவாமிகள் அவருடைய தோட்டத்திற்கு அதிகாலை சென்று மத்தியானம் வரை நடந்து திரிந்தார். அடுத்த மூன்றாண்டு காலம் அந்த நிலத்தில் வெங்காய விளைச்சல் மிக அபரிமிதமாக இருந்தது. யாழ்ப்பாணம் பலாலி வீதியில் கெற்அப்போல் சந்திக்கு அருகாமையில் அன்பர் இராசரத்தினம் அவர்களுடைய பேபி ஸ்ருடியோ இருந்தது. அன்பர்

*உன்னை ஒருவர் புண்படுத்தும்போது உன் இதயத்தை உயர்த்திக்கொள்.*

இராசரத்தினம் மிகுந்த ஆன்மிக நாட்டம் உடையவர். சித்தர்கள் ஞானிகளை வணங்கித் துதித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலே பெரு விருப்பம் உடையவர். சுவாமிகள்மீது மிகுந்த பக்தி உடையவர். அன்பர் இராசரத்தினம் சுவாமிகளுக்கு ஓர் குடை கொடுக்க வேண்டும் என்று விருப்போடு நீண்ட நாட்களாக புதுக் குடை வாங்கி வைத்திருந்தார். மகா சமாதி எய்துவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக ஒரு மோட்டர் ரதத்தில் அவரிடம் வந்து "குடையையும் எடுத்துக் கொண்டு வா" எனக் கூறினார். அன்று முழுவதும் பல இடங்களுக்கும் கூட்டிச்சென்று மாலையில் அன்னாரின் இல்லத்தில் அவரை விடும்போது தனது கையில் இருந்த பழைய குடையைக் கொடுத்து, புதிய குடையைப் பெற்று அருளாசியும் வழங்கினார். சுவாமிகளின் படத்தையும் அவர் கொடுத்த குடையையும் தனது ஸ்ருடியோவில் வைத்து அன்பர் இராசரத்தினம் நாளாந்தம் ஆராதனை செய்து வருகின்றார். பேபி ஸ்ருடியோ விமானக் குண்டு வீச்சிற் சேதமுற்றபோதும் சுவாமிகளின் படத்திற்கும் அவர் பாவித்த குடைக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

யோகர் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக குடைச்சுவாமிகள் கொழும்புத்துறைக்குப் போய் அவரது தேவாசிரிய மண்டபத்தில் வரிசையில் நின்றார். இதனைப் பார்த்த யோகர் சுவாமிகள் உனக்கு இங்கு என்ன வேலையெனக் கூறி அவரைப் பெருமதிப்புச் செய்து வழியனுப்பி வைத்தார். ஒரு தினம் சுவாமி பலாலி வீதியால் நடந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றார். கந்தர்மடம் சந்தியில் போய் அப்பாலே போகாமல் யாழ்ப்பாண நகரை நோக்கி வெக்கையாய் இருக்கு என்றார். அவர் கூறிச் சில காலத்தின் பின் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டது.

சுவாமிகளுக்குச் சாப்பாடு கொடுக்கப் பலர் விரும்புவர். ஆனால் சமையல் செய்து உணவு பரிமாற ஆயத்தம் பண்ணும்போது ஆளைக் காணமுடியாது. உள்ளன்போடும் மனப் பரிசுத்தத்தோடும் கொடுக்கும் அன்பர்களின் வீடுகளில் பொறுமையோடு காத்திருந்து சாப்பிட்டுச் செல்வார். இந்த மகானுடைய மகிமையை ஆரம்பத்தில் பலர் அறியாமல் இருந்தார்கள். தேநீர்க் கடைகளில் இவர் வந்து தேநீர் குடித்தால் போதும். அன்று கடையில் ஏகப்பட்ட வியாபாரம் நடக்கும். மனத்தகத்து அழுக்குள்ளோரைக் கண்டால் சுவாமிகள் குடையால் தன் முகத்தை மறைத்துக் கொண்டு ஓடி மறைவார்.

கோண்டாவில் சந்திக்கு அருகில் இருக்கும் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தை ஆசைப்பிள்ளை ஐயா அவர்கள் பரிபாலனம் செய்து வந்தார். இவர் அதியற்புதமான மனிதர்; அறச் செல்வர்; சுவாமிகள் மீது மிகுந்த பக்தி உடையவர். அடியார்களை ஆதரித்து அவர்களின் பசிப்பிணி போக்கும் மருத்துவராகச் செயற்பட்டு வந்தார். சந்தடி மிக்க சந்தியைப் புனித பிரதேசமாக்கிய பெருமை இவருக்கே உண்டு.

குடைச் சுவாமிகள் கோண்டாவில் டிப்போவிற்கு முன்னால் அன்னுங்கை போகும் வழியில் ஒற்றைப் பனையும், புதரும் முட்செடிகளும் உள்ள இடத்திற் படுத்திருப்பார். படுக்கையிற் படுத்தறியார். நாகதாளிப் பற்றைக்கு மேலும், கொதிக்கும் வெயிலிலும் குடையைப் போட்டுவிட்டு அதற்குமேல் படுத்திருப்பார். சிலரைக் கண்டால் சால்வையாலோ, குடையாலோ மறைத்துக்கொண்டு ஓடுவார். வாயில் "அருள்பார், அருள் தெரியுது பார்" என்பார். இதுவே இவரது மகா வாக்கியம்.

வேட்டி சால்வையைத் தோய்ப்பது போலப் பாவனை செய்வார். இதுவே அவரது தோய்த்துக் கட்டும் நிலை. சிலவேளை புதிய

*உனது முயற்சியைப் பொறுத்தே உனது வெற்றியும் அமைகிறது.*

உடையுடன் வருவார். சிலநேரம் கிழிந்த அழுக்குப் படிந்த உடையுடன் தென்படுவார். சிலவேளைகளில் தாடியுடனும் நீண்ட கேசத் துடனும் காட்சி தருவார். தலை மொட்டை யுடனும் தாடி இல்லாமலும் காட்சியளிப்பார். "நடக்கும் செயலில் எல்லாம் நடக்கும்" என்று அடிக்கடி கூறிக்கொள்வார்.

காங்கேயன்துறையைச் சேர்ந்தவர் சோதிச் சுவாமிகள். இவர் நியாயதுரந்தரராய் இருந்தவர். எல்லாவற்றையும் துறந்து வாழ்ந் தவர். பஜனை செய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தன்னை மறந்து இறையரு ளில் இரண்டறக் கலந்து கூட்டுப் பிரார்த்தனை கள் செய்வார். தூய வெண்மையான உடை களையே அணிவார். அவர் ஒருமுறை கந்தை யாச் சுவாமிகளைச் சந்திக்கப் போனார். சுவாமி களைத் தேடிக் கண்டு கதைத்துக்கொண்டு இருவரும் பலமைல் தூரம் நடந்தார்கள். கந் தையா சுவாமிகள் தனது குடையை விரித்து அவருக்குப் பிடித்து சோதி சுவாமியைக் கௌரவப்படுத்தினார்.

திருவாசகத்தை மனமுருகிக் கண்ணீர் சோர உரத்த குரலிலே பாடுவார். குழைத்த பத்து, சென்னிப்பத்துப் பதிகங்களில் இவ ருக்கு ஈடுபாடு அதிகம். சிரிப்பார், களிப்பார், தேனிப்பார் என்பதுதான் இவருடைய நிலை ஆகும். கையிலே பணம் கண்டறியார். வெறுங் காலுடன் நடப்பார். ஓட்டமும் நடையுமாய் ஒதுங்கி வீதியோரம் போவார். யாரேனும் பின் தொடர்ந்தால் பேசி விரட்டுவார். இதற்குப் பயப்படாமல் பின் தொடர்ந்தால் நல்வாக்குகள் கிடைக்கும்.

"துறவிக்கு வேந்தன் துரும்பு" என்பர். துறவிகள் அரசகட்டளைக்கு பணியமாட்டார் கள். சட்டதிட்டங்களையும் சங்கற்பங்களை யும் கடந்து நிற்பர். இவர்கள் ஓடும் செம் பொனும் ஒக்கநோக்கும் பண்பினர். இவர் களில் ஒருவர் தான் தவத்திரு கந்தையா சுவாமிகள். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே அவ சரகாலச் சட்டமும், ஊரடங்குச் சட்டமும் அடிக்கடி அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட காலம். இப்படியொரு காலகட்டத்தில் யாழ்ப் பாணத்தில் மாலை ஆறுமணியிலிருந்து அடுத்தநாள் காலை ஆறுமணிவரையும் ஊர டங்கு பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. சித்தர் கள் ஞானிகள் இராப்பகல் அற்ற இடத்திலே இருப்பார்கள். இதனைத் தவத்திரு யோகர் சுவாமிகள் நல்லைக் கந்தன் மீதுபாடிய பாடல் ஒன்று உணர்த்தி நிற்கிறது.

**"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்**
**எல்லாம் மறப்பேனடி கிளியே!**
**இரவு பகல் காணேனடி"**

ஒரு நாள் இரவு ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் சுவாமிகள் உரும்பிராய், மருதனார்மடம் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தார். வீதியிலே ஓடுவார், நடப் பார், தரிப்பார், ஆடுவார், அசைவார், நடு வீதிக்கு வருவார் இப்படியாகப் பல்வேறு லீலை களுடன் வந்துகொண்டிருந்தார். இவர் போன திசையிலே சுண்ணாகம் பொலிஸ் அதிகாரி இரவு காவற் கடமையாக மோட்டார் வாகனத் தில் வந்து கொண்டிருந்தார். கார்க்கோனை அடிப்பதும் விடுவதுமாய் வாகனத்தை ஓட்டிப் போனார். சுவாமிகள் விலகிப் போவதாக இல்லை. பொலிஸ் அதிகாரி இவரைச் சித்த சுவாதீனமற்றவர் என்று நினைத்துக் காரில் இருந்து இறங்கிப் போய் அவரைத் தள்ளி ஓரமாக விட்டபின் தன் வாகனத்தை ஓட்டிச் சென்று அலுவலகத்தை அடைந்தார். பின்பு தன் இல்லம் சென்று உறங்கி அதிகாலை வழமைபோல எழுந்தார். எழும்ப முடிய வில்லை. கையும் காலும் ஒருபுறமும் அசைக்க முடியவில்லை. டாக்டரிடம் காட்டி வைத்தி யம் செய்வித்தார். எவராலும் மாற்றமுடியாத நிலையில் மனம் உடைந்து செய்யும் வகை தெரியாது தடுமாறினார். யாரோ வழிப்படுத்த

காரைக்காடு மணியம் என்பவரிடம் சென்றார். அவர் ஏதோ தெய்வ நிந்தனையோ பெரியோர் நிந்தனையோ நடந்திருக்கிறது. அதை அறிந்து அதற்கு விமோசனம் தேடுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். வீட்டிலே வந்து ஆறுதலாக இருந்து சிந்தித்தபொழுதுதான் ஒரு தினம் வீதியிலே நடந்த காட்சி மின் வெட்டாக அவர் மனதிலே தெரிந்தது. எதிர் பாராமல் வீதிவழியே சுவாமிகள் போகும் பொழுது பொலிஸ் அதிகாரி அவரைக் கண் டார். பயபக்தியோடு அவர் அண்மையில் சென்று பாதங்களைத் தொட்டு வணங்கி அறியாமற் செய்த பிழைக்காக மன்னிப்புக் கேட்டார். சுவாமிகளும் தலையசைத்தார். வீடு வந்ததும் வழமைக்குத் திரும்பினார். இச்சம்பவம் அவரைச் சுவாமிகளின் அடிய வனாக்கியது.

சுவாமிகள் மகாசமாதி அடைந்த புனித தினத்திற்கு முதல்நாள் திருவாசகத் தின் சென்னிப்பத்தையும் நந்தன் கீர்த்தனை யையும் பாடினார். சிவவிளைவை வெளிப் படுத்தினார். இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறு மணித்தியாலங்கள்தான் இருப்பேன் என்று வடிவேற் சுவாமிகளுக்கு கூறினார். கூறியபடியே பிங்கள வருஷம் மாசித்திங்கள் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை (14.02.1978) கார்த்திகை நட்சத்திரத்திலன்று மகாசமாதி அடைந்தார். (16.02.1978) இல் அற்புத நர்த்தன விநாயகர் ஆலய வளாகத் தில் சமாதி வைக்கப்பட்டது.

கந்தையா சுவாமிகளின் மகா வாக் கியங்கள் அருள் வடிவானவை.

1) **அருள்வான் அருள்வாக்கு**
2) **அறிவான் அருள்வாக்கு**
3) **அருள்பார் அருளொளி பார்**
4) **அருள் தெரியும் பார்**
5) **எம்பெருமான் நடாத்துவார்**
6) **எம்பெருமான் உணர்த்துவார்**
7) **நீ எது சரியென்று நினைக்கிறாயோ அதன்படி நட**
8) **வேறொருவரையும் எதிர்பாராதே**

எட்டு நிறைமொழிகளும் எட்டுக் குடைக் கம்பிகள் போன்று எம்மைத் தாங்கு வன. சமாதியுள்ள ஆலயங்கள் கீர்த்தியில் சிறந்து விளங்குகின்றன. கோண்டாவில் நர்த்தன விநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்தால் பிள்ளையாரையும் கும்பிடலாம் குடைச்சுவாமிகளின் அருளையும் பெறலாம்.

(தொடரும்...

**ஞானச்சுடர் பரப்பும் ஞான வேலோன்**
**ஞானத் தலமிது நாடிடு இன்றே.**

ஞானச் சுடரை ஞாலம் முழுதும்
ஞான வேலோன் சந்நிதி வேலன்
நாளும் பொழுதும் பரப்பி நிற்பான்
நாடிடும் பக்தர் ஞானம் பெறுவர்
ஞானிகள் யோகிகள் நடந்து திரிந்த
ஞான மண்ணில் நாமும் நடந்தால்
ஞானம் பெறலாம் ஞானி ஆகலாம்
ஞானத் தலமிது நாடிடு இன்றே.

-வ. யோகானந்தசிவம்-


# மாணவர் கௌரவிப்பு விழா

– தொகுப்பு:- வல்வையூர் அப்பாண்ணா –

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றையவை"
-குறள்-

"மாணவர் கௌரவிப்பு விழா" அழைப்பிதழின் மேலே காணப்பட்ட நிகழ்வுக்குப் பொருத்தமான குறள் வாசகம் இது. ஆச்சிரம மண்டபம் எத்தனையோ விழாக்களைக் கண்டு வருகிறது. வெள்ளி வாராந்த நிகழ்வுகள், பிரதி மாதமும் இறுதி வெள்ளியில் வரும் "ஞானச்சுடர்" சமய சஞ்சிகையின் வெளியீட்டு விழா, வைகாசிப் பெருவிழா, எழுத்தாளர்களின் கௌரவிப்பு, வாசகர் கௌரவிப்பு, கந்தசஷ்டிகால மாலைநேர நிகழ்ச்சிகள், சந்நிதி வேலவனின் விழாக்கால நிகழ்ச்சிகள் எனும் வரிசையில் காலத்திற்குக் காலம் விழாக்கள் பலவற்றை யும் கண்டுவரும் ஆச்சிரம கேட்போர் கூடம் 17.02.2018 சனி அன்று காலைப் பொழுதில்- மாணவச் செல்வங்கள் நிரம்பி வழிந்த விழாவிற்காக வாழை தோரணங்களால் அலங்காரம் பெற்றுப் பொலிவுடன் திகழ்ந்தது.





2017இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேசிய நிலையிலும் மாகாண மட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்ற வடக்கு மாகாண மாணவ- மாணவியர் வெண்ணிற பாடசாலைச் சீருடையில் தங்கள் தங்கள் பாடசாலைகளைப் பிரதிபலிக்கும் கழுத்துப்பட்டிகள்- அடையாளச் சின்னங்கள் ஆகியவற்றுடன் வண்ணத்துப் பூச்சிகளாக வலம் வந்தனர்.


எப்போதும் ஆச்சிரம விழாக்களில் முன் நிகழ்வாக நடைபெறும், சந்நிதி வேலவனின் விசேட பூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து, கௌரவம் பெற வந்திருந்த மாணவ- மாணவியர், அவர்கள் பெற்றோர், மாணவர்களுடன் இணைந்து வந்திருந்த ஆசிரியர்கள்- அதிபர்கள், அழைக்கப்பட்டிருந்த விசேட விருந்தினர்கள், விழாக் காண விருப்புடன் வந்திருந்த பொதுமக்கள் எனப் பலரும் வேலவனின் வாசலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, ஆச்சிரம வளாகத்தின் முகப்பில் பூவரச மரத்தடியில் இடம்பெற்ற பூரண கும்ப வரவேற்பினைத் தொடர்ந்து விழா மண்டபத்தினுள் உட்புகுந்தனர்.





சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் உறுப்பினர் திரு கு. அருணகிரிநாதன் அவர்களின் முன்னுரையினைத் தொடர்ந்து கடவுள் வணக்கத்துடன் அன்றைய நிகழ்வுகள் ஆரம்பமாயின. திரு தங்கராசா அவர்கள் கண்களை மூடி- பக்திரசம் சொட்ட பஞ்சபுராணத்தினை ஓதி கடவுள் வணக்கத்தினை நிறைவு செய்தார். விழா மண்டப மேடைக்கு முன்பாக, மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விருதுகள் அனைத்தும் பெயரிடப்பட்டு வரிசையாக, நேர்த்தியாக அனைவரும் காணும் வகையில் அடுக்கப்பட்டிருந்தது. விழா மேடையில்- விசேட

விருந்தனர்களான இந்திய துணைத் தூதர் ஸ்ரீமான் ஆ. நடராஜன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு செ. உதயகுமார், சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் போஷகர்களான சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர், பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் ஆகியோர் அமர்ந்திருந்தனர். முதலில் பேரவைப் போஷகர்களது ஆசிஉரை இடம்பெற்றது.





யாழ்ப்பாண கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு அ. குமார வேல் அவர்கள் தலைமையுரை வழங்கினார். ஆச்சிரம நித்திய அன்னப் பணி முதற்கொண்டு சமய- சமூகப் பணிகள் பலவற்றையும் தொட்டுக் காட்டி நின்றது ஆசிரியரின் உரை. அன்றைய நிகழ்வு மாணவர்களுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வாகையால், பல்வேறு பல்கலை பீடங்களின் மாண வர்கள் அறுபதுக்கும் (60) அதிகமானோருக்கு மாதாந்தம் வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டுவரும் உதவித்தொகைபற்றி விசேடமாகக் குறிப் பிட்டு, தன்முன்னே அமர்ந்திருந்த மாணவர்களுக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தினார்.



விழாவில் பிரதம விருந்தினராக வந்திருந்த இந்திய துணைத் தூதர் திரு ஆ. நடராஜன் அவர்களின் உரை அடுத்து இடம் பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரமத்தினைச் செவ்வனே வழிநடாத்திவரும் ஆச்சிரம சுவாமிகள், சுவாமிகளின் பணிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவரும், பேரவையினர் ஆச்சிரம அனுதாபிகள், ஊழியர்கள் அனைவருக்கும் தமது உள்ளன்பான வணக்கத்தையும்- நன்றி களையும் முதற்கண் தெரிவித்துக்கொண்ட திரு ஆ. நடராஜன் அவர்கள், இன்றைய விழாவில் கதாநாயகர்களான மாணவர் களுக்கு வேண்டிய பல்வேறு பயனுள்ள கருத்துக்களையும் முன்மொழிந்தார்.

*உன்னிடம் தர்மம் அழிந்திடில், துயர்கள் உன்னைத் தாக்கும்.*

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

எனும் வள்ளுவனின் குறளை மேற்கோள்காட்டி அன்பு- பண்பு எனும் நல்லொழுக்க விழுமியங்களைப் பெற்றுக்கொள்ள "வாசிப்புப் பழக்கம்" இன்றியமையாதது என இடித்துரைத்தார்.

கல்விமான்கள்- எழுத்தாளர்கள் அறிவாற்றல் மிக்கவர்களின் பொருள் பொதிந்த கருத்துக்களைத் தாமும் புரிந்துகொண்டு, மற்றவர்களுக்கும் அப்புரிதலைப் பகிர்ந்துகொண்டு முன்னேறினால் "உச்சம் தொட்டு நிற்கலாம்" எனும் உயரிய கருத்தினை ஆழப் பதிவு செய்த திரு ஆ. நடராஜன் அவர்கள் தமது பேச்சின் இறுதியில் விருதுபெறும் எல்லா மாணவர்களையும் வாழ்க! வளர்க!! என வாழ்த்தி நிறைவு செய்தார்.



அடுத்து மேடையில் நடைபெற்ற செல்வி தி. ஜென்சிகா அவர்களின் தனி நடன நிகழ்ச்சி சபையோரை வெகுவாகக் கவர்ந்தது. மாநிறம்- வட்டமுகம்- அருமையான அபிநயம்- நிரம்பிய புன்சிரிப்பு இவைகளால் சபையோரைக் கவர்ந்திழுத்தார் செல்வி தி. ஜென்சிகா. மேடை நிகழ்வுகளின் ஊடே மாறுபட்ட உடை அலங்காரத்தில் மூன்று தடவைகள் இவரது தனி நடனத்தினைப் பார்த்து வியந்த சபையினர் நீண்ட கரகோஷத்தால் தமது ரசனையை வெளிப்படுத்தினர். செல்வி த. ஜென்சிகாவின் நடன நிகழ்ச்சி இதற்கு முன்னரும் சில தடவைகளில் இந்த மேடையில் நிகழ்ந்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் திரு பொ. ரவிச் சந்திரன் அவர்களின் சிறப்புரை அடுத்து இடம்பெற்றது. விருதுபெறக் காத்திருக்கும் இந்த மாணவர்கள் பல்கலை சென்று படித்துப் பட்டம்பெற்று, நல்ல சிந்தனையும்- நல்ல எண்ணங்களும் கொண்ட நற்பிரஜைகளாகவும், பிற்காலத்தில் சமூகத்திற்கு வேண்டிய தேவைகளை உணர்ந்த மனிதர்களாக- நறுமணம் வீசும் மலர்களாகத் திகழவேண்டும் எனத் தாம் வாழ்த்துவதாகவும் திரு பொ. ரவிச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டு அமர்ந்தார்.



அடுத்து இன்றைய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வினில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு செ. உதயகுமார் அவர்கள் சிறப்புரையாற்றுமாறு அழைக்கப்பட்டார். விருது பெற வந்துள்ள மாணவர்களோடும், வடமாநில பாடசாலைகளோடும் நேரடியாக சம்பந்தப்பட்டவரான வடமாநில கல்விப் பணிப்பாளரின் உரை கல்வி சார்ந்த பல்வேறு புள்ளி விபரங்களுடன் கூடியதாக அமைந்திருந்தது. 2016இல் தேசிய ரீதியில் 2ம் இடத்தில் இருந்த யாழ்ப் பாணக் கல்விச் செயற்பாடுகள், 2017இல் தேசிய ரீதியில் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளமைபற்றி பெருமைபடக்

குறிப்பிட்டார். இத்தகைய பெருமைக்கும்- சிறப்புக்கும் உரியவர்கள் மாணவர்களை வழிப்படுத்திய கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் என அனைவரையும் மனம்திறந்து பாராட்டினார் திரு செ. உதயகுமார் அவர்கள்.




பல்கலை அனுமதி கிட்டாத திறமையான மாணவர்கள், இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகளுக்கான புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டாதது குறித்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதுடன், எதிர்காலத்தில் ஆவது இந்த வாய்ப்பினை நம் மாணவர்கள் பயன்படுத்தி தமது வாழ்வை வளம்படுத்த வேண்டும் எனவும், பல்கலை புகும் மாணவர்களுள் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்கள் சந்நிதியான் ஆச்சிரம உதவியினையும் தயங்காது பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.



அடுத்து ஆசிரியர்கள்- அதிபர்கள் சார்பாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரெத்தினம் அவர்கள் உரையாற்றினார். கடந்த காலத்தில் ஏற்பட்ட எத்தனையோ அனர்த்தங்களுக்கும் மத்தியில் உங்கள் கல்விக்கு உறுதுணையாக இருந்து வரும் பெற்றோரது அபிலாசைகளை நிறைவேற்றி- எவ்வித பேதமுமில்லாமல்- பாகுபாடின்றிப் பணியாற்ற முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார் அதிபர் அவர்கள்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையற்று
முந்தி இருப்பச் செயல்

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்



மேற்குறித்த இரண்டு குறள்களையும் மேற்கோள் காட்டி, மாணவர்களின் கடமை யாது என்பதைத் தெளிவு படுத்தினார்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில் ஆச்சிரம செயற்பாடுகளை மனந்திறந்து பாராட்டிய ஆதீனம் அவர்கள், மாணவர்களின் முன்னே காத்திருக்கும் சமுதாயக் கடமைகள் பற்றியும் எடுத்துரைத்து நிறைவு செய்தார்.

நல்லை ஆதீனம் அவர்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து ஆச்சிரம சுவாமிகளின் மிகச் சுருக்கமான உரை இடம்பெற்றது.

கல்லூரி மாணவர்கட்கும், பல்கலை மாணவர்கட்கும் பயனுள்ள பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றபோதிலும், வட மாகாணதிற்குப் பெருமை தேடித்தந்த இந்த மாணவச் செல்வங்களுக்காக எதையாவது செய்யவேண்டும் என்கிற எண்ணம் வேலவனால் அடியேன் மனதில் விதைக்கப்பட, இன்று அந்நிகழ்வு கண்முன்னே



நிஜமாகியுள்ளது எனவும், இன்றைய இந்த விழாவின் வெற்றிக்குக் காரணமான பேரவையினருக்கு தமது உள மார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு தமது சிற்றுரையை ஆச்சிரம சுவாமிகள் நிறைவு செய்தார்.

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மாணவர்களின் கௌரவிப்புவேளை வந்தது. ஏற்கனவே விழா மேடையருகே வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த லெமினேற் செய்யப்பட்ட பாராட்டுப் பத்திரங்களும்- பதக்கங்களும்- காசாகப் பரிசுப் பொதிகளும் அனைத்து மாணவர்களுக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டது. பாராட்டுப் பத்திரத்தில் வேலும்- மயிலும் உடனான பாலமுருகன் ஒரு புறமும், மயில்வாகனம் சுவாமிகள் மறு புறமும் வீற்றிருக்க, அதன் கீழே சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் இலச்சினை ஒருபுறமும்- மறுபுறம் மாணவ/ மாணவியரின் புகைப்படமும் துலங்க, நடுவே மாணவ/ மாணவியர் பெயர், பாடசாலை, தேசிய/ மாவட்ட திறமைக் குறியீடுகளும் பத்திரத்தில் காணப்பட்டன.



மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணம்- 6, கிளிநொச்சி- 6, மன்னார்- 7, முல்லைத்தீவு- 6, வவுனியா- 6 எனவும், தேசிய ரீதியாக- 4 மாணவர்கள் உட்பட மொத்தம் 35 மாணவர்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். பிரதம விருந்தினரான இந்திய துணைத்தூதர் திரு ஆ. நடராஜன் அவர்கள், யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு செ. உதயகுமார் அவர்கள், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. ரவிச்சந்திரன் அவர்கள், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரெத்தினம் அவர்கள் மற்றும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த பல்வேறு தரப்பினரும் மாணவர்களுக்கான விருதுகளை வழங்கி சிறப்புச் செய்தனர்.

*உன்னிடம் எதையும் எதிர்பாராதவனையே நண்பனாக்கிக் கொள்.*

## தேசிய ரீதியாக முதல் பத்து இடங்களுக்கு உட்பட்ட மாணவர்கள் விபரம்

| மாணவர் பெயர் | பெறு பேறு | தேசிய நிலை | பிரிவு | பாடசாலை |
|---|---|---|---|---|
| J. PAUL JANCAN | 3A | 03 | கணிதம் | J/ சென் பற்றிக்ஸ் கல்லூரி |
| R. THARSIKA | 2A,B | 06 | உ.தொழி. | J/ வேம்படி பெண்கள் உயர்தரக் கல். |
| K. PUVESTIYA | 2A,B | 08 | உ.தொழி. | J/ வேம்படி பெண்கள் உயர்தரக் கல். |
| MAIKKAL FERASH | 2A,B | 10 | பொ.தொழி. | J/ ஹாட்லிக் கல்லூரி |

## வட மாகாணத்தில் உ/த பரீட்சையில் திறமைச் சித்திபெற்ற மாணவர்கள் விபரம்

| மாணவர் பெயர் | பெறு பேறு | தேசிய நிலை | பிரிவு | பாடசாலை |
|---|---|---|---|---|
| **யாழ்ப்பாணம்** | | | | |
| S. துவாரகன் | 3A | 01 | கணிதம் | யா/ ஹாட்லிக் கல்லூரி |
| M. வக்சலன் | 3A | 09 | உயி.விஞ் | யா/ யாழ் இந்துக் கல்லூரி |
| V. சாரங்கா | 3A | 26 | வர்த்தகம் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| B. தாட்ஷாயிணி | 3A | 51 | கலை | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| S. கமலேஸ்வரி | 3A | 03 | உயி.தொழி. | யா/ வேம்படி பெண்கள் உயர் கல்லூரி |
| R. நிலக்ஷன் | 2A.B | 08 | பொ.தொழி | யா/ யாழ் இந்துக் கல்லூரி |
| **கிளிநொச்சி** | | | | |
| J. கஜீபன் | 3A | 59 | உயி.விஞ் | கிளி/ கிளிநொச்சி மகா வித். |
| அ. தேனுஜன் | 3A | 98 | கணிதம் | கிளி/ கிளிநொச்சி மகா வித். |
| T. கீர்த்தனா | 3A | 110 | வர்த்தகம் | கிளி/ கிளிநொச்சி மகா வித். |
| ச. வில்லரசன் | 3A | 253 | கலை | கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| P. அனோஜன் | A,B,C | 45 | உயி.தொழி | கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரி |
| N. தமிழினியன் | 3B | 175 | பொ.தொழி | கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி |

*சரியாக நன்றி சொல்லக் கற்றுக்கொள், வாழ்வின் பேரின்பம் அதுவே.*

| மாணவர் பெயர் | பெறு பேறு | தேசிய நிலை | பிரிவு | பாடசாலை |
|---|---|---|---|---|
| **மன்னார்** | | | | |
| S. MARY NITHUSA SOSAI | 3A | 73 | உயி.விஞ் | மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி |
| D.J. TEMCIOUS FERNANDO | 2A,B | 296 | கணிதம் | மன்/ ST. ANNE'S மத்திய மகா.வித். |
| A. SESAR CROOS | 3A | 154 | வர்த்தகம் | மன்/ புனித சவேரியார் ஆண்கள் ம.ம.வி. |
| A. DELCIOUS | 3A | 541 | கலை | மன்/ புனித சவேரியார் ஆண்கள் ம.ம.வி. |
| A. SHARON | 3A | 09 | உயி.தொழி | மன்/ முருங்கன் ம.வித். |
| I.M. IKRAM | A,B,C | 92 | பொ.தொழி | மன்/ எருக்கலம்பிட்டி ம.வித். |
| J.M. ISKAN | 2A,B | 10 | உயி.தொழி | மன்/ எருக்கலம்பிட்டி ம.வித். |
| **முல்லைத்தீவு** | | | | |
| P. பிரணவி | 2A,B | 775 | உயி.விஞ் | முல்/ முள்ளியவளை வி.கல். |
| V. சாரங்கன் | 3A | 72 | கணிதம் | முல்/ யோகபுரம் மகா வித். |
| S. தர்மிகா | 3A | 542 | வர்த்தகம் | முல்/ புதுக்குடியிருப்பு மத். கல்லூரி |
| K. அறிவரசி | 3A | 231 | கலை | முல்/ உடையார்கட்டு மகா. வித். |
| T. கேசனா | A,2B | 29 | உயி.தொழி | முல்/ முள்ளியவளை வி.கல். |
| P. சஜீவன் | B,2C | 424 | பொ.தொழி | முல்/ முள்ளியவளை வி.கல். |
| **வவுனியா** | | | | |
| S. சுகிர்தன் | 3A | 69 | உயி.விஞ் | வவு/ புதுக்குளம் மகா. வித். |
| க. கீதாஞ்ஜன் | 2A,B | 614 | கணிதம் | வவு/ வவுனியா தமிழ் ம.ம.வித். |
| பா. கிரிஜா | 3A | 893 | வர்த்தகம் | வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி |
| S. கம்ஷத்வனி | 3A | 364 | கலை | வவு/ ரம்பைக்குளம் மகளிர் ம.வி. |
| M.R.AFRIDEEN | A,2B | 24 | உயி.தொழி | வவு/ முஸ்லீம் ம.வித். |
| R.J.K. மகேஷ் சதுரங்கா | A,2C | 245 | பொ.தொழி | வவு/ மடுகந்த ம.வி. |


*உனது கண்கள்தான் உனது உடலுக்கு விளக்குகள்.*

இதன் பின்னர் நடைபெற்ற ஒரு நிகழ்வு ஒருவரும் எதிர்பாராத வித்தியாசமான அம்சமாக அமைந்தது. இந்த 35 மாணவர்களும் கல்வி கற்ற பாடசாலைகளைக் கௌரவிக்கும் முகமாக அந்தந்தப் பாடசாலைக்குரிய பிரதிநிதிகளுக்கும் லெமினேட் செய்யப்பட்ட பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. விருதுபெற்ற மாணவர்களைத் தட்டிக்கொடுத்து- ஊக்கப்படுத்தி- பரீட்சைக்குத் தயார்ப்படுத்தி தேசிய/ மாவட்டமட்ட பெறுபேற்றினைப் பெற்று வட மாகாணத்தைப் பெருமைப்படுத்திய அதிபர்களையும்- ஆசிரியர்களையும் கௌரவப்படுத்த கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பத்தினை சந்நிதியான் ஆச்சிரமம் சரியாகப் பயன்படுத்தியமை பாராட்டுக்குரியதே.



விழா நிறைவில் நன்றியுரை வழங்கும் வேளை வந்தது. அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். விருதுபெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துரைகளையும் கூறி, புகை- மது இல்லாத புனிதமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தம்மை அர்ப்பணிக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் மாணவர்களுக்கு வழங்கினார்.

பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், வாழ்த்துரை- ஆசியுரை வழங்கியோர், அதிபர்கள்- ஆசிரியர்கள்- விழாவின் கதாநாயகர்களான மாணவர்கள், பெற்றோர்- பொதுமக்கள், நாட்டிய நர்த்தகி என வருகை தந்திருந்த அனைவருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சார்பில் உள்ளன்பான நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.



சந்நிதியான் ஆச்சிரம மைய மண்டபக் கருவறையில் நடைபெற்ற மதிய நேரப் பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து, அனைவரும் மதிய போசன உணவுக்காகப் பந்திகளில் அமர்ந்து கொண்டனர்.

**அன்பான மாணவச் செல்வங்களே!**

இன்றைய நிகழ்வு உங்களுக்கானது. உங்கள் வெற்றிக்கானது. நீங்கள் பல துறைகளிலும் முன்னேறி பல்வேறு பாதைகளில் பயணிக்க போகிறீர்கள். உங்கள் பயணம் எதிர்காலத்தில் நேரடியாக நம் மக்களுக்குப் பயன்படுமானால் நொந்துபோயுள்ள இதயங்களை உறுதியாக்க உதவும். இது ஒன்றையே சந்நிதியான் ஆச்சிரமம் முன்மொழிய முற்படுகிறது. எவ்வேளையும் ஆச்சிரமம் உங்களுக்குத் துணை நிற்கும்.


நன்றி.

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் வாசகர் போட்டியில் வெற்றியீட்டிய வாசகர்கள் சிலர்...





மாசிமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



பிறரிடம் நாம் கேட்காததால் அநேக விஷயங்களை வாழ்க்கையில் இழக்கிறோம்.



மாசிமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



*ஏழ்மையைப் பார்த்துச் சிரிக்கின்றவன் அதை தன் பக்கத்தில் இழுக்கிறான்.*

மாசிமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் 21ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வில் கவிமணி க. ஆனந்தராசா அவர்களின் பக்கவாத்திய சகித இசைச்சொற்பொழிவு நிகழ்வு.



*செல்வங்கள் கஷ்டப்பட்டு தேடப்படுகின்றன. கவலையோடு காக்கப்படுகின்றன.*

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

23.11.2016 புதன்கிழமை அதிகாலை 1 மணியளவில் காசி (வாரணாசி) நகரை அடைந்து எமக்குரிய விடுதியில் தங்கினோம். காலை 9 மணியளவில் எமது குழுவினரோடு கங்கைக் கரையை நோக்கிச் சென்றோம். இம்முறை எம்மோடு வந்த குழுவினரில் என்னைத் தவிர மற்ற அனைவரும் காசி யாத்திரைக்குப் புதியவர்கள். அவர்களை வழிப்படுத்தும் முகமாக அவர்களோடு இணைந்து செயலாற்றவேண்டி இருந்தது. அதற்கு முன்பாக காசியின் மகத்துவம் பற்றி நோக்குவோம்.

காசி நகரத்தின் வடக்கில் "வருணா" நதியும் தெற்கில் "அசி" நதியும் கங்கை நதியில் கலக்கின்றதால் காசி "வாரணாசி" என்று அழைக்கப்படுகிறது. ஆதிகாலத்தில் இருந்தே காசி இந்துக்களின் புகழ்பெற்ற ஸ்தலமாகும். பகவான் ஆதிசங்கரர் இன்றும் காசியில் இருந்து அநுக்கிரகம் புரிந்து வருகிறார் என்ற ஐதீகம் உண்டு. காசியில் இறந்தால் உடனே மோட்சம் கிட்டும் என்பதனால் தமது கடைசிக் காலத்தை அங்கேயே கழித்து இறந்துவிட விரும்புகிறார்கள் பல பேர்.



காசியின் நீளம் கங்கைக்கரை ஓரமாக 4 மைல்கள். இதில் 64 ஸ்நான படித்துறைகள் இருக்கின்றன. அவற்றினை ஒட்டி உயர்ந்த மாளிகைகள் இருக்கின்றன. நடுவே ஆலயங்களும் உண்டு.

கங்கையில் நீராடி பிதிர்க் காரியங்களைச் செய்யவரும் தென்னிந்தியர்களுக்கு உதவுமுகமாக பல தென்னிந்தியப் புரோகிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள்மூலம் பிதிர்க்கடன் செய்வோர் கங்கையில் நீராடி தம் நல்வாழ்வுக்காக தானமும் வழங்குகிறார்கள்.

தினமும் மாலை 6.00 மணிக்கும் 8.00 மணிக்கும் இடையே நடைபெறும் கங்கா பூசையானது அதி விஷேடமானது. காசி மகாராஜாவின் வழித்தோன்றல்கள் இந்தப் பூசையில் தினமும் கலந்து கொள்கின்றனர். தாரக மந்திரம்போல் ஐந்து விடயங்களை அனைவரும் கூறிக்கொள்கிறார்கள்.

காகம் கரையாது,
கருடன் பறக்காது,
மாடு முட்டாது,
பூ மணக்காது,
சவம் மணக்காது

கீழே சிந்தியிருக்கும் தீன்பண்டங்களை எடுக்கக் காத்திருக்கும் காகங்கள் கரைந்ததை நாம் காணவேயில்லை. கோயில்களுக்குச் செல்லும் குறுகலான வீதிகளில் சனக்கூட்டத்தின் மத்தியில் பெரிய பெரிய மாடுகள்கூட ஒருவரையும் முட்டுவதில்லை.

கங்கா ஸ்நானம் செய்ய வருபவர்களின் வசதி கருதி கங்கையின் மறுகரைக்கு செல்லக்கூடியதாக படகுகள் வரிசையாக கங்கைக் கரையோரம் அந்தந்தப் படகு ஓட்டுநர் களுடன் காணப்படுகிறது. எமது குழுவினரும் இரு படகுகளில் போவதற்குரிய நிதியினைப் பேரம்பேசி அப்படகுகளில் மறுகரையை அடைந்து கங்கா ஸ்நானம் செய்து கங்கையில் நின்றபடி காசி விஸ்வநாதரை மனதினால் வணங்கி ஸ்நானத்தை முடித்து கங்கைக்



கரையோரம் அமைந்த 64 படித்துறைகளைப் பார்வையிடும் முகமாக படகில் புறப்பட்டோம். நீரின் அழுத்தத்தால் ஒருபாதி சரிந்த நிலையில் நீரில் அமிழ்ந்து இன்றும் பூசை வழிபாடுகளுடன் கூடிய ஆலயம் ஒன்றினையும் கண்டு வழிபட்டபின் அரிச்சந்திரனோடு தொடர்புபட்ட பகுதிகளையும் பார்வையிட்டு இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போன்று அரிச்சந்திரன் காவல் காத்த சுடலைக்கு சமீபமாகப் படகில் சென்றபோது அதன் மகத்து வத்தை உணரக்கூடியதாக இருந்தது.

அச்சுடலையில் இடம்பெற்ற செயலை நாம் வேறு எங்கும் காணமுடியாது. பல மனித உடல்கள் தீயுடன் சங்கமிக்கும் காட்சியும் மேலும் பல இறந்தவர்களை தீ மூட்டுவதற்கு காத்திருப்போருமாக இம் மயானம் காணப்படுகின்றது. இதனைப் பார்த்து எமது குழுவினர் அதிசயமுற்றார்கள். இதில் இன்னொன்றையும் நாம் தெரிந்து கொண்டோம். இத்தனை உடல்கள் தீயில் சங்கமித்தபொழுதும் “சவம் மணப்பதில்லை” என்ற வாக்குக்கு ஆதாரமாய் எவ்வித மணமும் இருக்கவில்லை. அதேபோன்று காசியின் மறுபகுதியில் உள்ள மணிகண்டன் எனும் பகுதியில் அமைந்த மயானத்திலும் காணக்கூடியதாக இருந்தது.


கங்கைப் படித்துறையோரம் சங்கர மடம், குமரகுருபரர் மடம், திருப்பனந்தாள் மடம் என தென் இந்திய யாத்திரிகர்களுக்கு பேருதவி புரியும் மடங்களும் உண்டு. அதனை ஒட்டி சிறுசிறு ஆலயங்களையும் அமைத்து வழிபாடும் இடம்பெறுகிறது. கூடுதலாக தென் இந்தியர்கள் தங்கும் இடங்களாக இவை சிறந்து விளங்குகின்றன. இந்த இடங்களையும் படகில் இருந்தபடி பார்வையிட்டபின் நாம் தங்கியிருந்த விடுதியை அடைந்து மதிய உணவை முடித்து எமது உடல் அசதியைப் போக்கிக் கொண்டோம்.

ஆனாலும் எம்முடன் இணைந்து வந்திருந்த கஜன் அகோரிகளைப் பார்க்க வேண்டும். அவர்களது இடத்துக்கு எப்படியும் போகவேண்டும் என்ற தனது எண்ணத்தை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தார். நாமும் அவ்விடயம் சம்பந்தமாக எமது வழிகாட்டியாகவும் இந்தி மொழி பேசக்கூடியவராக இருந்த அன்பர்மூலம் அகோரிகள் இருக்கும் இடத்தை எமக்குத் தெரியப் படுத்தும்படி கோரியிருந்தோம். ஆனாலும்.....

(தொடரும்...

**வருடாவருடம் இடம்பெற்றுவரும் தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் 21ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் பக்திபூர்வமாக நடைபெற்றது.**

**சிறப்பு நிகழ்வாக “குருவருளும் திருவருளும்” என்னும் தலைப்பில் கவிமணி க. ஆனந்தராசா அவர்கள் இசைச் சொற்பொழிவு ஆற்றினார். அத்துடன் குருபூசை நிகழ்வானது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி 63 நாயன் மார்கள் குருபூசையுடன் நிறைவு பெற்றது.**



# ஞானச்சுடர் 2018 பங்குனி மலர்

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

06.04.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "இன்பமே சூழ்க"

வழங்குபவர் :- செல்வன் S. சிவஸ்கந்தஸ்ரீ அவர்கள்

(சட்டத்துறை மாணவன், யாழ் பல்கலைக்கழகம்)

---

13.04.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

20.04.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

27.04.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்

(இளை. கிராம சேவகர்)

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

(இளை. அதிபர்)

244ஆவது மலர்

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

